திரு. வி. க.

36

மு. வரதராசன்

திரு. வி. க.

Dr. T. P. M. LIBRARY
MADURAI-625 021.
MADURAI KAMARAJ UNIVERSITY

டாக்டர் மு. வரதராசன்
எம்.ஏ., எம்.ஓ.எல்., பி.எச்.டி., டி.லிட்.,

விற்பனை உரிமை:
பாரி நிலையம்
184, பிராட்வே-சென்னை -600108
தொலைபேசி எண்: 25270795

முதற் பதிப்பு : 1947
மறுபதிப்பு : 2003

தாயக வெளியீடு 263276

நூல் பற்றிய விவரங்கள்

நூற்பெயர்	:	திரு. வி. க.
ஆசிரியர்	:	மு. வரதராசன்
தாள்	:	வெள்ளைத்தாள் 10.5கி.கி.
நூலின் அளவு	:	18.5 × 12.5 செ.மீ
பக்கங்கள்	:	144
விற்பனை உரிமை	:	பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை–108. Ph: 25270795
பொருள்	:	வரலாறு–ஆய்வு
கணினி அச்சு	:	சிவா கிராபிக்ஸ், Ph: 23610810
அச்சிட்டோர்	:	பாரி ஆப்செட் 7B, கொடிமரத்து தெரு, சென்னை – 13.

விலை : ரூ. **35.00**

டாக்டர் மு.வ. வின் பெருவாழ்வு

சு. திருநாவுக்கரசு
எம்,ஏ.,எம்.காம்.,எம்.எட்.,
திரு, வி. க. மேனிலைப் பள்ளி
செனாய்நகர், சென்னை—600 030

இருபதாம் நூற்றாண்டின் தமிழக வரலாற்றிலும், தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு.வரதராசனார் அவர்களின் சீரிய தமிழ்த் தொண்டு முதன்மையான இடம் பெறுவதாகும். அவர் ஈடு இணையற்ற பெரும் எழுத்தாளராக விளங்கினார். உலகத் தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்த முதல் தமிழராக அவர் திகழ்ந்தார். 'மு.வ' என்ற செல்லப் பெயர் ஒலிக்காத தமிழ் இல்லங்களும், நல் உள்ளங்களும் இல்லை எனலாம்.

குடும்ப வாழ்வு

அவர், அருமை அன்னை அம்மாக்கண்ணம்மாளுக்கும் அறிவில் சிறந்த தந்தை முனுசாமி அவர்களுக்கும் செல்லப் பிள்ளையாக **25.4.1912** ஆம் ஆண்டு வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரிலே பிறந்தார். முதலில் அவருக்கு வழங்கிய பெயர் **திருவேங்கடம்** ஆகும். 'தாத்தாவின் பெயரை இடுதல்' என்னும் குடும்ப மரபுப்படி வழங்கிய பெயரே **'வரதராசன்'** என்பதாகும்.

அவர் 1935ஆம் ஆண்டு தம் மாமன் மகளான ராதா அம்மையாரை மணந்தார். அவருக்கு ஆண் மக்கள் மூவர் உள்ளனர். அவர்கள் முறையே திருநாவுக்கரசு, நம்பி, பாரி ஆகியோர் ஆவர். அம் மூவரும் மருத்துவத் துறையில் மாமணிகளாகத் திகழ்கின்றனர்.

கல்வி

அவர் வேலத்திலும், வாலாசாவிலும் தொடக்கக் கல்வியைக் கற்றார். உயர்நிலைப் பள்ளிப் படிப்பை அவர் திருப்பத்தூரில் பயின்றார். அவர் முருகய்ய முதலியாரிடம் தமிழ் கற்றுப் புலவர் முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர் அவர் 1935ஆம் ஆண்டு தமிழ்ப்புலவர் தேர்வு எழுதிச் சென்னை மாநிலத்திலேயே முதல்வராகத் தேர்ந்து திருப்பனந்தாள் பரிசு (ரூ. 1,000) பெற்றார். அவர் 1939-இல் பி.ஓ.எல். பட்டமும் 1944 இல் எம்.ஓ.எல். பட்டமும் பெற்றார். 1948-இல் சென்னைப் பல்கலைக் கழகத்திலேயே முதன் முதலாகத் தமிழில் டாக்டர் பட்டம் பெற்றவர் அவரே. 1972 ஆம் ஆண்டில் அமெரிக்காவி லுள்ள ஊஸ்டர் கல்லூரி அவருக்கு இலக்கியப் பேரறிஞர் (டி. லிட்) என்ற சிறப்புப் பட்டத்தை நல்கிப் பெருமைப்படுத்தியது. அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றில் 'டி. லிட்' என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் மு.வ. அவர்களே ஆவார்.

தொழில்

அவர் 1928 இல் முதன் முதல் தாலுகா அலுவலகத்தில் எழுத்தராகப் பணிபுரிந்தார். 1935ஆம் ஆண்டு முதல் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். 1939 முதல் 1944ஆம் ஆண்டு வரை டாக்டர் அ.லட்சுமணசாமி முதலியார் அவர்களின் நல்லுதவியுடன் தமிழ் விரிவுரையாளர் ஆகப்

பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றினார். **1945**ஆம் ஆண்டு அக்கல்லூரிலேயே **தமிழ்த் துறைத் தலைவர்** ஆனார். இடையே ஓராண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துணைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். அறிஞர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் மறைவுக்குப் பிறகு **1961** முதல் **1971** வரை சென்னைப் பல்கலைக் கழகத்தில் **தமிழ்த்துறைத் தலைவர்** ஆகப் பணியாற்றி னார். **1971** முதல் **1974** ஆம் ஆண்டு வரை மதுரைப் பல் கலைக்கழகத்தின் புகழ்மிக்க இணையற்ற **துணைவேந்தர்** ஆகப் பணிபுரிந்தார்.

அவர் பங்கேற்ற துறைகள்

அவர் பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். அவர் சென்னை, திருவேங்கடவன், அண்ணாமலை ஆகிய பல்கலைக் கழகங்களின் பேரவை(செனட்) அங்கத்தினராக இருந்தார். மேலும் அவர் கேரளம், மைசூர், உஸ்மானியா, பெங்களூர், ஆந்திரா, டில்லி, கேம்பிரிட்ஜ், மதுரை முதலிய பல்கலைக் கழகங்களின் பாடத்திட்டக் குழுவில் இருந்தார். அவர் இலங்கை, மலாயா, காசி, உத்கல் முதலிய பல்கலைக் கழகங்களோடு தொடர்பு கொண்டிருந்தார்.

அவர் புதுடில்லியில் உள்ள சாகித்திய அகாடெமி, பாரதீய ஞானபீடம், தேசியப் புத்தகக் குழு, இந்திய மொழிக்குழு, சென்னைப் பல்கலைக் கழகம் தயாரித்த ஆங்கிலம்-தமிழ் அகராதிக் குழு, நாட்டுப்புறப் பாடல்களும், நாட்டுப்புற நடனங்களும் பற்றிய குழு முதலியவற்றிலும் அங்கம் வகித்தார்.

அவர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவிலும், ஆந்திரப் பிரதேச அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழுவிலும், மத்திய அரசுப் பணியாளர் தேர்வு

ஆணைக்குழுவிலும், மகாராஷ்டிர சமிதி மண்டலத்திலும் பங்கு கொண்டிருந்தார்.

தமிழ்நாடு புத்தக வெளியீட்டுக்கழகம், ஆட்சி மொழிக் குழு, ஆட்சிமொழிச் சட்டக்குழு, தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழ்க் கலைக்களஞ்சியம், தமிழகப் புலவர் குழு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் முதலியவற்றில் பங்கு கொண்டு சிறந்த தொண்டாற்றினார்.

பன்மொழிப் புலமை

அவர் தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலிய மொழிகளைக் கற்றுப் பன் மொழிப் புலவராகத் திகழ்ந்தார்.

உலகம் சுற்றிய முதல் தமிழ்ப் பேராசிரியர்

அவர் ரஷ்யா, மலேசியா, சிங்கப்பூர், பாரிஸ், இலங்கை, இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான், ஜெர்மனி,கிரேக்கம், எகிப்து, அமெரிக்கா முதலிய உலக நாடுகளை எல்லாம் சுற்றிப் பார்த்த முதல் தமிழ்ப் பேராசிரியராக விளங்கினார்.

தோற்றப் பொலிவு

எழில் மிக்க எடுப்பான தோற்றம், புன்னகை பூத்துப் பொலிவோடு விளங்கும் முகம், அறிவு முதிர்ச்சிக்கு அடையாளமான அகன்ற நெற்றி, அன்பும் அறிவும் சுழல் விளக்குப் போல் சுடர்விட்டுப் பொங்கும் கண்கள், எடுப்பான கூரிய மூக்கு, உடல் நலம் காட்டும் அழகான பற்கள், நீண்ட மெல்லிய கைகள், பெண்மையின் மென்மை ஓடும் உடல், எண்ணங்களை எல்லாம் எழுத்தாக்கிய பரந்த, பண்பட்ட நெஞ்சம் உடையவராக அவர் விளங்கினார்.

தனிப் பண்புகள்

அவர் மனத்தால் கூடப் பிறர்க்குத் தீங்கு எண்ணாமல் சான்றோராக வாழ்ந்தார்.

ஒன்றனை இழந்தாலோ அல்லது தொலைத்து விட்டாலோ அதற்காக அவர் கவலைப்பட்டதில்லை. காரணம் அதனால் பயன் இல்லை என்பது அவரது கருத்து. வீணாக வருந்தும் நேரத்தை வேறு ஆக்க வேலைக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதே அவரது கொள்கை.

அவர் கடமையை ஒரு போதும் மறந்ததில்லை; செய்வன திருந்தச் செய்தார்; காலத்தைப் பொன் போல் போற்றினார்.

உலகக் குடிமகனின் பெருவாழ்வு

அவர் எண்ணத்தால், எழுத்தால், செயலால், சொல்லால், பலருக்கு 'நல்வாழ்வு' தந்து உலகக் குடிமக்னாக உயர்ந்தார். சுருங்கக் கூறின், அவர்.

அன்பில்	நெகிழ்வு
அறிவில்	தெளிவு
ஆக்கத்தில்	ஊக்கம்
வாழ்வில்	எளிமை
உண்மையில்	உயிர்ப்பு
உழைப்பில்	ஓய்வின்மை
கொள்கையில்	உறுதி
இயற்கையில்	ஈடுபாடு
துன்பத்தில்	துணைநிலை
புலமையில்	ஆழம்
ஆராய்ச்சியில்	நடுநிலை
இல்லத்தில்	துறவு

பதவியில்	பகட்டு இன்மை
புரட்சியில்	முதன்மை
பண்பில்	சால்பு
அறத்தில்	நம்பிக்கை
புகழில்	மயங்கா நிலை
செல்வத்தில்	செருக்கின்மை
விளம்பரத்தில்	விருப்பின்மை
தமிழில்	தமிழ் நெஞ்சம்

கொண்டவர் ஆவார். நம் நெஞ்சம் மறவாத தமிழ் நெஞ்சத்தின் பெருவாழ்வு இதுவே.

பெருமகன் போற்றிய பெருமக்கள்

காந்தியடிகள், திரு.வி.க., தாயுமானவர், இராம தீர்த்தர், இராமலிங்க சுவாமிகள், இராமகிருஷ்ணர், மாணிக்க வாசகர், நம்மாழ்வார், கவிஞர் தாகூர், காண்டேகர், பெர்னார்ட்ஷா சோமர்செட் மாம் முதலியோர் அவர் விரும்பிப் போற்றிய பெரு மக்கள் ஆவர்.

உயிருள்ள படைப்புகள்

தமிழ்த்தாயின் தலைமகனாக விளங்கிய அவர் 62 வயதில் 85 நூல்கள் எழுதி இணையில்லாப் புகழ்பெற்றார்.

பல்வகையான முதல் தரமான நூல்களைத் தந்த தமிழ்ச் சுரங்கமாக அவர் விளங்கினார்.

1. நாவல்... ...13

1. செந்தாமரை
2. கள்ளோ? காவியமோ?
3. பாவை
4. அந்த நாள்
5. மலர்விழி

6. பெற்ற மனம்
7. அல்லி
8. கரித்துண்டு
9. கயமை
10. நெஞ்சில் ஒரு முள்
11. அகல் விளக்கு
12. மண்குடிசை
13. வாடாமலர் 13

2. சிறுகதை... ...2

1. விடுதலையா?
2. குறட்டை ஒலி 2

3.சிந்தனைக் கதை... ...2

1. கி.பி.2000
2. பழியும் பாவமும் 2

4. நாடகம்... ...6

1. பச்சையப்பர்
2. மனச்சான்று
3. இளங்கோ
4. டாக்டர் அல்லி
5. மூன்று நாடகங்கள்
6. காதல் எங்கே? 6

5. கட்டுரை நூல்... ...11

1. அறமும் அரசியலும்
2. அரசியல் அலைகள்
3. குருவிப் போர்
4. பெண்மை வாழ்க
5. குழந்தை

23

23

6. கல்வி
7. மொழிப்பற்று
8. நாட்டுப் பற்று
9. உலகப் பேரேடு
10. மண்ணின் மதிப்பு
11. நல்வாழ்வு 11

6. இலக்கியம்.... 24

1. தமிழ் நெஞ்சம்
2. மணல் வீடு
3. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்
4. திருக்குறள் தெளிவுரை
5. ஓவச் செய்தி
6. கண்ணகி
7. மாதவி
8. முல்லைத் திணை
9. நெடுந்தொகை விருந்து
10. குறுந்தொகை விருந்து
11. நற்றிணை விருந்து
12. இலக்கிய ஆராய்ச்சி
13. நற்றிணைச் செல்வம்
14. குறுந்தொகைச் செல்வம்
15. நெடுந்தொகைச் செல்வம்
16. நடைவண்டி
17. கொங்குதேர் வாழ்க்கை
18. புலவர் கண்ணீர்
19. இலக்கியத்திறன்
20. இலக்கிய மரபு
21. இளங்கோ அடிகள்

34

34

22. இலக்கியக் காட்சிகள்
23. சங்க இலக்கியத்தில் இயற்கை 24

7. சிறுவர் இலக்கியம்...4
1. குழந்தைப் பாட்டுகள் (Nursery Rhyms)
2. இளைஞர்க்கேற்ற இனிய கதைகள்
3. படியாதவர் படும்பாடு (The woes of the illiterate)
4. கண்ணுடைய வாழ்வு 4

8. கடித இலக்கியம்...4
1. அன்னைக்கு
2. தம்பிக்கு
3. தங்கைக்கு
4. நண்பர்க்கு 4

9. பயண இலக்கியம்...1 (Travelogue)
1. யான் கண்ட இலங்கை 1

10. இலக்கிய வரலாறு...1
1. தமிழ் இலக்கிய வரலாறு 1

11. மொழி இயல்...6
1. மொழியின் கதை
2. எழுத்தின் கதை
3. சொல்லின் கதை
4. மொழி நூல்
5. மொழி வரலாறு
6. மொழியியற் கட்டுரைகள் 6

12. வாழ்க்கை வரலாறு...4 (Biography)
1. அறிஞர் பெர்னார்ட்ஷா
2. காந்தியண்ணல்

74

74

3. கவிஞர் தாகூர்
4. திரு.வி.க. 4

13. ஆங்கில நூல்...2

1. The Treatment of Nature in Sangam Literature (சங்க இலக்கியத்தில் இயற்கை)
2. Ilango Adigal 2

14. சிறுவர் இலக்கணம்...3 3

15. மொழிபெயர்ப்பு நூல்...2 2

85

பரிசும் பாராட்டும் பெற்ற நூல்கள்:

1. அகல் விளக்கு	இந்திய ஜனாதிபதியின் சாகித்திய அகாடெமி பரிசினைப் பெற்றது.
2. கள்ளோ? காவியமோ? 3. அரசியல் அலைகள் 4. மொழியியற் கட்டுரைகள்	இவை மூன்றும் சென்னை அரசாங்கத்தின் பரிசுகளைப் பெற்றன.
5. திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் 6. மொழி நூல் 7. கள்ளோ? காவியமோ? 8. விடுதலையா? 9. அரசியல் அலைகள் 10. ஓவச் செய்தி	இவை ஆறும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பத்திரங்களைப் பெற்றன

டாக்டர் மு.வ. அவர்கள் தலைசிறந்த 13 நாவல்களை எழுதித் தமிழகத்திற்குத் தந்தார். அவர் எழுதிய முதல்

நாவல் **செந்தாமரை** ஆகும். **கள்ளோ? காவியமோ?** அவர் எழுதிய இரண்டாம் நாவல் ஆகும். இந்நாவலே அவருக்கு **மிக்க புகழினைத் தேடித் தந்தது.** இந்நாவலை அவர் பெரிதும் விரும்பினார்.

வாழ்க்கையில் பிணக்கு ஏற்படுவது இயற்கை. அப்போது அறிவு இருந்து பயன் இல்லை. அன்பு இருந்தால் நன்மை உண்டு. இதுவே இந்நாவல் கூறும் மிகப் பெரிய உண்மையாகும். இந்நாவல் பலர்க்கு நல்வாழ்வு அளித்துள்ளது.

'தமிழ் இலக்கியத் துறையில் தலையாய தொண்டாற்றியவர்' என்று அவருக்குச் சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு விழாவின்போது சென்னை அரசாங்கம் பாராட்டி நடராசர் உருவம் பொறித்த ஒரு செப்புக் கேடயத்தினை *15.8.1957* அன்று பரிசளித்தது.

பிற மொழிகளில் அவரது நூல்கள்

அவரது உயிரோட்டமுள்ள புகழ்மிக்க நூல்கள் தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, சிங்களம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

1. **பெற்ற மனம்**
   (A Mother's Heart)
2. **அகல் விளக்கு**
   (Agal Vilakku)
3. **விடுதலையா?**
   (What is Liberation?)
4. **மனச்சான்று**
   (Voice of Conscience)
5. **கயமை**
   (Kayamai)

6. **குறட்டை ஒலி**
   (The Sound of the Snore)
7. **காதல் எங்கே?**
   (Where is Love?)-**ஆங்கில மொழி**
8. **அகல் விளக்கு, குறட்டை ஒலி–ரஷ்ய மொழி**
9. **கள்ளோ? காவியமோ?–சிங்கள மொழி**
10. **கரித்துண்டு–இந்தி மொழி**
11. **சிறுகதைகள் சில, மராத்தி, மலையாளம் முதலிய இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.**
12. **இளங்கோவடிகள்–தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.**

மறைவு

உயிரோவியங்கள் பல படைத்துப் பிறர் உள்ளங்களைக் கவர்ந்த அவரது உடல் **10.10.1974**ஆம் ஆண்டு சென்னையில் மறைந்தது.

இளங்கோவடிகள் போன்ற புலவர்களின் உடல் மறைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால், அவர்களுடைய எழுத்துகள் உள்ள வரையில் இந்த உலகில் அவர்களுக்குப் புகழார்ந்த வாழ்வு உண்டு.

கலைகளுள் எழுத்துக் கலைக்குத் தனி ஆற்றல் உண்டு. காலம் கடந்து வாழும் பண்பு எழுத்துக் கலைக்கே மிகுதியாகும். எனவே, டாக்டர் **மு.வ.** அவர்களின் **புகழ் என்றுமுள தென் தமிழ் போல்** விளங்கும். அவரது இன்பத் தமிழ் நூல்களின் வாயிலாகச் செந்தமிழ்த் தேனைப் பருகும் வாய்ப்பு எங்கும் எவர்க்கும் என்றும் உண்டு. அவை அவரது புகழ் விளக்குகளாய் மங்கா ஒளி வீசி என்றென்றும் விளங்கும்.

முன்னுரை

இந்நூற்றாண்டு கண்ட சான்றோர்களில் திரு.வி.க. ஒருவர். செல்வாக்கு குறைந்த தமிழகத்தில் பிறந்து தமிழரிடையே தமிழ் வாயிலாகத் தொண்டு செய்தமை யால் அவர் புகழ் வெளியே பரவவில்லை. ஆயினும் அவர் தொண்டுகளை அறிந்தவர்களும், அவர் வாழ்வோடு நெருங்கியவர்களும், அவருடைய பேச்சுகளைக் கேட்டவர்களும், அவர் தம் சான்றாண்மையை மறத்தல் இயலாது. இனி அவருடைய எழுத்துக்களைக் கற்பவர்களும் அவர் தம் பெருந்தகைமையை மறுத்தல் இயலாது.

இந்நூலில் உள்ள கட்டுரைகளில் சில அவர் வாழ்ந்த காலத்திலேயே எழுதி வெளியானவை. சில அவர் காலத்திற்குப் பிறகு அவ்வப்போது சில இதழ்களில் வெளியானவை. அவற்றைத் திரட்டி இந்நூல் வடிவில் வெளியிடுவது அவர் தம் வாழ்வின் தூய்மையையும், உயர்வையும் அறிய விழைவார்க்குத் துணை செய்யும் என்று நம்புகிறேன்.

மு.வ.

Dr. T. P. M. LIBRARY
MADURAI-625 021.
MADURAI KAMARAJ UNIVERSITY

பொருளடக்கம்

		பக்கம்
1.	தமிழகத் தந்தை	17
2.	வாழ்க்கை	23
3.	வளர்ச்சி	30
4.	தொண்டு	53
5.	விடுதலைப் போர்	56
6.	அரசியல்	62
7.	நினைவாற்றல்	70
8.	தமிழ்நடை	77
9.	செய்யுள் தொண்டு	85
10.	தமக்கென வாழாமை	89
11.	பெண்ணின் பெருமை	95
12.	அஞ்சா நெஞ்சம்	105
13.	கருத்தின் ஒளி	112
14.	வானம்பாடி	117
15.	கடவுள் நெறி	128

Dr. T. P. M. LIBRARY
MADURAI-625 021.
MADURAI KAMARAJ UNIVERSITY

1. தமிழகத் தந்தை

"நீங்கள் இப்போது திரு. நாராயணசாமிக்குச் சொல்லி வரும் புதிய நூல் என்ன? என்று கேட்டேன் (எழுதிவரும் நூல் என்ன என்று கேட்பதற்கு வாயில்லாமல் வருந் தினேன்)

மரணம் என்றார் அவர்.

உள்ளம் நொந்து வருந்தினேன். இளமை விருந்து, பெண்ணின் பெருமை, தமிழ்த் தென்றல் என்ற பெயர் களைப் பலமுறை கேட்டு மகிழ்ந்த என் செவிகள், முதுமை உளறல் என்று ஒரு நூலின் பெயரைக் கேள்வியுற்ற போதே நொந்தன. இப்போது அவர் தரும் நூல் என்ன என்று அறிய விழையும்போது மரணம் என்று ஒரு நூலின் பெயரை யான் எதிர்பார்க்கவில்லை...

தமிழ் நாட்டின் வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு சிறப்பிடம் பெறத்தக்க குறிப்புகளை உடையது. நல்ல குறிப்புகளும் பல உண்டு; தீய குறிப்புகளும் சில உண்டு. தீய மாசுகளும் சில உண்டு. தமிழ்நாடு உறங்கிக்கிடந்த பல நூற்றாண்டுகளுக்குப் பின் மொழியுணர்ச்சியும் கலை யுணர்ச்சியும் கொண்டு வீறு பெற்று எழும் நூற்றாண்டு இது. அரசியலிலும் தமிழரைத் தமிழரே ஆளவேண்டும் என்ற நல்லாண்மை ஒவ்வொருவர் உள்ளத்திலும் மீதுர்ந்து வரும் நூற்றாண்டு இது. இக்காரணத்தால் தமிழ்நாடு பெற்ற பயன்கள் பல.

இவ்வாறு பயன்பெறும் வகையில் தமிழ்நாட்டை எழுத்தாலும் பேச்சாலும் பிறதொண்டுகளாலும் வளர்த்த பெருமை ஒரு சிலர்க்கே உரியது. எழுத்து, பேச்சு முதலிய பல திறத் தொண்டுகளாலும் நெடுங்காலம் தொடர்ந்து தமிழ்நாட்டை வளர்த்த தனிப் பெருமைக்கு உரியவர் ஒருவர்; அவர் திரு.வி.க.

திரு.வி.க. அவர்களின் கை ஒரு காலத்தில் இளமை விருந்து எழுதியது; பெண்ணின் பெருமை தீட்டியது; காந்தியடிகளும் மனித வாழ்க்கையும் பற்றி விளக்கியது. முடியும் காதலும், சீர்திருத்தமும் பற்றி வரைந்தது முருகன் அருள் வேட்டல் முதல் கிறிஸ்து அருள் வேட்டல் வரையில் பல அரிய பாடல்களை இயற்றியது. அவர் மேடையில் பேசிய பேச்சுக்களும் இவ்வாறே பல திறத்தன. தமிழிலக்கிய மேடைகள்; சீர்திருத்தக் கூட்டங்கள், அரசியல் மாநாடுகள், தொழிலாளர் சங்கங்கள், இளைஞர் மன்றங்கள், சமயக் கழகங்கள் முதலிய பலவும் அவருடைய செந்தமிழ்ச் சொற்பொழிவுகளால் சிறப்புப் பெற்றன. தனி மனிதர் பற்பலர் அவருடைய நல்லெண்ணத்தாலும் நல்லுதவியாலும் திருந்தினர்; உயர்ந்தனர். குடும்பங்கள் மிகப் பல அவருடைய அன்புரைகளாலும் அறிவுரைகளாலும் நல்வாழ்வு பெற்று நலிவு நீங்கின. ஆகவே தொண்டு என்பது தனி மனிதர் முதல் நாடு வரையில் எவ்வெவ்வளவு பரந்து அமைய முடியுமோ அவ்வவ்வளவும் பரப்பாக அமைந்த முழு வாழ்வு திரு.வி.க.வின் பொது வாழ்வு.

அவர்தம் தனி வாழ்க்கை திருக்குறளின் அறத்துப் பாலுக்கு ஒரு விளக்கம் எனலாம். அவ்வாழ்க்கையில் பாயிரம் உண்டு; இல்லறம் உண்டு. துறவறம் உண்டு; ஊழ்வலியும் உண்டு. திரு.வி.க. இல்லறத்தின் சிறப்பை உணர்ந்தவர்; துறவறத்தின் தூய்மையைப் பெற்றவர் அன்பு அருளாய்க் கனிந்த வாழ்வு அவர்தம் வாழ்வு எனச் சுருங்கக் கூறலாம்.

அவரிடம் ஒன்று இரண்டு என எண்ணி நிற்கக் கூடிய சிறு குறைகள் இருக்கலாம். ஆயின், குணம் என்னும் குன்றேறி நின்றார் என்று போற்றத் தக்கவர் அவர். பகைவரிடத்தும் பெருந்தன்மையுடன் பழகும் உள்ளம் படைத்தவர்; மறந்தும் பிறன் கேடு சூழாத மாண்பு உடையவர்; ஒழுக்கத்தை உயிரினும் சிறப்பாகப் போற்றும் விழுமியோர்.

அவர் வாழ்க்கையில் சிறுசிறு தோல்விகள் சில உண்டு எனக் கூறலாம். ஆயின், அவர் பெற்ற பெரு வெற்றிகள் பல. இலக்கியத்தமிழை வாழ்வுக்கு உரிய தமிழ் ஆக்கினார். தமிழ் மொழியில் சிறந்த முறையில் செய்தித்தாளும் வார இதழும் நடத்திக் காட்டினார். தொழிலாளர் இயக்கத்தை அறிஞர் வாடியாவுடன் சேர்ந்து தொடங்கி நடத்தி வைத்தார்; பெண்ணினம் பெருமையுடையது என்பதை ஆண்களும் உணருமாறு செய்தார்; இல்லம் போற்றத் தக்கது என்பதை துறவிகளும் உடன்படுமாறு நிறுவினார். திருவள்ளுவர் நெறியும், காந்தியமும் ஒன்றெனத் தெரிவித்தார்; வருங்காலத்திற்கு ஏற்ற வகையில் இளைஞர்களின் உள்ளங்களை வளர்த்துப் பண்படுத்தினார்; சென்ற காலத்தின் மாசுகளை முதியோரும் உணர்ந்திடுமாறு அகற்றித் தூய்மைப்படுத்தினார்.

திரு.வி.க. இருபது ஆண்டுகளாகவே முதியோருள் ஒருவராகக் கருதப்பட்டவர். ஆயின், முதியோர் எவருக்கும் இல்லாத புதுமை ஒன்று அவர்தம் வாழ்க்கையில் உள்ளது. இளைஞர்களின் உள்ளங்களைக் கவர்ந்த முதிய தலைவர் அவர். இளைஞர் அவரை அணுகிப் பழகுவதுபோல் பிறரை அணுகுவதில்லை; அணுக முடிவதும் இல்லை. காரணம் வேறொன்றும் இல்லை; அவர்தம் உடலில் முதுமை புகுந்த போதிலும், உள்ளத்தில் என்றும் இளையராக வாழ்கின்றார். இளைஞர் போற்றும் புரட்சிகளுக்கும் சீர்திருத்தங்களுக்கும் அப்பால் நின்று புரட்சியும் சீர்திருத்தமும் எண்ணவும் பேசவும் வல்லவர் அவர். பழமையில்

நல்லவற்றைப் போற்றுவார்; அதே நிலையில் இருந்து காலையில் பிறந்த புதுக் கருத்தையும் ஏற்றுக்கொள்வார்; துடிப்புள்ள இளைஞர் சொல்லும் சொற்களைப் பொறுமையுடன் கேட்டு மகிழ்வார்; மக்களின் வாழ்வு மாண்பு பெறுவதற்காக, எந்தத் துறையிலும் எத்தகைய மாறுதலும் வருக என வரவேற்பார்.

திரு.வி.க. எவர்க்கும் அஞ்சாத சீர்திருத்தக்காரர் எதற்கும் தயங்காத முற்போக்காளர்; ஆனால், அவர் அறத்திற்கும் அஞ்சுபவர்; அன்புக்குத் தயங்குபவர்; அறம் வெல்ல முயலும்போது, அதற்கு தலை வணங்குவார். அன்பு தடுக்க முயலும்போது, அதற்கு விட்டுக் கொடுப்பார்.

திரு.வி.க. என்றால் எவரும் மறக்க முடியாத மூன்று தனிப்பண்புகள் உண்டு. அவை; **தூய்மை, எளிமை, பொதுமை.**

தூய்மை: புறத்திலும் அகத்திலும்; எழுதும் தமிழிலும் எண்ணும் எண்ணத்திலும்; உடுக்கும் உடையிலும், உரைக்கும் உரையிலும்; செய்யும் கடமையிலும், செல்லும் நெறியிலும்.

எளிமை: காண்பதற்கும் கேட்பதற்கும்; அணுகுவதற்கும் அழைப்பதற்கும்; உபசரிப்பதற்கும் உதவி பெறுவதற்கும்; குறை கூறுவதற்கும், குறை சொல்லுவதற்கும்.

பொதுமை: காந்தியடிகள் போல் பல கட்சியின் உள்ளத்தையும் கவரும் அரசியல் பொதுமை: கார்ல் மார்க்ஸ் போல் பல மக்களையும் ஒன்றுபடுத்த விழையும் பொருளியல் பொதுமை; இராமலிங்க அடிகள்போல் பல சமய நெறிகளிலும் அடிப்படை ஒன்றைக் காணும் சன்மார்க்கப் பொதுமை; திருவள்ளுவர் போல் எக்காலத்திற்கும் இன்றியமையாத உண்மைகளை உணர்ந்து தெளியும் வாழ்வியல் பொதுமை.

ஓயாது உழைத்தார்; இரவும் பகலுமாக எழுதினார்; மூலை முடுக்கெல்லாம் பேசினார்; மாநாடு மாநாடாகத் தலைமை தாங்கினார்; வருவார் போவார் அனைவரையும் போற்றி உரையாடினார்; ஒருமுறை பழகியவரையும் பல ஆண்டுகள் மறவாமல் போற்றினார். ஊரும் பேரும் மட்டும் அல்லாமல் உற்றார் பெற்றாரையும் கேட்டறிந்து பழகி னார்; உயர்ந்த அறிவால் மட்டும் அல்லாமல் உண்மை அன்பாலும் அனைவரையும் பிணைத்து ஈர்த்தார்; ஒவ்வொரு கழகத்திற்காக மட்டும் அல்லாமல் ஒவ்வோர் ஆளுக்காகவும் தம் அரிய காலத்தைச் செலவிட்டார். தாம் உயர் பதவி பெறுவதற்காகப் பிறரை ஏணியாகப் பயன் படுத்திக் கொள்ளவில்லை; பிறர் உயர்வதற்காக உற்றுழி எல்லாம் தாம் தோற்றார்; பிறர் இன்பத்திற்காகத் தாம் துன்புற்றார்; தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் ஓயாது உழைத்தார்; இன்று ஓய்ந்து கிடக்கிறார். நாடும் மொழியும் மக்களும் உய்யும் வகையில் எழுதியும் பேசியும் தளர்ந்த மெல்லிய உடல் இன்று நோயுற்று வாடுகின்றது.

“தூங்கிய நாட்கள் சில; தூங்காத நாட்கள் பல. இரவை யும் பகலாக்கி உழைத்தேன். இயற்கை பொறுத்திருந்தது; இப்போது பழி வாங்குகிறது. இயற்கையின் விதிகளை மீறினேன்; உழைக்கும் உடலுக்குப் போதிய ஓய்வு மறுத்தேன். இயற்கையின் ஒறுப்புக்கு ஆளாக நேர்ந்தது.” இவ்வாறு கூறி இன்று அமைதி அடைகிறார்.

இயற்கை அவர்தம் கண்களை மறைத்தது; கண்களை இழந்தவர் கை கால்களைப் பயன்படுத்துதல் வழக்கம். ஆயின் கை கால்கள் தடுமாறும் முதுமையில், அவற்றின் உதவி எவ்வாறு கிட்டும்? இந்த நிலையில் அவர்க்கு நேர்ந்த இன்னல் மற்றொன்று: கண் இழந்தவர் பழகிய இடத்தில் தொட்டும் தடவியும் அறிய முடியும். இவர்க்கோ, பழகிய இடமாகிய அந்தப் பழைய வீட்டிலும் உரிமை இல்லாமற் போயிற்று. குடியிருந்த வீட்டைக் காலி செய்ய நேர்ந்தது.

வீடு ஒருவருடையது; சட்டம் அந்த ஒருவருக்கு துணை நின்றது. **தொண்டர்தம் பெருமையைச் சட்டம் அறியுமோ!** தொண்டர்க்குள் திருத்தொண்டர், தலைவர்க் குள் தூய தலைவர், கண்ணிழந்த முதுமையில் பழகியறியாத புதிய வீட்டில் ஒதுங்கியிருக்க நேர்ந்துள்ளது. கலைவளம் நிறைந்த தமிழகம் கண் மூடிக் கிடக்கின்றது. தமிழை வளர்க் கின்றோமா? தமிழ் வளர்த்த தந்தை வாடிக் கிடக்கின்றார். கண் திறந்து பழகிய வீட்டில் கண்மூடிக் கிடக்கவும் அவர்க்கு இந்தத் தமிழகத்தில் உரிமை இல்லாமற் போயிற்று!

முந்திப் பிறந்துவிட்டார்; இன்னும்சில நூற்றாண்டுகள் கழித்துப் பிறந்திருக்கவேண்டியவர். இது ஒரு தவறு ஆயின், இதுதான் உலகை உய்விக்கத் தோன்றும் சான்றோர்கள் செய்யும் தவறு.

திரு.வி.க.வின் நூல்கள் எதிர்காலம் போற்றத்தக்க நூல்கள். அவர்தம் கொள்கைகள் வருங்கால மக்கள் தெளி யத்தக்க உயரிய கொள்கைககள். உலகமோ நாளை கனியும் கனியைப் பற்றிக் கவலைப்படாமல் இன்று காய்த்துள்ள காய்களைக் கவரமுற்படுகின்றது. அதனால்தான் இந்த நிலை!

2. வாழ்க்கை

திரு.வி.க. சிறிய கிராமத்தில் எளிய குடும்பத்தில் 1883 ஆகஸ்டு 26ஆம் நாள் பிறந்தார். தமிழ்நாட்டின் தலை நகராகிய சென்னையில் பெரிய குடும்பங்களுக்கு இடையே ஓடி ஆடி வளர்ந்து கல்வி பயின்றார். குறும்புகளும் துடுக்கும் மிகுந்த பிள்ளையாய் வளர்ந்தவர். சாதுவாய்ப் பிறர் மனத்தைப் புண்படுத்த அஞ்சுபவராய் விளங்கினார். தசை மடிப்புகளுடன் வளர்ந்து திண்ணிய உடலுடன் பிள்ளைமை தொடங்கிய அவர், மெலிந்து வாடிய உடலுடன் முதுமையில் விளங்கினார். நல்ல மதிப்பெண்கள் பெற்று மதி நுட்பத்துடன் கற்று ஆசிரியர்களின் போற்றுதலுக்கு உரிய மாணவராக இருந்த அவர், சமய நூல்களைக் கற்பித்த ஆசிரியராகிய யாழ்ப்பாணம் **கதிரைவேற் பிள்ளை**யின் வழக்கில் சான்று சொல்லும் கடமையின் காரணமாக 1904இல் பத்தாம் வகுப்பு (மெட்ரிகுலேஷன்) அரசாங்கத் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட இயலாமல் படிப்பை அவ்வாறு அரைகுறையாக முடித்தபோது அவருடைய உயர்கல்விக் கனவுகள் சிதைந்தபோதிலும், பிற்காலத்தில் தமிழகத்தின் தனிப் பேராசிரியராய் அறிஞர் போற்றும் நூல்கள் பலவற்றை இயற்றியளிக்க முடிந்தது; எழுத்திலும் பேச்சிலும் நிகரற்றவராய்த் தமிழுக்கும் தமிழகத்திற்கும் பெருந்தொண்டு ஆற்ற முடிந்தது 1906ஆம் ஆண்டில் தம் வாழ்வுக்கு ஏதேனும் ஒரு தொழில் தேடும் நோக்கால் வாணிகக் கணக்குத்துறை (புக் கீப்பிங்) கற்றுத் தேறினார். ஆயின் அத்தேர்ச்சி அவர்தம் வாழ்வுக்கு உதவாததாயிற்று

சில ஆண்டுகள் ஸ்பென்சர் கம்பெனியில் வேலை செய்த போதிலும் பின்னர் அத்துறையின் தொடர்பு இல்லாது போயிற்று. வரவு செலவுக் கணக்கை அடியோடு மறந்த- பொருட்பற்று அறவே நீங்கிய- வாழ்வு நடத்துபவர் ஆனார்.

1907ஆம் ஆண்டில் வங்காளப் பெருவீரர் பிபின் சந்திர பாலர் சென்னைக் கடற்கரையில் விடுதலைப் பெருமுழக்கம் செய்தபோது, அவருடைய சொற்பொழிவைக் கேட்டு இளைஞர் கலியாணசுந்தரம் உணர்சிவயப்பட்டார்; அதுவே பிற்பாடு அவரைக் காங்கிரஸ் பெருந் தொண்டராக்கியது; தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவராகவும் ஆக்கியது; காந்தியத்தில் ஈடுபடச் செய்தது.

தம் ஆசிரியர் **கதிரைவேற் பிள்ளை**யிடம் அவர் பேரன்பு கொண்டவர். 1907ஆம் ஆண்டில் ஆசிரியர் மறைந்தபின் வேறொருவரிடம் சென்று தமிழும் சைவ சித்தாந்தமும் கற்க மனம் இல்லாதவராய் வருந்தினார் 1908இல் ஆசிரியரின் வாழ்க்கை வரலாறு இயற்றினார். அதுவே அவர் இயற்றிய முதல் நூல் ஆகும்.

பிறகு அடுத்த ஆண்டில் சைவ சித்தாந்தம் கற்கும் வேட்கை மிகவே, மயிலை **தணிகாசல முதலியாரிடம்** சில நூல்களைக் கற்கத் தொடங்கினார். பெரிய புராணத்தில் ஆர்வம் மிகுந்தவர் ஆனார். அந்நூல் பற்றி விரிவுரைகள் ஆற்றினார். பெரியபுராணத்திற்கு உரை எழுதி வெளியிட்டார். தமிழ் விரிவுரைகளிலும் நூலியற்றலிலும் ஆர்வமும் நாட்டுப் பற்றில் வேகமும் கொண்ட அவர் மனத்திற்கு அந்நியர் நடத்தும் ஸ்பென்சர் கம்பெனியின் கிளர்க்கு வேலை பிடிக்கவில்லை; வெறுப்பு மிகுந்தது. அந்த வேலையை விட்டார். 1910ஆம் ஆண்டில் ஆயிரம் விளக்குப் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து பணியாற்றினார். சிறியதொரு பள்ளியில் பணிபுரிந்த போதிலும், அவருடைய உள்ளம், உலகம் நாடி வளர்ந்து விரிவுடையதாயிருந்தது அதற்கு ஏற்ற வகையில் சான்றோர் சிலரின் நட்பும்

தொடர்பும் உதவலாயின பெரு மனம் படைத்த ஜஸ்டிஸ் **சதாசிவ ஐயரின்** நட்பும், உலகப் புகழ்பெற்ற **அன்னி பெண்ட் அம்மையாரின்** அன்பும் அவர்க்கு வாய்த்தன. சைவ சித்தாந்தத்தில் வேர்கொண்டு அச்சமய நூல்களையும் பயின்று, அவை பற்றிச் சொற்பொழிவுகளும் ஆற்றி வளர்த்த அவருடைய மனம், சான்றோர்களின் தொடர் பால் ஒருசமய எல்லைக்குள் கட்டுப்படாமல் விரிவுடைய தாய் வளரத் தொடங்கியது. உலகத்திலுள்ள பல சமயச் சான்றோர்களின் கருத்துக்களையும் வெறுப்பின்றிக் கற்றும் கேட்டும் அறிபவர் ஆனார்.

1912ஆம் ஆண்டில் அவருடைய இல்லறம் தொடங்கி யது. **கமலாம்பிகை** அம்மையார் என்பவரைத் தம் வாழ்க் கைத் துணைவியாராகப் பெற்று மகிழ்ந்தார் அம்மகிழ்ச்சி நீடிக்கவில்லை. இரு குழந்தைகளை ஈன்ற அந்த அம்மை யார் அந்தக் குழந்தைகளின் மறைவுக்குப் பின் மெலிந்து வாடினார்; நோய்வாய்ப்பட்டார் 1918ஆம் ஆண்டில் ஆறு ஆண்டுகள் இல்லறத்திற்குப் பின் தம் கணவர் கலியாண சுந்தரனார் நைந்துருகி நிற்க ஆவி நீத்தார். மனைவியாரிடம் உயர்ந்த பண்புகளைக் கண்டு போற்றிய திரு.வி.க. என்றும் மறவாத் தூயவர் ஆனார். வேறொருத்தியை நாடாத பேராண்மை பெற்றார்.

ஆயிரம் விளக்குப் பள்ளியில் ஆசிரியராக இருந்தவர் 1916ஆம் ஆண்டில் இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியர் ஆனார். தமிழிலக்கியத் தொண்டு செய்வதற்கு அது தக்க வாய்ப்பு ஆயிற்று. ஆயினும் அவர் மனம் அந்த அளவில் நிற்கவில்லை. 1917ஆம் ஆண்டில் அரசியல் துறையில் நுழைந்தார். காங்கிரஸ் அரங்கில் பேசத் தொடங்கினார். அதற்கு முன்னமே **எஸ்.சீநிவாச ஐயங்கார்** நட்பும், அந்த ஆண்டில் டாக்டர் **வரத ராஜுலுநாயுடு** சக்கரவர்த்தி **இராசகோபாலாச் சாரியார்** ஆகியோர் தொடர்பும் ஏற்பட்டன. எழுத்துத்

துறையில் முன்னமே ஈடுபட்ட அவரது பேச்சுத் துறையைச் சமய உலகம் மட்டும் அதுவரையில் கண்டு வந்தது 1917ஆம் ஆண்டு முதல் அவரது பேச்சுத் தொண்டு அரசியல் துறைக்குப் பயன்படலாயிற்று நாடறிந்த பேச்சாளராக விளங்கும் வாய்ப்புக் கிட்டியது. தூய தமிழில் மிடுக்கான நடையில் எல்லோருடைய உள்ளத்தையும் கவரும் வகையில் இரண்டு மணி நேரத்திற்குக் குறையாமல் பேசிப் பல மேடைகளைத் தம்வயப்படுத்திய ஆற்றலால் அவர் தமிழகத்தில் நிகரற்ற பேச்சாளராக விளங்கினார். "பெரும் பேச்சுக்கு உரிய குரலையும் நாவையும் இயற்கை அன்னை எனக்கு அருளினள். பல தொண்டுகட்கு எனது பேச்சே பெருந்துணை செய்து வருகிறது" என்று அவரே குறிப்பிட்டுள்ளார். பேச்சுத் தொண்டின் வாயிலாக அவர் அரசியலில் காங்கிரஸ் கடசியில் பெற்ற புகழ் அவரை அரசியல் எழுத்துத் துறைக்கு ஈர்த்தது. 1917ஆம் ஆண்டு டிசம்பரில் வெஸ்லி கல்லூரித் தமிழாசிரியர் பணியை விட்டு **"தேசபக்தன்"** என்ற அரசியல் இதழுக்கு ஆசிரியர் ஆனார். அவர் தமிழ்த்துறையிலேயே தொடர்ந்து தொண்டு ஆற்ற வேண்டும் என்று விரும்பி வற்புறுத்தியோர் பலர். அவர்களுள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர்கள் டாக்டர் **உ.வே.சாமிநாத ஐயர், கா.நமச்சிவாய முதலியார், ச.சச்சிதானந்தம்பிள்ளை** ஆகியோர் அத்தகையோரின் அன்புரைகளையும் கடந்து அவர்மனம் அரசியலில் கொண்ட பேரார்வத்தின் காரணமாக இதழாசிரியர் பொறுப்பை ஏற்றார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் விடுதலை வீரர்களைப் போற்றியும் அவர் எழுதிய ஆற்றல் மிக்க எழுத்துக்கள், அரசாங்கத்தின் பகையையும் பலவகை இடர்பாடுகளையும் தேடித் தந்தன அவருடைய நம்பிக்கைக்கு உரிய நண்பர்களால் விளைந்த இன்னல்களும் சில. அவற்றின் காரணமாக இரண்டரை ஆண்டுகளுக்குப் பிறகு தேசபக்தனை விட்டு விலக நேர்ந்தது.

இந்தியாவிலேயே முதல் முதல் தொழிலாளர்களுக்குச் சங்கத்தைத் தோற்றுவித்த பெருமை திரு.வி.க.வுக்கும் வாடியாவுக்கும் உரியது. 1918ல் தோற்றுவிக்கப்பட்டது. தொழிலாளர் இயக்கம் அவர் உள்ளத்தை மிகக் கவர்ந்தது. 1920, 1921 ஆண்டுகளில் திரு.வி.க.வின் வாழ்க்கையில் பல சிறப்பு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. 1920ல் தேசபக்தனை விட்டு விலகினார். தொழிலாளர் இயக்கத்தில் ஆர்வம் கொண்டார். பக்கிங்காம் கர்னாடிக் மில் கதவடைப்பு இயக்கத்திற்குத் துணை புரிந்தார். பல அரசியல் மாநாடு களில் தலைமை தாங்கினார் **நவசக்தி** என்ற இதழைத் தொடங்கி நடத்தலானார். 1921ல் மீண்டும் மில் தொழி லாளர் வேலை நிறுத்தம் நடைபெறத் துணை புரிந்தார். கவர்னரின் சீற்றத்திற்கு ஆளானார்.

1919 ஆம் ஆண்டில் **பெரியார் ஈ.வெ.ரா.**வுடன் திரு.வி.க. நட்புக் கொண்டார். பல அரசியல் மாநாடுகளி லும் இயக்கங்களிலும் அந்நட்பு வேரூன்றியது. ஆனால் 1925ல் காஞ்சிபுரத்தில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் மாநாட் டுக்குத் திரு.வி.க. தலைமை தாங்கியபோது, வகுப்புவாரி உரிமை பற்றிக் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானத்தைத் திரு.வி.க. தள்ளியதன் காரணமாக இருவர்க்கும் கருத்து வேறுபாடு எழுந்தது; முற்றியது; நாடெங்கும் பேச்சு ஆகியது; செய்தி இதழ்கள் எல்லாம் வசைமாரி பொழிந்தன. அரசியல் தொண்டில் திரு.வி.க.வுக்கு மெல்ல மெல்ல வெறுப்பு வளர்ந்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு காங்கிரஸ் சபையின் உறுப்பினராகக் கட்டணம் செலுத்துவதையும் விட்டார். ஆயினும் வேறு கட்சியைச் சாராமல் நாட்டு விடுதலை இயக்கத்திற்குச் சார்பாக நின்றார். வேலூரில் ஒரு குழப்பத்தின் காரணமாக அப்போதைய காங்கிரஸ் கட்சிக்கு மாறாகவே, வேறொரு காங்கிரஸ் என்ற வகையில் இயக்கம் நடத்தி ஒரு தேர்தலுக்காகவும் பாடுபட்டு வெற்றித் தேடித் தந்தார். 1941ஆம் ஆண்டில் தம் நவசக்தி இதழையும் வேறொருவர்க்குத் தந்துவிட்டார். அரசியல் இயக்கம்

எதிலும் ஈடுபடாமல், கட்சிகளுக்கும் அப்பாற்பட்டவராக விளங்கினார். தொழிலாளர் இயக்கம் மட்டுமே அவர் உள்ளத்தில் இடம் பெற்றிருந்தது. பெரியார் ஈ.வெ.ரா.வுடன் மற்ற அரசியல் தலைவர்களிடமும் அன்புடன் பழகினார். 1943ஆம் ஆண்டில் அறுபது ஆண்டு நிரம்பப் பெற்றபோது, மணிவிழாக் கொண்டாடச் சிலர் முனைந்து நின்றனர். அதைத் தடுக்க முயன்றார். இறுதியில் அவர்களின் ஆர்வத்தை உணர்ந்து இணங்கினார் நாடெங்கும் மணிவிழாக் கொண்டாடப்பட்டது. இதழ்கள் எல்லாம் அவருடைய அமைதியான தொண்டையும் அறம் திறம்பாத வாழ்வையும் போற்றிப் பாராட்டிச் சிறப்பு மலர்கள் வெளியிட்டன.

மணி விழாவுக்குப் பிறகு பத்து ஆண்டுகள் திரு.வி.க.வின் வாழ்க்கை அமைதியாகக் கழிந்தது. நாடெங்கும் பெரும் புகழ் பெற்ற அவருடைய வாழ்க்கை வழக்கம் போல் எளிமையாகவே நடைபெற்றது. தமக்கென்று ஒரு வீடும் இல்லாமல், துறவிபோல் வாழ்ந்தார். வெள்ளைக் கதராடை தவிர வேறொன்றும் உடுத்தாமல், தமையனார் குடும்பதார் தரும் உணவு தவிர வேறொன்றும் தனக்கென்று நாடாமல், அவர்கள் இருந்த வாடகை வீட்டிலேயே தாமும் ஒதுங்கியிருந்து ஆண்டுகளைக் கழித்தார். காலுக்குச் செருப்பும் இல்லாமல், விழாக்களுக்கும் சென்று வந்தார். அவர் வீட்டைவிட்டு வெளியே செல்லாத நேரங்களில் வெளியுலகம் அவர் இருந்த மூலையை நாடி வந்து அவருடைய அறிவுரைகளைப் பெறக் காத்திருந்தது.

ஆடவர் வந்தனர்; மகளிர் வந்தனர். முரடர் வந்தனர்; சாதுக்கள் வந்தனர்; முதியோர் வந்தனர்; இளைஞர்கள் வந்தனர்; செல்வர் நாடினர்; வறியோர் நாடினர்; தொழிலாளர் நெருங்கினர்; முதலாளிகள் நெருங்கினர் ஆத்திகர் அணுகினர்; நாத்திகர் அணுகினர். கற்றவர் பேசினர்; கல்லாதவர் பேசினர். கருத்து ஒன்றுபட்டவர் இருந்தனர்; வேறுபட்டவரும் இருந்தனர். அரசியல் தலைவர்கள் அண்

டினர்; தொண்டர்கள் அண்டினர். போற்ற வந்தவர்கள் சிலர்; தூற்ற வந்தவர்கள் சிலர் பல திறத்தார் வந்தனர்: பலவகைச் சமயத்தார், பலவகைக் கட்சியார், பலவகைப் பண்பினர் அனைவர்க்கும் புகலிடமாக இருந்தது சென்னை இராயப்பேட்டை கணபதி முதலித் தெருவில் இருந்த சாது அச்சுக் கூட்டத்தின் தோட்டப்பகுதி. அனைவருடைய பேச்சையும் பொறுமையாகக் கேட்டு வந்தார்; அனைவருக் கும் பொறுமையாகக் கருத்துரைகள் வழங்கி வந்தார். பகலெல்லாம் இவ்வாறு கழியும். இரவில் சிந்தனை செய்வதிலும் எழுதுவதிலும் அச்சாகும் நூல்களின் புரூப் பார்ப்பதிலும் மணிக்கணக்காக உழைப்பார். உணவு குறைய ஊக்கமும் குறைந்த வாழ்வு ஆயிற்று அவருடைய தூய வாழ்வு சர்க்கரை நோய் (நீரிழிவு) உடலை மெலிவித் தது. கண் பார்வை மங்கியது. கண் அறுவை பயன்தராமல் போனது. பார்வை இழந்த நிலையில் பழகிய வீட்டை விட்டுப் விட்டுப் புதிய எதிர் வீட்டை வாடகைக்கு எடுத்து அங்குத் தங்கிப் பார்வை இன்மையால் இடம் அறியாமல் வருந்த நேர்ந்தது கால்விரல் புண்ணானது. புண் ஆறாமல் வாட்டியது. நல்ல பாடல்களைக் கேட்டு உருகி அமைதி யாகப் படுக்கையில் கிடந்தார். 1953 செப்டெம்பரில் உடலை நீத்து மறைந்தார். சென்னை மாநகரம் கதறியது; தமிழ்நாடு கலங்கியது; உலகெங்கும் உள்ள தமிழர்கள் எல்லோரும் சேர்ந்தனர். அவர் தொண்டு விளங்கியது; இயற்றிய செந்தமிழ் நூல்கள் ஒளி வீசி விளங்குகின்றன.

3. வளர்ச்சி

"ஒரே பிறவியில் மனிதன் எத்தனையோ முறை இறக்கிறான்; எத்தனையோ முறை பிறக்கிறான். இவ்விறப்பும் பிறப்பும் மனிதன் அறிவை விளக்கம் செய்தே செல்லும் இது வெறும் பேச்சு அன்று; கதை அன்று; அநுபவம்" இது திரு.வி.க எழுதியது. அவருடைய வாழ்க்கை இளமை முதல் மாறி வளர்ந்து பண்பட்டு முழுமை எய்திய தன்மையை அறிவார்க்கு இந்த உண்மை தெளிவாகும். "மாறுதல் எவற்றால் நேர்கிறது. கல்வி கேள்வியாலும் சேர்க்கையாலும் இன்ன பிறவற்றலாலும் மனோநிலை மாண்டு மாண்டு புத்துயிர் பெறும்" என்று அவரே மாறுதல் நேரும் முறை பற்றியும் கூறியுள்ளார். திரு.வி.க. நல்ல கல்வி, கேள்வி பெறும் வாய்ப்புப் பெற்றார் ஜான் ரத்தினம், ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் அன்னி பெசண்ட், திலகர், காந்தியடிகள், பாம்பன் சுவாமிகள், மௌனசுவாமிகள், வாடியா, மனைவி கமலாம்பிகை அம்மையார் முதலிய நல்லவர்களின் தொடர்பு வாய்த்தது. அரசியல் துறையிலும் தொழிலாளர்கள் இயக்கத்திலும் சன்மார்க்க சங்கங்களிலும் தொண்டு செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அவற்றால் அவருடைய துடுக்கான மனோநிலை முதலியவை மாண்டு பண்பாடு முதிர்ந்தது. காந்தியடிகளின் வாழ்க்கை போல் அவருடைய வாழ்க்கையும் அற்புதங்களுக்கு இடம் இல்லாமல் படிப்படியே பண்பட்டு உயர்ந்த தூய எளிய வாழ்க்கையாகும்.

அவர் பெரியபுராணத்துக்கு முதலில் (1907-1910) ஒரு குறிப்புரை எழுதினார். இருபத்துநான்கு ஆண்டுகள் கழித்து (1934இல் இரண்டாம் முறை குறிப்புரை எழுதிய போது, முதல் உரைக்கும் இரண்டாம் உரைக்கும் எவ்வளவோ வேறுபாடு நேர்ந்தது. அரசியல் உலகில் நுழைந்து பல திறத் தாரோடு பழகிப் பரந்த உலக அனுபவம் பெற்ற காரணத் தால் அந்த வேறுபாடு நேர்ந்தது என அவர் குறித்துள்ளார். அந்த இருபத்து நான்கு ஆண்டுகளில் அவருடைய தமிழ் நடையும் வேறு பட்டு வளர்ந்துள்ளது.

என்னுடைய வாழ்க்கையில் மூவித நடைகள் மருவின. ஒன்று இளமையில் உற்றது. இன்னொன்று சங்க இலக்கியச் சார்பு பெற்ற போது பொருந்தியது மற்றொன்று பத்திரிகையுலகை அடைந்த நாளில் அமைந்தது. இறுதியதே எனக்கு உரியதாய்- உடையதாய்- நிலைத்தது இந்நடை எளியது; சிறு சிறு வாக்கியங்களிலாவது. இந்நடையிலும் நூலுக் கேற்ற- காலத்துக்கேற்ற- அமைவுதானே பெறும்.

இவ்வாறு தம் நடையில் நேர்ந்த மாறுதலைப் பற்றி அவரே குறித்துள்ளார். நூலுக்கு ஏற்றவாறு காலத்துக்கு ஏற்றவாறு எளிமை அமைந்துவந்தது. என்பதை **உள்ளொளி, இந்தியாவும் விடுதலையும்** என்னும் பிற்காலத்தில் அவர் இயற்றிய நூல்களைக் கொண்டு உணரலாம்.

கம்பெனியில் கணக்கராகத் தொழில் தொடங்கிய திரு.வி.க. பிறகு அதை விடுத்துப் பள்ளிக்கூட ஆசிரியரான பிறகு அமைதியாக வாழ்க்கை நடத்தினார். வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராகத் தொழில் ஏற்ற பின் அது அவருடைய மனப்பான்மைக்கு உகந்ததாய், தொண்டு பெருகுவதற்கு இயைந்ததாய் அமைந்தமையால் மகிழ்ச்சி உற்றார். ஆயினும் அவருடைய உள்ளத்தில் இருந்த அரசியல் ஆர்வம்- பின் சந்திரபாலர் முதலானோர் சொற் பொழிவுகளைக் கேட்டு எழுந்த ஆர்வம்- குறையாமல்

இருந்து வந்தது, நாட்டு விடுதலைக்கு உரிய வகையில் எழுத்துத் தொண்டு ஆற்ற உள்ளம் விரும்பி தேசபக்தன் என்ற பெயரால் தேசிய இதழ் ஒன்று நடந்த நண்பர் சிலர் கூடி முயன்ற போது அதற்கு ஆசிரியராக விளங்கத் தக்கவர் திரு.வி.கலியாணசுந்தரனாரே எனத் துணிந்தனர். திரு.வி.க.வின் நெஞ்சம் தயங்கியது; தடுமாறியது. திரு சச்சி தானந்தம் பிள்ளை முதலாய நண்பர்கள் அமைதியான தமிழாசிரியத் தொழிலைவிட்டுச்செல்லுதல் வேண்டா எனத் தடுத்தனர். அதற்குள் அந்த அரசியல் நண்பர்கள் தேசபக்தன் இதழைப் பற்றி ஒரு விளம்பரம் ஒன்று வெளி யிட்டு அதில் திரு.வி.க. ஆசிரியராகத் தொண்டு ஆற்றுவார் என்று குறிப்பிட்டு விட்டனர். இருதலையும் ஊசலாடிய திரு.வி.க.வின் நெஞ்சம் அந்த விளம்பரக் குறிப்பைக் கண்ட வுடன் ஒருமுகப்பட்டுவிட்டது. இசைந்து ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அமைதியான தமிழ்த் துறையைவிட்டு விலகினார். இரண்டரை ஆண்டுகள் (1917–1920) அந்தத் தொண்டில் உழைத்தார்.

'தேசபக்தன்' இதழ் வாயிலாகத் திரு.வி.க. புரிந்த தொண்டு அவருடைய உள்ளத்தை வளர்த்தது; உலக அனு பவத்தை வளர்த்தது; தமிழகத்தில் அரசியல் ஆர்வத்தை வளர்த்தது; ஆசிரியர் கட்டுரை ஒன்றைக் கண்ட டாக்டர் சுப்பிரமணிய ஐயர் வியந்து, "தாய்மொழியின் சக்தியைக் கண்டேன் கண்டேன்" என்று பாராட்டினாராம்.

தேசபக்தன், பத்திரிகையுலகில் புரட்சி செய்தான். "எப்படிச் செய்தான்? படிப்படியே செய்தான். புரட்சி நடந்தது என்று பத்திரிகை உலகுக்கே தெரியாது. புரட்சி களைத் தேச பக்தனில் காணலாம். தேசபக்தன் தமிழாக்கிய அரசியல் சொற்களும் சொற்றொடர்களும் குறியீடுகளும் இப்பொழுது பத்திரிகைகளிலும் மேடைகளிலும் பிறவிடங் களிலும் ஏற்றமுற்று அரசு புரிதல் வெள்ளிடைமலை."

இவ்வாறு திரு.வி.க. மேலும் அந்த இதழ் செய்த புரட்சியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

"தமிழ்நாட்டில் பல குறைபாடுகள் உண்டு. அவைகளில் ஒன்று பெருந்தலைவர்கள் தமிழ் தெரியாது என்று ஆங்கிலத்தில் நாவன்மை காட்டி வந்தமை. அதுபற்றித் தேசபக்தன் எழுப்பிய கிளர்ச்சி தலைவர்களைத் தமிழ் பேசச் செய்தது. இந்நாளில் தென்னாட்டு மகாநாடுகளின் நிகழ்ச்சி முறைகளும் காரியக் கூட்டங்களின் நிகழ்ச்சி முறைகளும் தாய்மொழியில் நடைபெற்றுவருவது கண்கூடு. மேடைகளிற் பேசுதற் பொருட்டுத் தலைவர்கள் தேசபக்தனைப் படித்ததும், தமிழாய்ந்த ஐரோப்பியப் பாதிரிமார் பலர் தேசபக்தன் சந்தாதாரரானதும் ஈண்டுக் குறிக்கத் தக்கன. தேசபக்தன் தமிழரை அந்நிய மோகத்தினின்றும் விடுவித்தான் என்று சொல்வது மிகையாகாது."

அவர் இவ்வாறு தொடர்ந்து விளக்கியிருப்பதும் கருதத் தக்கது. கவிஞர் சுப்பிரமணிய பாரதியார், முதலான தலைவர்களின் மீது ஆங்கில அரசாங்கம் அடக்குமுறைக் கணைகளைத் தொடுத்தபோதெல்லாம், திரு.வி.க.வின் சொல்லம்புகள் தேசபக்தனிலிருந்து புறப்பட்டு நாட்டில் கிளர்ச்சி பெருகச் செய்தன. அல்லும் பகலும் பாடுபட்டுத் தேசபக்தனை வளர்த்து வந்த திரு.வி.க. தம் நேர்மையுள்ளத்தின் காரணமாக இரண்டரை ஆண்டுகள் கழித்து அதனை விட்டு விலக நேர்ந்தது.

தேசபக்தன் இதழ் வாயிலாக மட்டும் அல்லாமல், தாம் கலந்து கொண்ட மாநாடுகளின் வாயிலாகவும் தமிழ்ப் புரட்சி செய்தார். சென்னை மாகாணச் சங்கம் என்ற அவர் காலத்து அமைப்பின் சார்பில் தஞ்சை- திருச்சி மாநாடு 1918ல் தஞ்சையில் கூடியதும் அம்மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்களுள் தமிழைப் பற்றியது ஒன்று. அது பற்றி திரு.வி.க. மிக அழுத்தமாகத் தம் கருத்தை வலியுறுத்தினார். இனிப் பொதுக் கூட்டங்களில் தமிழர்கள்

ஆங்கிலத்தில் பேசுதல் நகையாடத் தக்கது, இழிவானது என்றும், தமிழர்கள் தமிழிலேயே பேசவேண்டும் என்றும், கூட்டங்களில் யாரேனும் அயல் மொழியில் பேசினால் பொதுமக்கள் அவர்களைத் தக்க பாடம் புகட்டித் திருத்த வேண்டும் என்றும் பேசத் தொடங்கினார்களாம். காங் கிரஸ் காரியக் கமிட்டியும் தமிழிலேயே நடவடிக்கை களைப் பதியத் தொடங்கியதாம். தம் வாழ்வில் நடத்திய முதல் புரட்சி இது என்று திரு.வி.க. மகிழ்ந்தார்.

1918ஆம் ஆண்டில் எழுமூரில் ஒரு பள்ளியின் ஆண்டு விழாவுக்குத் திரு.வி.க. தலைமை தாங்கினார். ஓர் அம்மையார் ஆங்கிலத்தில் பேசினார். பேச்சினிடையே அவர் தமிழ் கற்றால் சோம்பல் உண்டாகும் என்று கூறினாராம். தமிழுள்ளமும் நாட்டுப் பற்றும் இல்லாமல் பேசிய அவருடைய கருத்தைத் திரு.வி.க. தம்முடிவுரையில் கடிந்தார். பெண்களுக்குப் பெருமதிப்புத் தந்து பாராட்டிப் பேசும் இயல்புக்கு மாறாக திரு.வி.க. அன்று அவரை மறுத்துரைக்க நேர்ந்தது. புறநானூற்றிலிருந்து நக்கீரர் பாடலை எடுத்து விளக்கி, தமிழ்க்கல்வி உயர்ந்த நோக்கங் கள் தரவல்லது என்பதையும், ஆங்கில மனம் வைத்து நாட்டை நோக்குவதால் திரிபுணர்ச்சி ஏற்படும். என்பதை யும், தமிழ்க் கல்விக்கும் சோம்பலுக்கும் தொடர்பு இல்லை என்பதையும், தமிழ்க் கல்வி மனத்தை உயர்த்த வல்லது என்பதையும் அழுத்தந் திருத்தமாக எடுத்துரைத்தார்.

அவ்வாறு பெண்மைக்கும் விட்டுக்கொடாமல் தாய் மொழியைப் போற்றும் ஆர்வம் கொண்ட அவரே, இளமை யில் ஆங்கில மொழியிடத்தும் மோகம் மிகுந்தவராக இருந்தார். நான்காம் பாரம் (ஒன்பதாம் வகுப்பு) படித்த போது, “ஆங்கிலத்தில் நன்றாகப் பேசுதல் வேண்டும்; எழுது தல் வேண்டும்; என்னும் பித்துப்” பிடித்திருந்ததாம். ஆங்கில நாவன்மையால் உலகையே கவரச் செய்தல் வேண்டும் என்ற பேராசைப் பேய் என்னைப் பிடித்து அலைத்தது.

அப்பேய் என்னைத் தனக்கு இரையாக்கவில்லை" என்று கூறியுள்ளார் திரு.வி.க. சில நண்பர்களோடு சேர்ந்து ஆங்கிலப் பித்தை வளர்ப்பதற்காக ஒரு சங்கமும் அமைத்தாராம். தமிழ்ப் புலவர் கதிரை வேற் பிள்ளையின் தொடர்பால் அந்த ஆங்கிலப் பேயைத் தம் மனத்தை விட்டுத் துரத்த முடிந்ததாம். பிறகு ஆங்கில முழக்கத்திற்காக அமைந்த அந்தக் கழகத்தைத் தமிழ் முழக்கத்திற்கு உரியதாகச் செய்து விட்டாராம்.

கண்மூடித் தன்மையாக ஆங்கிலத்தை வெறுத்துப் பழித்த பான்மை அவரிடம் இல்லை. தாய்மொழியைப் புறக்கணித்து ஆங்கிலத்தின் வாயிலாக அறிவையும் பண்பாட்டையும் பெறும் முயற்சியையே அவர் பழித்தார்; வெறுத்தார்; தமிழ்ச் சங்கங்கள் நூற்றுக் கணக்கானவற்றுடன் பழகியவர் அவர். தமிழ் நாட்டில் அவர் முழக்கத்தைக் கேளாத சங்கமே இல்லை எனலாம். ஆனால் அவற்றையும் அவர் கண் மூடிப் போற்றவில்லை. பல சங்கங்களிடம் இருந்த குறையும் அவருக்குத் தெரியும். அவற்றையும் எடுத்துரைத்துத் தக்க அறிவுரை கூறியுள்ளார் "அவைகளிற் பெரும்பான்மையானவை நீண்ட ஆயுள் பெறுவதில்லை. சங்கங்கள் தொடக்கத்தில் ஆண்டு விழாக்களைச் சிறப்புற நடத்தும்; பின்னே கும்பகர்ணன் வேலைக்குச் செல்லும். நூற்றுக்குத் தொண்ணூறு சங்கங்களின் ஆண்டு விழாக்கள் என் தலைமையில் நடைபெற்றிருக்கும். அவ்விழாக்களில் யான் பொதுவாகப் பல பொருள் பற்றிப் பேசுவேன். சிறப்பாகத் தமிழ் நாட்டில் சங்கங்கள் ஆக்கம் பெறாமைக்குக் காரணங்களை எடுத்துக் காட்டுவேன். சங்கங்களையெல்லாம் ஒருமைப்படுத்திக் காக்க வல்ல ஒரு தாய்ச் சங்கமின்மை, பல கலைகளை விடுத்து வெறும் இலக்கிய இலக்கண ஏடுகளை கட்டி அழுதல், உள்ளாட்டம்- வெளியாட்டம்- ஆடல், பாடல், சிலம்பம்- சிற்றுண்டி முதலியன இன்மை, வகுப்புப் பிணக்கு, தமிழ் பயின்றவருள் பெரும்பான்மையினர் பிற்போக்கினராயிருத்தல், நாட்டுப்

பற்றின்மை, கருத்து வேற்றுமைக்கு மதிப்பு அளியாமை, பொறாமை, பிடிவாதம், கால தேசவர்த்தமானத்துக்கு ஏற்ற முறைகளை மேற்கொள்ளத் தயங்கல், தன்னலம், பொறுமை யின்மை, ஊக்கமின்மை முதலியன." இவ்வாறு அவர் கூறியவற்றுள், பொறாமை, பிடிவாதம், ஆகியவை சிறப் பாகக் குறிப்பிடத்தக்கன. தனி முறையில் வீட்டில் பேசிக் கொண்டு இருக்கும்போதும் தமிழரின் பெருங்குறை இவை என்று அவர் கூறுவது வழக்கம். தமிழ் நாட்டுப் பாம்புக்கு நஞ்சு மிகுதி. தமிழர் மனத்திற்குப் பொறாமை மிகுதி என்று அவர் கூறியுள்ளார்.

தேசபக்தன் இதழைத் துறந்த பிறகு அவருடைய அரசியல் தொண்டு வளர்ந்ததே தவிரக் குறையவில்லை காந்தியடிகள் இந்நாட்டின் ஆண்களின் ஆடம்பர ஆடை மோகத்தைப் போக்க பெரும் புரட்சி நடத்தினார். உல கில் அந்த அளவிற்கு ஒரு நாட்டு ஆண்மக்களின் மயக்கத் தைப் போக்கிய புரட்சி வேறு எங்கும் நடந்ததில்லை இந்த நாட்டு கதர் இயக்கம் அதனைச் செய்து முடித்தது. பெண்களைப் போலவே பட்டும் பீதாம்பரமுமாக நகைகளும் அலங்காரங்களுமாகத் திரிந்த ஆண் மக்கள் நூறாயிரக் கணக்கானவர்களை வெள்ளையாடை மட்டும் உடுத்தும் எளிமைக்குத் திரும்பிவிட்டது. காந்தியடிகளின் கதர் இயக்கம் திரு.வி.க.வின் உள்ளத்தையும் அது மாற்றியது. கல்லூரித் தமிழாசிரியராய், பிறகு தேசபக்தன் இதழ் ஆசிரியராய் விளங்கிய போதெல்லாம் திரு.வி.க.வின் தலையில் சரிகைக் கரை இட்ட வெள்ளைத் தலைப்பாகை விளங்கியது. உடலில் விலையுயர்ந்த நீண்ட கோட்டு என்னும் சட்டை தொங்கியது. கழுத்தில் பட்டு அல்லது சரிகைக் கரைத் துணி அணி செய்தது. இடுப்பில் எட்டு முழவேட்டி கீழ்ப்பாய்ச்சாய் மடிந்து அலைந்தது. 1920இல் அவருடைய உள்ளத்தைக் கவர்ந்த கதர் இயக்கம், இடுப் பிற்கு நான்கு முழத்துண்டும் தந்துவிட்டது. பிறகு அவர் வாழ்நாள் முழுதும் இதுவே இயல்பான உடை ஆனது.

தம் உடைப்பித்து ஒழிந்ததுபற்றி அவரே எழுதியுள்ளது வருமாறு:-

"அந்நாளில் யான் பிரசங்க மேடையில் எப்படிக் காணப்படுவேன்? இடுப்பில் வெள்ளிய **ஆரணி வேட்டி** ஒளிரும்; அரையில் பீதாம்பரம் திகழும். கழுத்தில் கெளரி சங்கம் பொலியும்... பள்ளிக்கூட உடை வேறுவிதம். தலையில் சரிகைக் கோடு மிளிரும். வெள்ளிப் பாகையும் நீண்ட சட்டையும் கீழ்ப் பாய்ச்சித் துகிலும் கோலம் செய் யும். சிற்சில சமயம் சரிகைத் துணியோ பட்டுத் துணியோ கழுத்தில் கிடக்கும். இக்கோலம் தேசபக்தன் ஆசிரியனா யிருந்த வரை என் உடைமையாயிருந்தது பின்னே கதர் என்னை அணைத்தது. அது பழங்கால உடைகளையெல் லாம் துறக்கச் செய்தது. என்னை அலைத்து வந்த உடைப் பித்து என்னை விடுத்து ஓட எப்படி மனங்கொண்டதோ தெரியவில்லை. அதை ஒட்டியது கதர். கதரின் ஆற்றல் என்னே! இப்பொழுது எனது உடைக்கோலம் எப்படி இருக்கிறது. இடுப்பில் நான்கு முழத்துண்டு; உடலில் ஒரு சட்டை; தோளில் ஒருசிறு குட்டை நான்கு முழத் துண்டு டன் காலம் கழிக்க என்மனம் அவாவுகிறது. ஆனால், எனது உடல் மெலிந்து குளிர் காலத்தில் போர்வையையோ சட்டையையோ நாடுகிறது **உடல் வளம் சுருங்கியது. என் செய்வேன்!"**

இவ்வாறு உடையில் தொடங்கிய எளிமையும் துறவு மனப்பான்மையும் மற்ற எல்லாத்துறைகளிலும் செல்வாக் குப் பெற்றன. உணவு முதலிய எல்லாத் துறைகளிலும் அவர் எளிமை மேற்கொண்டார் பிற்கால வாழ்வு முழுவதும் நாடு போற்றும் சான்றோராகத் தமையனாரின் குடும்பத்தில் ஒட்டி வாழ்ந்த போதிலும் யாதொரு பற்றும் இல்லாத மனத்துறவியாகவே வாழ்க்கை நடத்தினார். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராகத் திகழ்ந்தார்.

உலகில் நன்றாக வாழ்ந்து உய்வு பெற்ற நல்ல உடம்பு வேண்டும் என்பது திரு.வி.க.வின் நம்பிக்கை. உடலோம்பு வதன் இன்றியமையாமை பற்றி அவர் இளைஞர்களுக்குப் பலகாலும் அறிவுரை வழங்கியது உண்டு. உடம்பார் அழி யின் உயிரார் அழிவர் என்னும் திருமூலர் மொழியை அவர் அடிக்கடி மேடைகளில் நினைவூட்டியது உண்டு. தம் உடம்பையும் நன்கு பேணிப் போற்ற வேண்டும் என்று சில ஆண்டுகள் அதில் அக்கறை செலுத்தி வந்தார். "யான் சிலகாலம் புளி மிளகாயை வெறுத்தேன். பழச் சாற்றையும் மிளகையும் விரும்பினேன். அக்காலத்தில் யான் போகும் இடங்களிலெல்லாம் **தனிச் சமையல்** செய்யப்படும் அச் செயல் **என் உள்ளத்தை வருத்தும்**. யான் புளி மிளகாய் கலவாத உணவு உண்பவன் என்ற செய்தி தமிழ்நாடு முழு வதும் பரவியது. அவ்வுணவு எனக்குப் மிகப் பொருந்தி வந்தது. தனிச் சமையல் கட்சி என் மனத்தை மாற்றியது பிடிவாதத்தை நிறுத்தவில்லை" என்று அவர் கருத்தை எடுத்துரைத்துள்ளார். திட்டமிட்டு உணவுமுறை வகுத்து வந்த அவர் பிற்காலத்தில் எந்தத் திட்டமும் இல்லாமல், கிடைத்த உணவை மகிழ்ச்சியோடு உண்டு பழகினார். சிற்றூர்களுக்குச் சென்றபோது, அவ்விடத்து மக்கள் அன் போடு இட்ட **பொருந்தா உணவையும்** வெறுப்புக் காட்டாமல் **உண்டார்**. அதனால் அவருடைய உடலுக்கு ஓரளவு **ஊறும் நேர்ந்தது** எனலாம். பிறர்க்குத் தம்மால் சிறு துன்பமும் நேர்தலாகாது என்றும், பிறரால் துன்பம் நேரினும் மகிழ்வுடன் பொறுத்துக் கொள்ளல் வேண்டும் என்று அவர் கொண்ட கொள்கையே, தமக்கென்று சமைக் கும் முறைக்கு இடம் தராமல் செய்துவிட்டது.

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு.

என்று திருவள்ளுவர் விளக்கிய அன்புத் தவம் திரு.வி.க.வின் வாழ்க்கையில் உணவு முறையில் மட்டும் அல்லாமல் மற்ற

எல்லாத்துறைகளிலுமே விளங்கியது. எளிமை என்பது தன்னல மறுப்பாக வளர்ந்து தன்னலத் துறவாக மலர்ந்த வாழ்க்கை திரு.வி.க.வின் தூய அறவாழ்க்கையாகும்.

பிற்காலத்தில் நீரிழிவுநோயால் (சர்க்கரை நோயால்) அவருடல் மெலியத் தொடங்கியது. காலில் செருப்பு அணிந்தால், ஆணியாலோ வேறு உராய்வாலோ தோலில் புண்ணுற்றால் அந்த நோய் காரணமாக ஆறுவது அரி தாகும் என்று எண்ணி, காலில் செருப்பு அணிவதை விட்டு விட்டார். சென்னைத் தார்ச் சாலைகளிலும் கிராமப்புற கரடுமுரடான வழிகளிலும் வெறுங்காலுடன் நடந்தார். நல்ல வெயில் நேரத்திலும் தலையில் முக்காடு இட்டு வெறுங்காலுடன் அவர் ஒதுங்கி நடந்து சென்ற காட்சி கண்டோர் நெஞ்சை உருக்கியது. அவர் நீரிழிவு நோயால் காலில் புண்ணுறின் துன்பம் விளைக்கும் என்று எதற்கு அஞ்சினாரோ அதுவே இறுதி நாட்களில் வந்துற்றது. அது செருப்பு அணிந்து வந்தது அன்று. கண் பார்வை இழந்து ஒதுங்கியிருந்தபோது, கால் விரலில் புண் வந்தது. நீரிழிவு நோயின் காரணமாக அது ஆறவில்லை. மருந்துகளைப் புறக்கணித்துவிட்டு அந்தப் புண் துன்பம் பெருக்கியது; அவரது தூய உடலை- தன்னலம் மறந்த தொண்டு உடலை- படுக்கையில் கிடத்தி விட்டது.

இராயப்பேட்டை சாது அச்சுக்கூடத்தில் வேப்ப மரத்தடியில் தமிழ் முனிவராக- சாதுவாக விளங்கிய திரு.வி.க. இளமையில் அதே இராயப்பேட்டையில் முரட் டுப் பிள்ளையாக வளர்ந்தவர். முரட்டு விளையாட்டுகளில் ஈடுபட்டுப் பயன்றவர். துடுக்கானவர் அவர் மரங்கள் ஏறிக் காய்கள் பறிப்பதும் குரங்காட்டம் முதலியன ஆடுதலும் உண்டு. ஒரு முறை விழுந்து அடி பட்டபின் அத்துறையில் துடுக்கு நின்றது. கடலாடுதல் உண்டு; நண்பன் ஒருவன் கடற்சுழியில் சிக்கித் தடுமாறிய போது அவனுடைய முடியைப் பிடித்து இழுத்து கரை சேர்த்தார்; அதன்பிறகு

கடலாடுதலைத் துறந்தார். பக்கத்தில் இருந்த தோட்டங்களில் சிறுவர்களோடு கூட்டமாக புகுந்து சூறையாடியதும் உண்டு. புள்ளாட்டம் (கில்லி), கிரிக்கெட் முதலிய ஆடியது உண்டு. அந்த ஆட்டங்களில் அடிபட்டதும் உண்டு; பிறர் அடிபடச் செய்ததும் உண்டு. அத்தனை முரட்டுத் தன்மைக்கும் இடையே பிறர் துன்பம் கண்டு இரங்கும் நெஞ்சமும் இருந்தது; தீயவர்களை ஒறுத்துப் பழிவாங்கும் ஆர்வமும் இருந்தது. பக்தி நெறியில் ஈடுபாடு இருந்தது; பக்தியையும் ஒரு விளையாட்டுபோல் கொண்டு ஒழுகும் மனப்பான்மை இருந்தது. கோல் முதலிய உடற் பயிற்சியாளரின் தொடர்பும் பழக்கமும் இருந்த போதிலும் அவர்களுக்கு இயல்பான புகை பிடித்தலையும் சீட்டாடுதலையும் வெறுக்கும் நல்ல மனப்பான்மை திரு.வி.க.வுக்கு இயல்பாகவே இருந்தது.

நல்ல இயல்புகளுக்கு இடையே பகை மனப்பான்மையும் பழிவாங்கும் தன்மையும் முரட்டுப் பண்பும் அவர்க்கு ஓரளவு இருந்தன. அவருடைய தமையனார் புறக்கடையில் ஒரு பக்கத்தில் சிறு செடிகள் வைத்து வளர்ப்பாராம் யாரும் இல்லாத நேரம் பார்த்துத் தம்பி திரு.வி.க. அந்தச் செடிகளை நாசம் செய்வாராம் தமையனார்க்கும் அவர்க்கும் பாட்டியார் ஆடை தொப்பி பேனா முதலியன வாங்கி வருவாராம். நல்லவற்றை முதலில் தம்பி எடுத்துக் கொள்வாராம். தடுத்தால் பிடிவாதம் செய்து அழுது பாட்டியார் மேல் பாய்ந்து அவரை அடிப்பாராம்; உதைப்பாராம். ஒருநாள் அவர் கையில் இருந்த அப்பத்தை ஒரு பையன் பறித்துக்கொண்டு ஓடினானாம். பிற்பகல் அவன் விளையாடுவதற்கு அணுகியபோது, அவனைப் பிடித்துத் திரு.வி.க.வும் அவருடைய மற்ற விளையாட்டு நண்பர்களும் நன்றாக அடித்து அழ வைத்தார்களாம். ஒரு பையன் அவருடன் தாயம் விளையாடியபோது சிறு பூசல் மூண்டது. அந்தத் பையன் அடிப்பான்போல் தோன்றியதாம். உடனே திரு.வி.க. அடிக்க முந்திக் கொண்டு அவனுடைய

கன்னத்தில் அறை விட்டாராம். அந்தச் செய்தி அறிந்ததும் அந்தப் பையனுடைய தந்தை திரு.வி.க.வை நோக்கித் துரத்தி வந்தாராம். திரு.வி.க. ஓடி ஒளிந்து தப்பித்துக் கொண்டாராம். ஆனால், அத்துடன் விடவில்லை. அந்தத் தந்தை தெருவழியே தன்னந்தனியே போய்க் கொண்டிருந்த போது, ஒளிந்திருந்து திரு.வி.க. அவருடைய முதுகில் கல் எறிந்துவிட்டு, வீட்டுக்குள் புகுந்து கொண்டாராம். திரு.வி.க. இருந்த வீட்டுக்குப் பக்கத்தில் வாழ்ந்த கிழவர் ஒருவர் அந்தத் தெரு வழியே போகும் பிள்ளைகளை வேண்டு மென்றே மிரட்டித் தம் கைத்தடியால் அடித்து அனுப்பு வாராம் ஒருநாள் ஒரு திருமணக் கச்சேரியில் திரு.வி.க. அந்தக் கிழவரைக் கண்டார்; கறுவினார். கிழவர் பாட்டுக் கச்சேரியைவிட்டு வெளியே கிளம்பியபோது, திரு.வி.க. அவரைத் தொடர்ந்தார். கிழவர் இருட்டில் சிறுநீர் பெய் யும் போது, கீழே கிடந்த ஒரு வாழைப் பட்டையை எடுத்து முதுகில் ஓங்கி அடித்துவிட்டுத் திரு.வி.க. ஓடிவிட்டாராம், இன்னொரு கிழவர் தெருவில் பிள்ளைகள் விளையாடும் கருவிகளை எல்லாம் எடுத்து எறிந்து விடுவார். அல்லது உடைத்துப் பாழ்படுத்துவார். அந்தக் கிழவரின் மேலும் திரு.வி.க. காழ்ப்புக்கொண்டார். கிழவர் ஒரு பிரசங்கத்துக் குப் போவதைக் கண்டு, விளையாட்டு நண்பர்களைக் கூட் டிக் கிழவர் வரும் வழியில் ஒரு திண்ணையில் காத்திருந்து கிழவர் திரும்பி வந்தபோது அவரைக் கீழே தள்ளி விட்டா ராம். சடுகுடு விளையட்டில் போக்கிரித் தன்மையாக நடந்த ஒருவனைத் தள்ளி அவனுடைய கன்னத்தில் பலமுறை அறைந்ததும் உண்டாம்.

“இளமையில் விலங்குணர்வு என்னை ஆட்டியது, கருத்து வேற்றுமையுடையார் மீது பாம்பாய்ச் சீறுவேன்; புலியாய் பாய்வேன்; சொல்லுக்குச் சொல்லும் கல்லுக்குக் கல்லும் மல்லுக்கு மல்லும் விடுவேன்.” இவ்வாறு அவரே தம் இளமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். பின்னே நிலைமை மாறியது. பாம்பும், புலியும் எங்கேயோ ஓடின. “என்னை

வைவோர் மீதும் எனக்கு முனிவு தோன்றுவதில்லை கனிவே தோன்றுகிறது." இவ்வாறு தம் அறுபதாம் ஆண்டில் பொறித்துள்ளார்.

முரட்டுத் தன்மையும் கல்லுக்குக் கல் எனப் பழி வாங்கும் வன்மையும் பகை பாராட்டும் இயல்பும் எப்படி மாறின? திரு.வி.க.வே சில காரணங்களைக் கூறியுள்ளார். அந்தக் காரணங்களுள் அவருடைய இல்வாழ்க்கை அவர் நெஞ்சைப் பண்படுத்தியது என்பதே முதல் காரணமாக உள்ளது.

"பிள்ளைமையில் என்பால் விலங்கியல்பு அதிகமாயிருந்ததா? தெய்வ இயல்பு அதிகமாயிருந்ததா? முன்னையதே அதிகம் இருந்தது என்று சொல்வேன் இரண்டுக்கும் போர் நடக்கும். அஃது என் உணர்வில் விளங்கும். நாளடைவில் விலங்கியலே தோல்வியுறலாயிற்று. என்னை உண்ண எழுந்த விலங்கியல்பு எப்பொழுது குலைந்தது?... யான் பெற்ற கல்வி கேள்விகள் மட்டும் எனது விலங்கியல்பை ஒடுக்க வில்லை. அவை ஒரோ வழித்துணை நின்றிருக்கும் இல்வாழ்க்கையும் நல்லோர் கூட்டுறவும் பலதிறத்தொண்டுகளும் எனது விலங்கியல்பை ஒடுக்குதற்குப் பெருந்துணையாய் நின்றன என்று எனது அனுபவம் அறிவிக்கின்றது. விலங்கியல்பை ஒடுக்குதற்கு இல்வாழ்க்கை ஒரு பெருங் கருவி என்று வலியுறுத்துகிறேன். அவ் வாழ்க்கையை நன் முறையில் அறிவுறுத்திய திருவள்ளுவர் வாழ்க."

அவருடைய இக்குறிப்பால், இல்வாழ்க்கைக்கு அவர் இவ்வகையில் தந்த சிறப்பிடம் விளங்கும்.

துறவறத்திற்குப் பெருஞ்சிறப்பு உள்ள நாடு இது. அறுபது ஆண்டுகளுக்கு முன்பும் சுவாமி விவேகானந்தர் முதலானோர் துறவறமே சிறந்தது என வற்புறுத்தி வந்தனர். துறவு பூணாதவர்களுக்கு உய்வு இல்லை எனச் சமணம், பௌத்தம் முதலிய சமயத்தவரும் அவர்களை ஒட்டி மற்ற

சமயத்தார்களும் இந்த நாட்டில் வற்புறுத்தி வந்தனர். துறவு பூண்டவர்கள் இல்வாழ்க்கையை மிகப் பழித்துத் தூற்றியதும் உண்டு; இல்வாழ்வோரை நோக்கி, இன்னலில் கிடந்துழல அகப்பட்டவர்கள் என இரக்கத்தோடு குறிப் பிட்டதும் உண்டு. இல்வாழ்க்கை நடத்துவோரும் தம் நிலைக்காக வருந்தியதுடன், துறவறம் பெற முடியாமைக் காக ஏங்கி வாடிய நிலையே இந்த நாட்டில் நெடுங்காலம் இருந்து வந்தது. திருவள்ளுவர் இல்லறத்தைப் போற்றிய- இல்வாழ்வான் முயல்வாருள் எல்லாம் தலையானவன் என்ற கருத்து, புதுமையான கருத்தே. அறத்தையே இரு பிரிவாக்கி இல்லறத்திற்கும் துறவறத்திற்கும் நிகரான இடம் தந்தவர் அவர். அவரும் “தலைப் பட்டார் தீரத்துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றையவர்” என்று துறவிகளைப் பெரிதும் போற்றியுள்ளார். துறவறத்தைவிட, இல்லறம் உயர்ந்தது என்று அவர் கருதினார் என்று சொல்வதற்கு இடம் இல்லை. ஆனால் திரு.வி.க. அவ்வாறு கருதினார்; இல்லறமே சிறந்தது என்று வலியுறுத்துவதைத் தம் வாழ் நாள் கொள்கையாகக் கொண்டார். துறவறம் செயற்கை யானது. இறைவன் நோக்கத்திற்கு மாறானது. துறவினால் நெஞ்சம் பண்படுதல் அரிது. இல்வாழ்க்கையே முத்தி நெறிக்கு உகந்தது. துறவினால் உலகிற்குப் பல இடர்பாடு கள் நேர்கின்றன. துறவறம் பூண்டவர்கள் பலர் தம் மனத் தைப் பண்படுத்த முடியாமல் தவறு பல செய்து பிறரையும் கெடுத்து வருகின்றனர் என்ற கருத்துகளையும் பல மேடை களில் முழங்கியவர் அவர்; பல நூல்களில் வலியுறுத்திய்வர் அவர். பெண் என்றால் மாயப்பிசாசு என்றும், கீழான பிறப்பு என்றும் பழிக்கப்பட்டு வந்த நாட்டில், திருவள்ளு வரைப் போல் “பெண்ணின் பெருந்தக்க யாஉள” என்று வினா எழுப்பி விளக்கியவர் அவர். கலைஞர் அறிஞர் சமயச் சான்றோர் முதலானவர்களும் தம் தம் துறைகளில் பண்பட்டு உயரும்போது, பெண்மனம் பெறுகின்றனர் என்றும், பெண்மைப் பண்பு மிகும்போதே அவர்கள் உயர்

நிலை பெறுகின்றனர் என்றும் மனத்தாலும் பண்பாலும் மட்டும் அல்லாமல் உடல் குழைவாலும் அவர்கள் பெண் களைப் போல் மென்மையுடையவராகின்றனர் என்றும், முகத்தோற்றத்திலும் பெண்மையின் சாயலைப் பெறுகின்ற னர் என்றும், ஆகையால், பெண்ணே உயர் பிறப்பு என்றும் பலவாறு எடுத்துரைத்தவர் அவர்.

இளமையில் திரு.வி.க.வுக்கும் துறவில் ஆர்வம் இருந்தது. அவர்க்குத் திருமணம் ஆவதற்கு முன்பு அவர் சாமியார் ஆகிவிடுவார் என்று எண்ணியவர் பலர். மனைவியை இழந்தபின் மறுமணம் செய்துகொள்ள மறுத்த போதும், திரு.வி.க. துறவி ஆகிவிடுவார் என்று பலர் பேசிக்கொண் டார்கள். இளமையில் அவர் மனம் திருமணத்தில் செல்ல வில்லையாம்.

ஆரம்பச் சமயக் கல்வியும் பிறவும் என்னுள் துறவைப் புகுத்தின. வைராக்கிய சதகமும் வைராக்கிய தீபமும் மகாராஜா துறவும் பின்னைப் பட்டினத்தார் பாடலும் என்னை விட்டகல்வதில்லை. நித்திய பூசையிலும் கோயில் வழிபாட்டிலும் ஆர்வம் பொங்கியது. சாமியார் உள்ள இடங்களிலெல்லாம் என்னைக் கூப்பிடும். பல இடங்களில் உழன்றேன்; சுழன்றேன். சாமியார் உலகம் எனக்கு வெட்ட வெளிச்சமாயிற்று. **யோகிகளென்றும் ஞானிக ளென்றும் அவதூதரென்றும் துறவோரென்றும் ஆச் சாரியரென்றும் மடாதிபதிகளென்றும் திரிவோருள் பலர் அந்தரங்கத்தில் பெண்களுடன் கலப்புக் கொண் டிருந்ததைச் சில நாளில் உணருமாறு ஆண்டவன் அருள் எனக்குத் துணை புரிந்தது.**[1] இந்தப் பாவிகள் வெளிப்படையாகப் பெண்களுடன் வாழ்தலாகாதா? என்று எனது நெஞ்சம் எண்ணும்... உள்ளும் புறமும் ஒத்த உண்மை அறவோர் சிலரையும் என் கண் கண்டது; அவர்தம் நிலையை என் மனம் உணர்ந்தது. அப்பெரியோர்

1. என்றுமே மாறாதது இது

பெண்ணுலகை இழித்தோ வெறுத்தோ பேசுவதில்லை. இல் வாழ்க்கை ஏற்குமாறு எனக்கு அவர் அறிவு கொளுத்துவர். துறவு என்று வழங்குவது வெறும் உருவெளி என்பது எனக்கு நன்கு விளங்கியது"

இவ்வாறு அவர் தெளிவு பெற்றதைக் குறிப்பிட்டுள்ளார்.

துறவின் மேல் வெறுப்புக் கொண்டவராக விளங்கினார். என்றாலும், துறவறம் பூண்ட சான்றோர் சிலர் அவருடன் நெருங்கிப் பழகினார்கள். கரிகேரி மௌன சுவாமிகள், பாம்பன் சுவாமிகள், திருப்போரூர் மடத்துச் சிதம்பர சுவாமிகள் முதலானவர்கள் இங்குக் குறிக்கத்தக்கவர்கள். அவர்கொள்கையின் திட்பம் அறிந்திருந்தும், அத்துறவிகள் அவர் மீது அன்பு கொண்டிருந்தனர். திரு.வி.க.வும் துறவு என்ற நிலையை வெறுத்தாரே அல்லாமல், துறவு பூண்ட காரணத்திற்காக அவர்களை வெறுக்கவில்லை. மேற்குறித்த சான்றோர்களிடம் அளவற்ற பேரன்பு கொண்டிருந்தார்,

மண்ணினைப் பொன்னை மங்கையைத் துறந்தால்
  மாநெறி கூடுமென் றுரைத்தல்
கண்ணிலார் கூற்றாம்; கடவுளே எங்கும்
  கலந்தநீ மூவிடம் கரவோ?
எண்ணமே மாயை இயற்கையின் உயிரே
  ஈசனே வெறுப்புறு துறவாம்
புண்ணெறி எரிவால் புகுந்தநோய் போதும்
  போலியை ஒளித்தருள் செய்யே.

தாய்மையின் ஒளியே தனிமுதல் எங்கும்
  தங்குறு நின்னொளி உணர்த்தும்
தூய்மையாம் திறவு துணைபுரி தாயை
  தூற்றலும் பழித்தலும் அறமோ?
பேய்மனச் சிறியர் பேச்செ லாம்ஒழிக்கப்
  பெரியனே திருவுளம் கொள்க

வாய்மையே வளர வள்ளலே கருணை
வழிவழி வேண்டுவன் கருணை.
(பொதுமை வேட்டல், இயற்கை வாழ்வு.)

தனிமைவழி படைப்புளத்தைத்
தகர்ப்பதன்றோ வளரும்
தரணியிலே பெண்மை நலம்
தழைக்கஅரு ளாயே.
(பொதுமை வேட்டல், குறை களைவு)

இப்பாடல்களில் அவர்தம் கருத்தைத் தெளிவுபடுத்தி யுள்ளார்.

துறவைத் தூற்றிப் பெண்மையைப் போற்றி முழங்கி வந்த அப்பெரியாரின் இல்வாழ்க்கை ஆறே ஆண்டுகள் நடைபெற்றது வருந்தத்தக்கது 1912ஆம் ஆண்டில் கமலாம்பிகை என்னும் அம்மையாரை மணந்தார். கணவனும் மனைவியும் அன்பாக வாழ்ந்தனர். ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. ஒரு வாரத்தில் மறைந்தது. அடுத்து, பெண் குழந்தை பிறந்து ஓராண்டு இருந்து பெற்றோரை மகிழ்வித்துப் பிறகு துயரத்தில் ஆழ்த்திச் சென்று விட்டது. கமலாம்பிகை நோய்வாய்ப்பட்டு 1918ஆம் ஆண்டில் பிரிந்தார். அன்பு கெழுமிய இல்லறம் முடிவுற்றது.

"என் ஆருயிர் அமுதம் கமலாம்பிகை. என்னுடன் வாழ்ந்து, என் மனத்தைப் பல வழியிலும் பண்படுத்தி பெண்ணின் பெருமை முதலிய செல்வங்களை எனக்கு வழங்கி மறைந்தனள். என் வாழ்க்கைத் துணைக்கு யான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்? ஏழை என்ன நன்றி செலுத்த வேண்டும்? பெண்ணின் பெருமை விளங்க- இவ்வுலகில் நன்கு விளங்கப் பாடுபட உறுதி கொண்டேன்; அதற்கென்று என் வாழ்வை அர்ப்பணம் செய்துள்ளேன்"

இச்சொற்கள் நெஞ்சை உருக்குந் தன்மையன.

தம் வாழ்க்கையில் தமக்கு அமைந்த பல நற்பண்புகளுக்குத் தம் இல்வாழ்க்கையே காரணம் என்பது திரு.வி.க.வின் கருத்து. தம் அருமை மனைவியாரால் அவை தமக்கு ஏற்பட்டனவாம் இளமையில் அவர் பொறுமை இல்லாதவராக இருந்தார். மனைவியாரிடம் காணப்பட்ட பொறுமைப் பண்பு தமக்கு வந்து படிந்ததாம்.

"கமலாம்பிகைக்குச் சகிப்புத் தன்மை அதிகம். அதை யான் பன்முறை காணும் வாய்ப்புகளை வாழ்க்கையில் பெற்றேன். சகிப்புக்கு மூலம் பொறுமை. சின்ன வயதில் எனக்குப் பொறுமை. பெரிதும் கிடையாது. திருமணத்துக்குப் பின்னர் நான் பொறுமையாளன் என்று பலரால் போற்றப்பட்டேன். என்பால் பொறுமை பொலிவது உண்மையானால், அஃது எனது இயற்கையினின்றும் அரும்பியதாகாது. அது கமலாம்பிகையினின்று என்பால் இறங்கிக் கால் கொண்டதென்று யான் சொல்வேன்."

இவ்வாறே தாம் பெற்ற மற்ற நற்பண்புகளும் தம் இல்லறத்தின் பயனே என்பது அவர் நம்பிக்கை.

"யான் திருக்குறள் படித்தவன், என்பால் பிடிவாதம், வன்மம், முன்கோபம் முதலிய தீக்குணங்கள் புதைந்திருந்தன. வெறுந் திருக்குறள் படிப்புத் தீக்குணங்களை அறவே களையவில்லை. கமலாம்பிகையின் சேர்க்கை அக்குணங்களைப் படிப்படியே ஒடுக்கியது அவள் திருக்குறள் படித்தவள் அல்லள். எனக்கு அவளே திருக்குறளாக விளங்கினாள். மனை வாழ்க்கையில் ஈடுபடத் திருக்குறள் தொழில் நுட்பம் விளங்குவதாகிறது திருவள்ளுவர் உள்ளத்தை உணர்வதற்கு மனைவாழ்க்கை இன்றியமையாத தென்பது உள்ளங்கை நெல்லிக்கனியாயிற்று. யான் பின்னாளில் எழுதிய திருக்குறள் விரிவுரைக்கு இல்வாழ்க்கையின் அனுபவம் பெருந்துணையாய் நின்றது."

இவ்வாறு திருமணத்திற்குப் பின் தாம் வாழ்ந்த நல்வாழ்க்கை தம் மனைவியால் திருந்திய உயர்ந்த வாழ்க்கை

என்பதை அவர் நூல்களில் பல இடங்களில் பொறித்துள்ளார்.

“என் வாழ்க்கை இருகூறு உடையது. ஒன்று மணத்துக்கு முன்னைய நிகழ்ச்சிகளைக் கொண்டது. மற்றொன்று மணத்துக்குப் பிந்தைய நிகழ்ச்சிகளைக் கொண்டது. என் பிந்தைய வாழ்க்கை எனது மனைவியினுடையது என்று சொன்னால் என் உள்ளம் நிறைவு கொள்வதாகும். நாங்கள் இருவரும் ஈருடல் ஒருயிரென வாழ்ந்தோம். ஒருடல் மறைந்ததும். அதன் ஆவி என்னுள் ஒன்றியது. ஆதலின் எனது பின்னைய வாழ்க்கை மனைவியினுடைய தென்று சொல்லத் துணிந்தேன். வள்ளுவர் வாய்மொழி யின் சாரம் கமலாம்பிகை என்றோர் அணங்காகி, என் வாழ்க்கைக்குத் துணைநின்று என்னைப் பல வழியிலும் பண்படுத்தி என்னுள்ளேயே ஒடுங்கியது. ஒடுங்கிய ஆவி என்னை இயக்குகிறது; தொண்டு செய்விக்கிறது.”

கனிவான இச்சொற்கள், அவர் நெஞ்சில் அத்துணை வியார் பெற்றிருந்த உரிமையன்பை விளக்கி நிற்கின்றன.

தம் வாழ்க்கையைப் பற்றி அவர்க்கு ஒரு நம்பிக்கை இருந்தது. அதை அவர் தம்மோடு நெருங்கிப் பழகுவோரிடம் அடிக்கடி சொல்லியுள்ளார். கடவுள் தமக்கு தொண்டுச் செல்வம் தவிர வேறு எவ்வகைச் செல்வமும் தர விரும்பவில்லை என்றும், அந்தத் திருவுளம் அறிந்தே அமைதியாக வாழத் துணிவு வந்துவிட்டது என்றும் அவர் ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டிருந்தார். மனைவி மக்களோடு வாழும் செல்வமும் தமக்கு வாய்த்தால் தொண்டுக்குக் குறையாகும் என்றே மனைவிமக்களும் இல்லாதவாறு இறைவன் விதித்ததாக அவர் நம்பினார். தமக்கு யாரேனும் எவ்வகை உதவியேனும் செய்ய ஆசைப்பட்டு அவரிடம் தெரிவித்தால், அவர் புன்னகை புரிந்து மறுத்துவிடுவார். “இறைவன் திருவுளம் எனக்குத் தெரியும். நீங்கள் எவ்வளவு ஆசைப்பட்டாலும் அது நிறைவேறாது. எனக்காக எந்த

முயற்சியும் செய்யாதீர்கள். அந்த முயற்சியை வேறு பயன் உள்ள வழியில் திருப்புங்கள். உங்கள் அன்பு ஒன்றே எனக்குப் போதும்" என்று தடுத்து விடுவார். அவருடைய நூல்களுள் ஒன்றைப் பல்கலைக்கழக வகுப்புக்குப் பாட நூலாக்குமாறு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. முதலில் அவர்க்குத் தெரியாமலே அந்த முயற்சி செய்யப்பட்டது. அதனால் ஏதேனும் வருவாய் கிடைத்தால், அவர்க்கு உதவியாகுமே என்ற ஆர்வத்தாலும் பாட நூலாக்கப்பட்டால் மாணவர் ஆயிரக்கணக்கானவர் படித்துப் பயன் பெறுவது கேட்டு அவர் உள்ளம் மகிழுமே என்ற விருப்பத்தாலும் அம்முயற்சி தொடங்கப்பட்டது. சில வாரங்கள் கழித்து அது பற்றி அவர் கேள்வியுற்றதும் "என் பொருட்டு ஏன் இவ்வளவு முயற்சி? எனக்காக மேற்கொள்ளப்படும் இந்த முயற்சிக்கு எவ்வளவோ இடையூறுகள், இந்த நாட்டில் ஏற்படப் போகின்றன. பாருங்கள் என்னிடம் வந்து பழகுகின்றவர்களும் அப்படி இடையூறுகள் செய்தாலும் வியப்பு இல்லை. முயற்சி வெற்றி பெறாது. பாருங்கள். இப்போதே சொல்லி வைக்கிறேன்" என்று புன்னகையோடு சொல்லி முயற்சியைத் தடுக்கலானார். முயற்சி விடாது செய்யப் பட்டது. ஆனால் இறுதியில் அவர் கூறியவாறே பயன் விளையாமற் போயிற்று.

அவருடைய வாழ்நாளுக்குப் பிறகே, அவர் பெயரால் ஒரு பெரிய உயர்நிலைப் பள்ளி சென்னை மேற்குப் பகுதியில் அமைந்து புகழ்பரப்பலாயிற்று. பள்ளி ஏற்பட்டுப் பல ஆண்டுகள் ஆனபிறகு சென்னையில் உள்ள பூங்காக் களில் பெரியதாகிய செனாய் நகர்ப் பூங்காவுக்கு **திரு.வி.க. பூங்கா** என அவர் பெயரைச் சென்னைமாநகராட்சி மன்றம் இட்டது. அதற்கும் இடையூறுகள் ஏற்பட்டன. ஆனால் திரு.வி.க. இடம் பேரன்பு பூண்ட பெரிய உள்ளங்கள் இடையூறுகளைத் தகர்த்தன. **திரு.வி.க. நகர்** என்று வடசென்னையின் ஒரு பகுதி வழங்களாயிற்று

இலங்கையில் ஒரு பள்ளி அவர் பெயரால் நடைபெறு கிறது.

அவர் வாழ்ந்த காலத்தில் அவர்க்கு இத்தகைய சிறப்பு கள் அமையவில்லை. அவரும் அவற்றைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. பொருட்செல்வம் வாய்க்காதது பற்றியும் பிற நலங்கள் கிட்டாதது பற்றியும் ஒரு சிறிதும் அவர் சோர்வுறவில்லை. மன நிறைவோடு இடைவிடாத் தொண்டு ஆற்றிவந்தார். ஆயினும் அதுபற்றித் தம் வாழ்க் கைக் குறிப்புகளில் பொறித்துள்ள சொற்கள் கற்போர் நெஞ்சை உருக்குவனவாக உள்ளன.

"நான் பிறந்து வளர வளர என் தந்தையார் வைத்திருந்த நிலபுலன்களும், ஈட்டிய சிறு பொருளும் படிப்படியே கரைந்தன. என் வாழ்க்கையாதல் பொருள் திரட்ட இடம் பெற்றதா? இல்லை. யான் ஸ்பென்சர் கம்பெனியை விடா திருந்தால் பின்னாளில் பெருஞ் சம்பளம் பெறுவோனாகி யிருப்பேன்; வெஸ்லி கல்லூரியினின்றும் விலகாதிருந்தால் பல திறப் பாடபுத்தகங்கள் எழுதியிருப்பேன்; பொருட் செல்வம் குவித்திருக்கும். பொருட் செல்வர் சிலர் எனக் குத் துணைபுரிய வந்த போதும், அதை ஏற்க என் மனம் இசையவில்லை எனது உடல் நலனுக்கென்று சிறுசிறு உதவி கள் கிடைக்கும். அவைகளும் எனக்குப் பெரிதும் பயன் பட்டதில்லை... பர்மா, மலேயா முதலிய இடங்களினின்றும் தாய் நாடு திரும்பும் சில நேயர்கள் எனக்கு நல்ல நல்ல படுக்கைகள், தலையணைகள், கம்புகள், விசிறிகள் முதலி யன கொண்டு வருவார்கள். அவைகட் கென்று எப்படியோ சிலர் போதருவர். ஒருவர் அன்பு மிக அழகிய வெல்வெட் டுப் படுக்கையாய் வந்தது அதுதான் வந்த வாரத்திலேயே ஒரு புலவரை எளியேன் வீட்டுக்கு அழைத்தது. அவருள் புகுந்தது. புலவர் மனம் வெல்வெட்டுப் படுக்கை மீது நடந்ததை யான் உணர்தேன். அஃது அவர்க்குக் கொடுக்கப் பட்டது. இன்னொருவர் அன்பு ஓர் அழகிய விசிறியாய்த்

திரண்டது. அது மூன்று நாள் என் வயத்தில் இருந்தது; நான்காம் நாளே என்னைக் காண வந்த ஒரு சந்நியாசி யினுடன் சென்றது திருவண்ணாமலையில் ஓர் இரவு ஒருவர் பால் கொணர்ந்தனர். சில திராட்சை உண்டு பால் அருந்தலாம் என்று இருந்தேன். அங்கே அந்நேரத்தில் ஒருவர் பசியுடன் வந்தார். பாலும் பழமும் அவர்க்கு உணவாயின. எனக்கென்று வாதுமைப் பழம் முதலியன வீடு சேரும். அவை விருந்தினர்க்கோ மற்றவர்க்கோ பயன் படும். இதற்கு விளக்கம் யாரைக் கேட்டல் வேண்டும்? இயற்கை இறையையன்றோ கேட்டல் வேண்டும்? மனைவி மக்கள் ஒரு பெருஞ்செல்வம். அச்செல்வமாதல் என் வாழ்க்கையில் நிலைத்ததா? இல்லையே... என் வாழ்க்கை ஒருவகைச் செல்வம் பெற்றது. அது தொண்டுச் செல்வம். என் மாட்டுப் பொருட் செல்வம் குவிந்திருந்தால், என் வாழ்க்கை தொண்டுச் செல்வத்தை அடைந்திருக்குமோ என்னவோ, தெரியவில்லை. என்பால் தொண்டுச் செல்வம் பெருகுமாறும், பொருட்செல்வம் பெருகாதவாறும் அருள் சுரந்த இயற்கை இறையை வாழ்த்தல் வேண்டாவா? அது வாழ்க"

செல்வமும் இன்றிச் சீர்மனை இன்றிச்
சிறக்குநன் மக்களும் இன்றிப்
பல்வளம் இன்றிப் பணித்தனை வாழப்
பரமனே அதனுளம் காண
வல்லமை உண்டோ வாழ்க்கையை வகுக்கும்
வள்ளல்நீ அதன்படி ஒழுகிச்
செல்வதென் கடமை சிறுமையால் இடையில்
செய்தஎம் பிழைபொறுத் தருளே.

செல்வமோ சிறப்போ சேண்மையில் நின்று
திகழ்தரும் போதெலாம் தடைகள்
ஒல்லெனத்தோன்றும் உள்ளமும் மாறும்
உலகமும் நகைசெயும் அரசே

செல்வமும் சிறப்பும் தெய்வமே உன்றன்
திருவடி மலரெனக் கொண்டு
நல்லவே பொழுது போக்குவன் நடுவில்
நண்ணிய பிழைபொறுத் தருளே.

இளமையில் கருத்து வேற்றுமை உடையவர் மீதும் பாம்பாய்ச் சீறிப் புலியாய்ப் பாய்ந்து வந்த அவர் வளர்ந்து பண்பட்ட பிறகு, பகைவரிடத்தும் பழித்தவரிடத்தும் அன்பு பாராட்டி இயன்ற உதவி புரியும் பெருந்தகை ஆனார்.

“என்னைப் பொறுத்த அளவில் யான் எவரிடத்திலும் பகைமை பாராட்டுவதில்லை. பிறர் என்னிடம் பகைமை பாராட்டாமல் இல்லை.”

“சிலர் பொருளுதவி நாடி என்னிடம் வருவர். இயன்ற உதவி புரியுமாறு தமையனாரிடம் சொல்வேன். இரண்டொருவர் அவ்வுதவி பெற்றுச் செல்வர்; மற்றவர் தாம் எதிர்பார்த்த தொகை வேண்டுமென்று வலியுறுத்துவர். பெருந்தொகைக்கு யான் எங்கே போவேன்? கூட்டங்களிலும் மற்ற இடங்களிலும் அவர்வாய் என்னை வையும். யான் வேலைச் சூழலிடை நெருக்குண்டு கிடைக்குங்கால் சிலர் கட்டுரை கேட்பர். ‘வேலைச் சூழல்; மன்னிக்க’ என்பேன். சமயம் நேரும் போது அவரது எழுதுகோல் என்னைப் புடைக்கும். காரணமின்றிப் பொறாமை பூக்கும் நெஞ்சினரையும் கண்டிருக்கிறேன். கருத்து வேற்றுமை காரணமாகவும் கட்சிப் பிணக்கு காரணமாகவும் இகல் கொண்டு என்னைத் தாக்குதலில் மனம் செலுத்துவோரும் உளர். இன்னோரன்னவர் உள்ளத்திலும் என்னைப் பொறுத்துப் பகைமை மூட்டாத வாழ்க்கை எனக்குக் கிடைக்குமா? இது பேராசையாகுமா? எவரிடத்தும் பகைமை பாராட்டாத அத்தன்மையை என்பால் படிவித்தவன் இறைவன். என்னைப் பொறுத்துப் பிறர் உள்ளத்தும் பகைமை எழாத நிலை ஒன்றிருக்குமாயின், அதை எனக்கு வழங்குமாறு அவ்விறைவனை வேண்டுகின்றேன்.”

4. தொண்டு

திரு.வி.கலியாணசுந்தரனார் ஓர் ஒளிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்து எளிய வாழ்வே வாழ்ந்தவர். பிறப்பும், வாழ்வும் எளிமையாக இருந்தபோதிலும், அவர் தம் எழுத்திலும் சொல்லிலும் செயலிலும் பெருமை பல விளங்கின. அவர் இணையற்ற எழுத்தாளர்; கேட்டார்ப் பிணக்கும் பேச்சாளர்; அறநெறி பிறழாச் செயலாளர் இதழ் ஆசிரியராகவும் நூலாசிரியராகவும் விளங்கி அவர் தமிழ் மொழிக்குச் சிறந்த எழுத்துப்பணி புரிந்துள்ளார். அவருடைய எழுத்துகள் இளைஞரின் உள்ளங்களைக் கவர்ந்து, அவர்களின் வாழ்க்கையைத் துவக்கியது. அவர்தம் தமிழ்நடை பீடும் பெருமிதம் வாய்ந்தது. பேச்சுத் துறையிலும் அவர் ஆற்றிய தொண்டு அளப்பரிது. அவர் சென்று பேசாத ஊர் இல்லை; ஏறாத மேடை இல்லை எனலாம். சமயம், இலக்கியம், அரசியல், சமுதாயச் சீர்திருத்தம் முதலான எல்லாத் துறையும் அவர்தம் பேச்சுத் தொண்டால் பயன் பெற்றன.

அவர் மேடை ஏறிக் கண்ணைச் சிமிட்டி இடக்கைச் சுட்டு விரலைக் காட்டிக் காட்டிப் பேசத் தொடங்கினால் அவருடைய உள்ளமே மக்களோடு பேசுவதாய்த் தோன்றும், உள்ளொன்று புறமொன்று இல்லாமல் அவர் உள்ளத்தின் உணர்ச்சியோடு ஒன்றிப் பேசிய பேச்சுக்கள் அத்தகையவை.

அரசியலிலும், தொழிலாளர் சங்கத்திலும் சமுதாயச் சீர்திருத்தத் துறையிலும் திரு.வி.க. ஆற்றிய அருஞ்

செயல்கள் பல. அரசியலில் அறநெறியைப் போற்றும் மாண்பும் தன்னலம் நாடாத தகைமையும் அவருக்குத் தனிப்பெருமை தேடித்தந்தன. ஆசியாவிலேயே முதல் முதலாகத் தொழிற்சங்கம் அமைத்த பெருமை, திரு.வி.க.வும் வாடியாவும் சேர்ந்து முயன்ற கூட்டு முயற்சியை அடிப் படையாகக் கொண்டதே ஆகும். சமுதாயத் துறையிலும், அவர் ஆற்றிய சீர்திருத்தப் பணிகள் பல. பிறரைப் பகைக் காமல் தூற்றாமல் அமைதியாகவும் உறுதியாகவும் அவர் மேற் கொண்டு ஆற்றிய அந்தப் பணிகள் போற்றத் தக்கன. சாதி வேறுபாடுகளும், மூட நம்பிக்கைகளும், கண்மூடி வழக்கங்களும் ஒழிந்தால் தான் நாடு உய்யும் என்று அவர் தெளிவாக உணர்ந்தமையாலேயே அப்பணிகளையும் மேற் கொண்டார் என்பதற்குப் பின்வரும் அவருடைய பாட்டு களே சான்றாகும்;

பிறப்பிலே சாதி மதத்திலே சாதி
பேசிடும் மொழியிலே சாதி
நிறத்திலே சாதி நாட்டிலே சாதி
நீதியில் நிறையினில் சாதி
அறத்தினிலே சாதி ஆலயம் சாதி
அழுகிய பிணத்திலும் சாதி
புறத்தகம் சாதி நாற்றமே எங்கும்
புங்கவ அழித்தல் நிற்கு அரிதோ?

சாதியும் மதமும் சம்பிர தாயச்
சாத்திரச் சூத்திரச் சழக்கும்
சூதுடை வழக்க ஒழுக்கமும் சூழ்ந்தது
தொல்லருள் நெறியினை மறைத்துச்
சோதியே உலகை அரித்துணல் கண்டும்
சோதனை என்றுநீ இருந்தால்
ஆதியே எளியேம் செய்வதொன்று அறியேம்
அருள்நெறி ஓம்புக அரசே.

திருநெறி என்னும் செடிவளர் போழ்தில்
சீறியே அலகையாய் வீறிப்
பெருகிய சாதி முதலவெங் கொடிகள்
பிறங்கலாய்ப் பிறங்கலாய் மண்டி
அருளொளி படரா தடக்கினால் உலகில்
அருநெறி எங்ஙனம் ஓங்கும்
உருகிய உளத்தால் உன்னடி போற்றும்
உண்மையை உணர்ந்தருள் அரசே.

(பொதுமை வேட்டல்—முறையீடு)

5. விடுதலைப் போர்

1921ஆம் ஆண்டில் ஒரு தமிழ் இதழில் அதன் ஆசிரியர் தம் தலையங்கத்தைப் பின்வருமாறு முடிந்திருந்தார்:-

“சகோதரிகளே! சகோதரர்களே!! எதற்கும் அஞ்சு வேண்டா. ‘அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை’ என்ற திருவாக்கு நமது தமிழ் நாட்டில் பிறந்ததன்றோ? தமிழ் மக்களே! எழுதுங்கள்! அஞ்சாதே யுங்கள். பொன், பொருள், பூமி, காணி, மனைவி, மக்கள், உற்றார், பெற்றோர் மீது கவலை வேண்டா. திடீரென மரணம் நேர்ந்தால் நம் உயிர்ச் சார்பும் பொருட் சார்பும் உடன் வருமோ? எல்லாவற்றையும் எல்லாரையும் காக்க ஓர் ஆண்டவன் இருக்கிறான். அவன்மீது பாரத்தைச் சுமத்தி, வந்தே மாதர முழக்கத்தோடு ‘அஞ்சாமை’ என்னும் ஞான வாளேந்தி எழுதுங்கள்.”

மற்றொருநாள் பின்வருமாறு எழுதியிருந்தார்:-

“ஒத்துழையாமை இயக்கத்தில் தலைப்பட்டிருப்போர் உடல் பொருள், ஆவி மூன்றையும் கருதாது தேச சேவை செய்ய முந்துதல் வேண்டும். இம் மூன்றினும் பற்றுக் கொண்டு ஒத்துழையா இயக்கத்தில் சேர்வது அவ்வியக்கத் துக்குத் தோல்வி தேடுவதாகும் மனிதர்களுக்கு உலகத்தில் எத்தனையோ துன்பங்கள் உண்டு. குடும்பங்களிலும் தொழில் முறைகளிலும் பிறலௌகிக காரியங்களிலும் எத்தனையோ இடையூறுகள் நேர்கின்றன. நாள்தோறும் நீதி மன்றங்களில் விசாரணைகள் நடந்து கொண்டே யிருக்கின்றன. எத்தனையோ பேர் தண்டனை அடைகின்ற னர். எண்ணிறத்தார் மரணம் அடைகின்றனர். மனித

வாழ்க்கைக்குத் துன்பம் இல்லாத காலம் இல்லை என்று கூறலாம். இத்துணைத் துன்பங்களை மனிதர் அனுபவித்துக் கொண்டே காலம் கழிக்கிறார். இவ்வளவு துன்பங்களைத் தங்கள் பொருட்டு ஏற்கும் சகோதரர்கள் தேச சுதந்திரத் தின் பொருட்டு ஏன் பலவகைத் துன்பங்களை ஏற்கலா காது. என்றைக்காவது மரணம் அடைவதைப் பார்க்கிலும், பிறர் பொருட்டு வாழ்ந்து மரணம் அடைவது போற்றத் தக்கது. தம் பொருட்டு வாழ்ந்து இறப்போர் அடைவது நரகம், பிறர் பொருட்டு வாழ்ந்து இறப்போர் அடைவது மோட்சம். இவ்வுண்மை உணர்ந்தோர் தேச சுதந்தரத்துக்கு எவ்விதத் துன்பத்தையும் ஏற்க ஒருப்படுவர். தேசத்துக்காகச் சில துன்பங்களை ஏற்றே தீரல் வேண்டும். துன்பங்களுக்கு அஞ்சி தேசத்தை மறப்பது பெரும் பாவம்."

இவ்வாறு நாட்டுப் பற்றோடு சமய உணர்வையும் கலந்து எழுதித் தமிழர் உள்ளங்களை விடுதலைப் போரில் ஈடுபடச் செய்தவர் திரு.வி.கலியாண சுந்தரனார்.

மேலே குறித்த வேண்டுகோளின் இறுதியில் இராமலிங்க சுவாமிகளின் பாட்டு ஒன்றைப் பொறித்திருந்தார். இடை யிடையே திருநாவுக்கரசரின் அடிகளும் கருத்துக்களும் மற்றத் தமிழ்ச்சான்றோர்களின் கருத்துகளும் கலந்து வருதல் அவருடைய எழுத்தின் இயல்பாக இருந்தது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னே இவ்வாறு தமிழ்ச் சுவை கலந்து நாட்டுப்பற்றை வளர்த்த பெருமை திரு.வி.க. வுக்கு உரியதாகும்.

அரசியல் தொண்டு என்றால், மேடை ஏறிப் பேசுதல் என்ற அளவில் பெரும்பாலும் நிற்கும்; சிலர்க்கு மேடைப் பேச்சு என்பதோடு இதழ் ஆசிரியராய் விளங்கி எழுத்துத் தொண்டு புரிவதும் சேரும். திரு.வி.க. இந்த இருவகையாலும் அரசியல் தொண்டு செய்தவர்.

அரசியல் ஆர்வத்தின் காரணமாக, ஆங்கிலேயரால், நடத்தப்பட்ட ஸ்பென்ஸர் கம்பெனியில் செய்து வந்த தொழிலை உதறித் தள்ளினார். அரசியல் கூட்டங்களில்

மிடுக்கு வாய்ந்த அழகிய தமிழில் பேசும் வீரர் ஆனார். மறுபடியும் அவருடைய வாழ்வு தமிழாசிரியராய்ப் பணி செய்யும் அளவில் கட்டுப்பட்டது. அரசியல் ஆர்வம் அந்த அளவிலும் 'தேசபக்தன்' என்னும் செய்தித்தாளுக்கு ஆசிரியராக முன்வந்தது. கல்லூரி ஆசிரியர் தொழிலை உதறித் தள்ளினார். அந்தப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்து திரு.வி.க. ஆற்றிய தொண்டினைப் பாராட்டி, அவருக்குப் பின் அந்தப் பதவியை ஏற்ற **வ.வே.சு. ஐயர்** பின்வருமாறு எழுதியுள்ளார்.

"ஸ்ரீமான் திரு.வி.கலியாணசுந்தர முதலியார் அலங்கரித்த பத்திராசிரிய ஸ்தானத்தில் உட்காருவதற்கு எனக்கு அச்சமாக இருக்கிறது. அவரது சொல்வன்மையும் தீரமும் நேர்மையும் கலங்காமையும் பாரபக்ஷமின்மையும் அவசியம் நேர்ந்தபோது காட்டிய நிர்த்தாக்ஷணியமும் பத்திராசிரியர் தொழிலுக்கே பூஷணங்களாக விளங்கின."

திரு.வி.க.வின் அரசியல் தொண்டு 'தேசபக்தன்' பத்திரிகைக்கும் பல இன்னல்களை விளைத்தது. இருமுறை அதற்குப் பொறுப்புக் (ஜாமீன்) கட்டணம் கட்ட வேண்டி நேர்ந்தது.

அவர் தலைமை தாங்கி வீர முழக்கம் செய்த மாநாடுகள் கணக்கற்றவை. தாலூக்கா காங்கிரஸ் மாநாடு முதல், மாநில மாநாடு வரையில் பலவற்றிற்குத் தலைமை தாங்கி நாட்டுணர்ச்சியைப் பரப்பினார், தாம் நல்ல தமிழில் பேசியதும் எழுதியதும் மட்டும் அல்லாமல் மாநாடுகளின் நடவடிக்கைகள் யாவும் தமிழிலேயே நடைபெறச் செய்தார். தாய் மொழியிலேயே யாவும் நடக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து வெற்றி பெறச் செய்து, ஆங்கிலத்தின் வேண்டாத செல்வாக்கை ஒழித்தார்.

எழுத்து, பேச்சு என்ற அளவில் மட்டும் அவருடைய அரசியல் தொண்டு நிற்கவில்லை. தொழிலாளர்களைத் திரட்டி ஒன்றுபடச் செய்தார்; தொழிற்சங்கம் அமைத்தார். முதல் முதல் இந்தியாவில் தொழிற் சங்கம் ஏற்பட்டது

R- 263276
RACK : 23F:3

சென்னையிலே ஆகும். அதன் அமைப்புக்கும் வளர்ச்சிக்கும் முதற்காரணமாக இருந்தவர் திரு.வி.க. அவர் பல ஆண்டுகள் அதன் தலைவராக இருந்து நடத்தி வந்துள்ளார். ஒரு முறை சென்னையில் பெரிய வேலை நிறுத்தம் நடந்த போது சென்னை சர்க்கார் திரு.வி.க.வை நாடு கடத்தத் திட்டமிட்டனர். அப்போது இருந்த அமைச்சர்கள் தொழிலாளர்களின் பலத்தையும் திரு.வி.க.வின் செல்வாக்கையும் நன்றாக உணர்ந்து, நாடு கடத்துவதால் பெருந் தீங்கே விளையும் என்று தெரிந்து, கவர்னரிடம் சொல்லி அவ்வாறு செய்யாதவாறு தடுத்தனர். அவருடைய முதுமையிலும் தொழிலாளரோடு அவர்க்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. முதுமையில் நடத்திய மற்றொரு வேலை நிறுத்தத்தின் போது அரசாங்கம் அவரைச் சிறைபடுத்தியது; அவருடைய உடல் நிலை காரணமாக, வீட்டை விட்டு வெளியே செல்லாதவாறு அகச்சிறை செய்தது.

திரு.வி.க. திலகரிடத்திலும் காந்தியடிகளிடத்திலும் பேரன்பு கொண்டவர். காந்தியடிகளின் சொற்பொழிவுகளை மொழி பெயர்த்துச் சொல்லும் கடமை திரு.வி.க.வுக்கு வாய்த்தது அதனால் காந்தியடிகள் அவரை மொழி பெயர்ப்பாளர் என்று குறிப்பிடுவது வழக்கம்.

1922 மார்ச்சுத் திங்களில் காந்தியடிகள் ஆறு ஆண்டுகள் சிறை எனத் தண்டிக்கப்பட்ட போது, திரு.வி.க. எழுதிய எழுத்துக்கள் உள்ளத்தை நெக்குருகச் செய்தன:-

"பாரத மாதாவே! உலகமெல்லாம் போற்றும் காந்தியடிகளை ஈன்ற தாயே! உன் பெருமை என்ன! அரசுகள் அழியும்; அரண்மனைகள் அழியும்; கோட்டைகள் அழியும்; சேனைகள் அழியும்; காந்தியை ஈன்ற உன் புகழ் அழியுமோ? மற்ற மாதரசிகள் பட்டாடைகள் தாங்கி இரத்தினாபரணங்கள் அணிந்து, களித்து, இறுமாந்து அரியாசனத்தில் வீற்றிருக்கிறார்கள். எமது அருமை அன்னாய்! நீயோ கதருடை தரித்துச் சிறையில் இருக்கிறாய். இயற்கை அரியாசனம் உனக்கு இருக்கிறது. பரதேச உடைகளை அணியாது நிர்வாணமாக இருந்த நீ, இப்பொழுது

Dr. T. P. M. LIBRARY
263276

அரையில் மட்டும் கதருடைய அணிந்திருக்கிறாய். நல் வாழ்வை உனக்களிக்க உன் புதல்வர்கள் முயன்றுவருகிறார் கள். அவர்கட்கு அருள் செய். வந்தே மாதரம்"

"இங்கிலாந்தே! உனது அரசு கிறிஸ்து தர்மத்தை அடிப்படையாகக் கொண்டியங்குவது. உன் பெயரால் இங்கு எம்மை ஆளும் அதிகார வர்க்கத்தார் கிறிஸ்து போன்ற காந்தியடிகளை ஓர் உலகச் சட்டத்தால் கட்டி யிருக்கிறார். உனக்கு உண்மை வேண்டாவா? உண்மை காந்தியடிகள்; அன்பு காந்தியடிகள்; பொறுமை காந்தியடி கள் மனிதர்கள் செய்த சட்டக்கண் கொண்டு காந்தியடி களை நோக்காதே; கிறிஸ்துவக் கண் கொண்டு நோக்கு. உண்மையும் அன்பும் பொறுமையும் புலனாகும்."

இவ்வாறு அரசியலில் அறவோராய் விளங்கி நெறிபிற ழாமல் பேசியும் எழுதியும் தொண்டு ஆற்றி வந்த திரு.வி.க. 1926 ஜூலைத் திங்கள் 9ஆம் நாளில் கட்சி அரசியலைத் துறந்தார். இருபது ஆண்டுகளாக ஆற்றிய கட்சித் தொண்டு முடிந்தது.

கட்சி அரசியல் வேறு, பொதுவான அரசியல் தொண்டு வேறு என்பது அவர் கண்ட தெளிவு. கட்சி அரசியலை விட்டு விலகினாரே அன்றி, நாட்டில் அரசியல் உணர்வும் விடுதலை வேட்கையும் முன்னேற்ற ஆர்வமும் பெருகுவ தற்கு ஓயாமல் தொண்டு ஆற்றி வந்தார். ஒரு முறை ஒரு கல்லூரித் தமிழ் மன்றம் அவரைச் சொற்பொழிவுக்கு அழைத்தது. அரசியல் பேசாமல் இருக்க வேண்டும் என அதன் தலைவர் குறிப்பிட்டார் ஆங்கில ஆட்சி நிலவிய காலம் ஆகையால், தலைவர் அவ்வாறு ஓர் அணைகோல முயன்றார். "அரசியல் தவிர வேறு எதுவும் பேச மாட் டேன்; விருப்பமாக இருந்தால் அழைக்கலாம்" அவர்க்கு அரசியலில் இருந்த ஆர்வம் என்றும் தணியவில்லை ஆனால் 1926க்குப் பிறகு அவருடைய மனம் கட்சி, அரசிய லில் வெறுப்பையே வளர்த்து வந்தது. அந்த ஆண்டிலே அவர் பின்வருமாறு உணர்ந்து எழுதினார்.

"இக்காலத்தைப் போன்ற கொடுங்காலத்தை நமது நாடு கண்டிருக்குமோ என்று நானும் ஐயுறுகிறேன். அரசியல் கட்சிப் பிணக்குகளும், தேர்தல் பிரச்சாரத்தில் கயவர்கள் புனைந்துரைக்கும் பொய் புரட்டுகளும், கட்சிப் பற்றால் உண்மைகளைத் திரித்துக் கூறும் பத்திரிகைகளும் மலிந்து திரண்டு குவியும் இந்நாளில் ஒருவரை ஒருவர் ஐயுறல் இயல்பாகிவிட்டது... அரசியல் தொண்டில் தலைப்பட்டுள் ளார் நிலைமிகவும் இரங்கத் தக்கதாயிருக்கிறது. ஒருவர் உள்ளக்கிடக்கையை மற்றொருவர் உணராது, தமது உள்ளக் கண்ணுக்குத் தோன்றுமாறு அவருள்ளத்தையும் கொண்டு பொய்களைப் புனைந்துரைக்கிறார். அப் பொய்கள் நாட்டையே பாழ்படுத்துகின்றன."

1926இல் மேற்கூறியவாறு எழுதிய திரு.வி.க. பதினெட்டு ஆண்டுகள் கழித்து 1944ல் என்ன எழுதினார் எனக் காண்போம்.

"கல்வி கேள்வி ஆராய்ச்சி ஒழுக்கம் முதலியவற்றான் தம்மைப் பண்படுத்திக்கொண்டோர், அரசியல் வாழ்க்கை யில் புகுவரேல், அவர் காணும் ஆபாசங்கள் அவரைத் தூய்மைப்படுத்தவே துணை புரியும் மற்றவர் அரசியல் வாழ்க்கையில் புகநேரின். ஆபாசங்கள் அவரை அரக்கராக் கும்; ஈனராக்கும்."

இதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேளையில் உணர்கின்றனர்; ஆனால் தெளிவுறுவதில்லை. வாழ்க்கை வானத்தில் உண்மை எல்லோர்க்கும் புலனாகிறது. ஆனால் பலர்க்கு மின்னல் போல் தோன்றி உடனே மறைகிறது. ஒரு சிலர்க்குத்தான் பகலவன் ஒளிபோல் தோன்றி நின்று விளக்கம் செய்கிறது. அந்த ஒளிபெற்றுத் தெளிவுற்ற அரசியல் சான்றோர்களில் திரு.வி.க. ஒருவர். விடுதலை வேட்கை இருந்த அளவிற்கு அறநெறிப் பற்றும் அவருடைய நெஞ்சத்தில் குடிகொண்டிருந்ததே அதற்குக் காரணம் ஆகும்.

6. அரசியல்

திரு.வி.க சாது என்றும் இராயப்பேட்டை முனிவர் என்றும் பெயர் பெற்றவர். ஆனால் அவர் பிறவியில் சாதுவான இயல்பு பெற்றவர் அல்லர்; வளர்ச்சியால் பண்பட்டுச் சாது ஆனவர் அவர். துடுக்குத் தன்மையும் போராட்ட இயல்பும் பிள்ளைப் பருவத்தில் அவரிடம் நிறைந்திருந்தன. உணர்ச்சி வேகமும் எதிர்ப்பாற்றலும் இளமையில் குடி கொண்டிருந்தன. அரசியல் தொண்டாற்றிய காலத்தில் ஆவேசம் அவரிடம் இருந்தது 1919ஆம் ஆண்டில் தேசபக்தன் ஆசிரியராகப் பணிபுரிந்தபோது, அந்த அலுவலகத்தில் சோதனை செய்யப் போலீஸ் இன்ஸ்பெக்டர் இருவர் புகுந்து பலவற்றை ஆராயத் தலைப்பட்டனர். வெளியே சென்றிருந்த திரு.வி.கவுக்குச் செய்தி எட்டவே, அவர் விரைந்து ஆத்திரங்கொண்டார். "யார் ஆணையால் இங்கே வந்தீர்கள்" என்று அவர்களைக் கேட்டாராம். "ஆணை தேவை இல்லை" என்று மறுமொழி வந்ததாம் உடனே வெளியே போகுமாறு திரு.வி.க. அவர்களை நோக்கிக் கூறினாராம். "எங்களுக்கு உரிமை உண்டு" என்றார்களாம் அவர்கள் இருவரும். "உரிமையா?" என்று கூறியபடி திரு.வி.க. அவர்களை வேகமாக நெருங்கினாராம். "மரியாதை தேவை" என்று சொல்லியபடி அவர்கள் வெளியேறினார்களாம். அந்தக் காட்சியை அப்போது அங்கிருந்த தேச பக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளை பார்த்து மலைத்தாராம். "நீங்கள் போலீஸாரைப் பிடித்துத் தள்ளப் பாய்ந்தது தவறு. உங்கள் ஆணையை அவர்கள் பெறத் தேவை இல்லை. நீங்கள் தமிழ் ஆசிரியர், நான் வக்கீல். நான்

சொல்வதைக் கேளுங்கள்" என்றாராம் வ.உ.சி. அந்த நிகழ்ச்சி திரு.வி.க.வின் உள்ளத்தில் இருந்த வேகத்தைக் காட்டுவதாகும்.

1919இல் ஒரு மாநாட்டில் திரு.வி.க. ஒரு தீர்மானம் கொண்டு வந்து பேசியபோது அதை எதிர்த்தவர்கள் கலியாணசுந்தர முதலியாரின் ஆவேசப் பேச்சுக்கு இரையாகாதீர்கள்" என்றே எதிர்த்துக் கேட்டுக் கொண்டார்களாம். அந்தப் பேச்சு அரசாங்கத்தின் தொல்லையை வருவிப்பதாகும் என்று வ.உ.சி. முதலானோர் எடுத்துரைத்தார்களாம். 1925ஆம் ஆண்டில் காஞ்சியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டுக்குத் தலைவராகத் திரு.வி.க.வை முன்மொழிந்து பேசிய டாக்டர் பி.வரதராஜுலு நாயுடு, “அவர் சாது முதலியார் என்று அழைக்கப்பட்டாலும் அவர் இருதயத்திலே டைனமோ வேலை செய்கிறது" என்று குறிப்பிட்டார். அவருடைய பிற்கால வாழ்விலும் அந்த வேகம் ஒதுங்கியிருந்தது என்பதற்குச் சான்று உண்டு.

திரு.வி.க. அறுபதாம் ஆண்டை நெருங்கும் காலம் அது. சென்னையில் ஒரு பெரிய மண்டபத்தில் ஒரு மாநாடு நடைபெற்றது. சான்றோர் ஒருவர் தலைமை தாங்க, அறிஞர் சிலர் பேச பழங்காலச் சமய நிலை பற்றிக் கருத்துக்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தலைவர் பேசத் தொடங்கினார் மாநாடு நடக்க வொட்டாமல் கலைக்க ஒரு குழுவினர் சூழ்ச்சி செய்து சிலரை ஏவியிருந்தனர். தலைவர் பேச்சின் போது ஒருவர் குறுக்கிட்டுக் கேள்விகள் கேட்க, மற்றும் சிலர் தொடர்ந்து அமைதி குலைத்தனர். தலைவர் பேசவொட்டாமல் மேடையை அணுகினர். ஒலி பெருக்கியைக் கைப்பற்றினர். மேடையில் அறிஞர்க்கு இடையே இருந்த திரு.வி.க. எழுந்து அமைதி ஏற்படுத்த முயன்றார். பயன் விளையவில்லை மாநாடு கலைந்தது தலைவரும் திரு.வி.கவும் மற்றவர்களும் மனம் நொந்து வெளியேறினர். திரு.வி.க. அங்கிருந்து நேரே கடற்கரைக்கு நடந்து சென்று மணல் வெளியில் அமர்ந்தார். எச்சில்

உமிழ்ந்த போது, இரத்தம் அடிக்கடி வெளிப்பட்டது. காரணம் கேட்கப்பட்டது. இந்தக் கொடுமையை என் உள்ளம் தாங்க முடியவில்லை. உள்ளக் குமுறல் நேரும் போதெல்லாம் இப்படி இரத்த நாளம் வெடிக்கிறது” என்றார். உணர்ச்சி மரத்துப்போன உள்ளம் அல்லது பிறர் தீமையைக் கண்டு கேட்டும் மரத்துப்போன மனமே அரசி யலுக்குத் தேவையானது. அது திரு.வி.க.விடம் இல்லை.

தம்மைப் பிறர் பழித்தால் திரு.வி.க. தாங்கிக் கொள்வார். பொறுமையுடன் பழகுவார். வெறுப்பின்றி அன்பு காட்டு வார். பழித்தவர்களே அணுகி உதவி கேட்டாலும் தயங்கா மல் செய்வார். ஆனால் நல்லோரையும் ஏழை மக்களையும் பிறர் வருந்தச் செய்யும்போது, அவ்வாறு செய்யும் செயல் களைக் கண்டு அவரால் அமைதியாக இருக்க முடிய வில்லை. அப்போதெல்லாம் இளமையில் இருந்த வேகம் அவரிடம் மீண்டும் தலையெடுக்கும். அப்போதெல்லாம் உணர்ச்சிவசப்படுவார். இவ்வாறு தமக்காக எதையும் தாங்கிக் கொண்ட அப்பெருமகன், பிறர்காக கலங்கும் நெஞ்சமும் கொதிக்கும் நெஞ்சமும் பெற்று வாடினார். கட்சி அரசியலில் உயர்வுபெற முயல்வோர்க்கு ஆகாத பண்புகள் இவை. இரக்க மற்ற கல்நெஞ்சமும் உதட்டளவில் உயர்ந்த கொள்கைகளைப் பேசி உள்ளத்தில் தன்னலத்தை வளர்க்கும் கரவும் இல்லாத அவர் அரசியலில் நெடுங் காலம் நிலைத்துத் தொண்டு புரிய இயலாமற் போனது.

அரசியலில் பதவி பெற்று நீண்டகாலம் அதிகாரத்தோடு இருக்கப் பண்பைவிடத் திறமையே மிகத் தேவையானது. தமக்கு ஆதவாகச் சிலரை எப்போதும் வளர்த்துத் தம் புகழ் பாடித் தம் தலைமை வளர்க்கப் பாடுபடும் குழுவாக வைத்துக் கொண்டு நடுநிலைமையும் நெறியும் கடந்து அவர்களுக்கு மட்டும் உதவி செய்து, மற்றவர்களைத் தொலைவில் வைத்து நடத்த வேண்டும். திரு.வி.க.வுக்கு அந்தத் ‘திறமை’ இல்லை. எல்லோரிடமும் அன்புகாட்டி எல்லோருடனும் நெருங்கிப் பழகியவர் அவர். எதிர்த்த

வர்களையும் உள்ளன்போடு அணைத்துச் சென்றவர். அவர் எல்லாக் கட்சியாரின் மதிப்பையும் அன்பையும் பெற அவரால் முடிந்ததே அல்லாமல், ஒரு கட்சியின் தலைமைச் செல்வாக்கைப் பெற்று முன்னேற முடிய வில்லை மக்கள் அன்பையும் பொறுமையையும் கற்பதை விட, பகைமையையும் வெறுப்பையும் கற்பது மிக எளிது. ஆகையால்தான் அரசியலில் தலைமையைப் பெறுவோர் பொதுமக்களின் உள்ளத்திலும் பகைமையையும் வெறுப் பையும் வளர்த்து அவற்றை ஒருமுகமாக்கி எதிர்க்கட்சி யாரிடம் அல்லது ஒரு சாராரிடம் திருப்பி விடுகின்றனர். திரு.வி.க.வின் பண்பு ஒருகாலும் பகைமையையும் வெறுப் பையும் தூண்டிவிட இயலாது. இளமையில் ஓரளவு அந்த ஆற்றல் இருந்தது. அவருடைய வளர்ச்சியும் பண்பாடும் நாற்பதுக்குப் பிறகு அதற்கு இடம் இல்லாமல் செய்து விட்டன.

திரு.வி.க.வின் உள்ளத்தில் இளமை முதல் அரசியலில் ஆர்வம் மிகுதியாக இருந்தது. அந்த ஆர்வமே ஸ்பென்சர் கம்பெனி வேலையை விடச் செய்தது. தமிழ்ப்பற்று அவ ரைத் தமிழாசிரியர் துறைக்கு ஈர்த்துச் சென்றபோதிலும், மீண்டும் அரசியல் ஆர்வமே வென்று, அந்தத் தொழிலை யும் விடச் செய்து, அரசியல் இதழாகிய தேசபக்தனின் ஆசிரியப் பொறுப்பை ஏற்கச் செய்தது. அதன் பிறகு அவர் தலைமை தாங்கிய அரசியல் மாநாடுகள் பல, பேசி முழங்கிய மேடைகள் பலப் பல. 1926இல் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து விலகிய பிறகும் அவருடைய அரசியல் தொண்டு ஓயவில்லை. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு வட ஆர்க்காடு மாவட்டத்துத் தேர்தலில் காங்கிரஸ் புரிந்த ஊழலைக் கண்டு வேறொரு காங்கிரஸ் தோற்றுவித் துத் தேர்தலிலும் உழைத்துப் பாடுபட்டு வெற்றி தேடித் தந்தார். அதன் பின்னர் கட்சியில் நான்கணா உறுப்பின ராகவும் இல்லாமல் நாட்டுத் தொண்டு மட்டும் புரிந்து வந்தார். பின்னர் நாளடைவில் அவர் நெஞ்சம் கட்சி

அரசியலில் வெறுப்புற்றுச் சன்மார்க்க அரசியலை- அறத்தின் வழிபட்ட அரசியல் தொண்டை- நாடியது.

"இக்கால அரசியல் பெரிதும் கட்சி வழியே இயங்குவது. பெரும்பான்மை சிறுபான்மை வழி இயங்குவது கட்சி அரசியலில் மனச்சான்றுக்கு இடம் ஏது? அறம் கட்சியின் பாற்பட்டு நிற்கிறது. சிலபோது கட்சி அரசியலில் பெருந்தீங்கு விளைக்கவும் உறுத்தெழும். அவ்வேளையில் மனச்சான்று உடைய அறவோர் என் செய்தல் கூடும்? அவர் கட்சியினின்றும் விலகுதல் வேண்டும்; அல்லது மனச்சான்றை விற்று அடிமையாய் உழலல் வேண்டும். கட்சி அரசியலின் கொடுமையை- சிறுமையை- கயமையை- என் வாழ்க்கை நன்கு அநுபவித்தது. ஆபாசக் கட்சி அரசியல் முறை மேல் நாட்டினின்றும் வந்து இறங் கிய சரக்குகளுள் ஒன்று. அது வாழ்க்கையில் போராட் டத்தை விளைவிப்பதாதலின், அதனால் மக்கள் மனச் சான்று உடைய அறவோராதல் இயலவில்லை. இந்நுட்பம் எனது அரசியல் வாழ்க்கையில் செவ்வனே விளங்கியது. அவ்விளக்கம் போராட்டம் அற்ற வாழ்க்கையைக் கூட்ட வல்ல சன்மார்க்க அரசியலை நாடச் செய்தது. அவ்வரசி யல் தேவை தேவை என்று எனது அரசியல் வாழ்ககையின் அடைவு அறை கூறுகிறது."

திரு.வி.க.வின் இந்த நோக்கம் வெறுங் கனவாகத் தோன்றலாம் சன்மார்க்க அரசியல் ஏற்பட உலகம் இடம் தராமல் போகலாம். ஆனால், அவர் கட்சி அரசியலில் கண்ட குறையை என்றேனும் உலக அறிஞர்கள் உணர்ந்தே தீர்வர். மனச்சான்று உடைய அறவோர் பலர் இன்றும் அரசியலைவிட்டு ஒதுங்கி நிற்றல் கண்கூடு. ஊழல் பல உலகெங்கும் அரசியலில் மலிந்து வருதலும் கண்கூடு. இதை அன்றே திரு.வி.க. உணர்ந்து உருகி, கட்சி அரசியலில் மாற வேண்டும் என்று உளமார விரும்பியுள்ளார்.

திருவள்ளுவர் வகுத்த அறநெறியிலே மக்களுக்கு நம்பிக்கைக் குறைந்து வரும் நூற்றாண்டு இது. அறநெறி

யைப் போற்றி நடப்பவர்களைக் இக்காலச் சமுதாயம் அவ்வளவாகப் போற்றுவதில்லை; கட்சி மேடைகளும் செய்தி இதழ்களும் தரும் விளம்பரத்தைக் கொண்டே ஒருவர் பெருமையை மக்கள் மதிப்பிடுகிறார்கள்; நம்பு கிறார்கள். ஒருவரின் உண்மைப் பண்புகளையும் ஒழுக்க வாழ்வையும் உணர்ந்து அவரை மக்கள் மதிப்பிடுவ தில்லை. செய்தி இதழ்களில் என்ன செய்திகள் வந்துள்ள னவோ, மேடைகளில் வரவேற்புரைகளில் பாராட்டுமொழி களில் என்ன என்ன பொய்கள் கூறப்படுகின்றனவோ அவற்றைக் கொண்டே பொதுமக்கள் எடைபோடுகிறார் கள். ஒருவர் பொல்லாதவராக இருக்கலாம். ஒழுக்கக் கேடராக இருக்கலாம் ஏழைகளை இரக்கமின்றிச் சுரண்டி வாட்டுபவராக இருக்கலாம். அவர் நான்கு பேர்க்குப் பணம் கொடுத்துப் பாராட்டுக் கூட்டங்கள் நடத்திக் கொண்டு விளம்பரம் பெற இடம் தரும் காலம் இது. ஒருவர் உண்மையாகவே நல்லவராக இருக்கலாம். அவர் யாரென்று அறியப்படாத வகையில் சமுதாயம் அவரை மறந்து மூலைக்குத் தள்ளிவிடுவதும் உண்டு. மிகப் பொல்லாத தீயவர் ஒருவர் எப்படியோ பெரிய பதவியை பெற்றுவிட்டால் உடனே பலரும் கூடி அவரை இந்திரன் சந்திரன் என்று வானளாவப் போற்றி விளம்பரப் புகழைத் தேடித் தந்து மிகப் பெரிய மனிதனாக ஆக்கிவிடுவதும் உண்டு. இத்தகைய நூற்றாண்டில் அரசியல் துறையில் புகழுடன் விளங்கிய திரு.வி.க. இடையே மூலையில் ஓங்கி வாழும் வாழ்வை விரும்பி மேற்கொண்டு, அறநெறியினின் றும் சிறிதும் பிறழாதவராக விளங்கினார் என்பதை உண ரும் போது வியப்பு மிகுகின்றது.

அறநெறியில் ஊறிய அவருடைய நெஞ்சம், எதிர்க்கட்சி யாரிடம் வேண்டுமென்றே குற்றம் காண முடியவில்லை; மேடையில் எதிர்ப்பவர்களை ஈரமின்றித் தாக்கி நாகரிக மின்றி வசைமாரி பொழிய அவரால் முடியவில்லை; தமக்கென்று ஒரு கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கு நெறி தவறியும் உதவி செய்து அடியாட்கள்

போல் அணைத்துச் செல்லும் குழு மனப்பான்மையை வளர்க்க அவரால் முடியவில்லை இந்தக் காலத்துக் கட்சி அரசியலில் இந்தத் திறமைகள் இல்லாதவர்கள் முன்னேற இயலாது திருவள்ளுவர் வேண்டா என்று ஒதுக்கும் புறங் கூறல், பொய், வன்சொல், களவு(லஞ்சம்), கொலை, இன்னா செய்தல் முதலிய இன்று கட்சி அரசியலில் முன் னேற விழைவோர்க்கு இன்றியமையாதன ஆகிவிட்டன என்பதை அமெரிக்கா முதலான நாடுகளின் அரசியல் செய்திகளும் உணர்த்துகின்றன. அறநெறியில் ஆழ்ந்த பற்றுடையவர்கள் இன்று உள்ள கட்சி அமைப்பில் உயர்வு பெறல் இயலாது. ஒருவர் இருவர் விதிவிலக்காக முன்னேறி வரினும், அவர்களும் பல இன்னல்களுக்கு இரையாக நேர்கிறது.

பிறர் பிறர் சீரெல்லாம் தூற்றிச் சிறுமைப் புறங்காத்தல் சான்றோர் இயல்பு; நல்ல பண்பாடு. திரு.வி.க. இடத்தில் அப்பண்பாடு நிறைந்திருக்கிறது. அது கட்சி வளர்ச்சிக்கு உதவாது. எதிர்க்கட்சியார்ரின் சிறுமை யெல்லாம் தூற்றிச் சீரெல்லாம் மறைத்துப் பேசவல்லவரே கட்சி அரசியலில் முன்னேறல் இயலும். எதிர்ப்பவர்களை இரக்கமின்றி நசுக் கவோ அடக்கவோ தாழ்த்தவோ முயலாமல், அன்போடு பொறுமையோடு விட்டுவைப்பவர்களால் ஒரு கட்சியை வளர்க்க முடியாது. திரு.வி.க.வின் நெஞ்சமோ, பிறரை பகைக்கத் தெரியாத அன்பு நெஞ்சம், பகைத்து எதிர்ப் பவர்களிடம் நேயம் பாராட்டும் கிறிஸ்து நெஞ்சம் உடை யவர் அவர். எல்லோரிடத்தும் இறைவன் ஒளிர்கிறான் என்று உணர்ந்த இறைவழிபாட்டுணர்ச்சியால், யாரையும் பழித்தல் கூடாது என்று அறநெறி போற்றியவர் அவர் ‘பெயக் கண்டும் நஞ்சுண்டமை’யும் சான்றோரின் வழிவந்த பெருமகனாகிய அவரால், இரக்கமின்றி எதிர்ப்புப் பாராட்ட இயலவில்லை. பிற்காலத்தில் எல்லாக் கட்சி யாரும் நெருங்கிச் சூழ்ந்த பிறகும் சான்றோராய் விளங் கினார் அவர். அதனால் தம் தம் கட்சிவளர்ச்சிக்கு அவர்

உதவாமைகண்டு அவரைப் பழித்துப் பேசியவர்களும் உண்டு.

அரசியல் கூட்டங்களில் பேசிப் பேசி உடலைக் கெடுத்துக் கொண்டவர் திரு.வி.க. தம் பேச்சு, பிற துறைகளுக்குப் பயன்பட்டது பற்றி அவர் வருந்தவில்லை. ஆனால் அரசியலில் கழிந்தது பற்றிப் பிற்காலத்தில் வருந்தினார். சில பாடல்களிலும் அதை வெளியிட்டுள்ளார்.

கோடையின் அலகை என்னக்
　கொக்கரித் தலறிக்கூவி
மேடையில் பேசிப் பேசி
　மெலிந்ததை அறிவாய் அன்றே!

(பொதுமை வேட்டல், மனிதப் பிறவி)

அரசியல் பற்றி அவர் பாடியுள்ள பாடல்களும் போற்றத்தக்கன.

அரசியல் நிலையை ஆய்ந்தேன்
　அத்துறை படிந்தும் பார்த்தேன்
கரவினைக் கண்டு கொள்ளக்
　கடவுளே கருணை செய்தாய்
கரவர சிருளைப் போக்கச்
　சமரச பானு தேவை
பரமனே உலகைக் காக்கப்
　பரிந்தருள் அதனை இன்றே.

(பொதுமை வேட்டல்–சமரசம்)

அன்பினில் வளர்ந்த அரசியல் சாய
　ஆசையே அரசியல் பேயாய்த்
தன்னலத் தாயாய் விளம்பரத் தலையாய்
　தாக்கிடும் தாள்களாய்க் கட்சி
வம்புகள் ஆகி வாதமாம் தேர்வாய்
　வதைபடைப் புரட்சியாய்க் கொலையாய்த்
துன்புசெய் கோரம் சொல்லவும் ஒண்ணா
　தொலைத்தருள் சுதந்திரத் தேவை.

(பொதுமை வேட்டல்–முறையீடு)

7. நினைவாற்றல்

ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி என்பது திருவாசகம். திரு.வி.க. அவர்களின் வாழ்க்கை அதற்கு நல்ல எடுத்துக் காட்டாகும். பிற்காலத்தில் அவர் 'என்பு தோல் போர்த்த உடம்பு' என விளங்கினார். ஆனால் இளமையில் தசை மிகுந்த உடம்பினராக விளங்கினார். "யான் பிறப்பிலேயே திண்மை வாய்ந்தவன். அவ்வாய்ப்பு மேலும் மேலும் என் பருவுடலைப் பெருக்கியது. கழுத்தில் தசைகள் மடிப்பு விட்டன. யான் பொதுக்கன் என்றும் எள்ளப் பட்டேன். தசையை வற்றச் செய்யத் தந்தையார் ஒருவித மருந்தெண்ணெய் கொடுத்தார்" என்று அவர் தம் வாழ்க்கைக் குறிப்புகளில் எழுதியுள்ளார் கழுத்தில் தசை மடிப்புகள் வளர்ந்த அத்தகைய திண்மையான உடம்பு-மருந்தெண்ணெய் கொடுத்து வற்றச் செய்ய வேண்டிய அளவிற்கு வளர்ந்திருந்த பருமனான உடல், பிற்காலத்தில் மெலிந்து **'என்பு எழுந்து இயங்கும்'** நிலை எய்தியது. **ஊன் சுருக்கிய அளவிற்கு** அவர்க்கு உள்ளொளி பெருகியது. அவர் தம் உள்ளத்தின் ஒளியால் அறிவு தெளிவு பெற்று விளங்கியது. அறிவின் தெளிவு அவர் தம் பேச்சுகளில் எழுத்துக்களிலும் நன்கு புலப்பட்டது. எந்தக் கருத்தையும் நன்கு எண்ணித் தெளிந்து விளங்கும் ஆற்றல் அவர்க்கு இயல்பாக அமைந்தது. பல துறைகளைச் சார்ந்த பலதிற மக்களோடும் அவர் பழகி அவரவர்களின் இயல்பு களையும் ஆராயும் வாய்ப்புப் பெற்றார். ஒருமுறை அவரோடு பழகியவர்கள், எப்போதும் அவருடைய தொடர்பை விடாமல் போற்றினார்கள். காரணம்,

அவருடைய நல்லியல்பு என்பது ஒன்று. மற்றொன்று ஒரு முறை பழகியவுடன், அவர் அவர்களைப் பற்றி நன்கு அறிந்தவராய், அவர்களுடைய கருத்துக்களையும் பண்பு களையும் விருப்பு வெறுப்புகளையும் மறவாமல் நினைவில் கொண்டவராய், அவர்களோடு ஒன்றியவராய் விளங்கிய பெற்றியதாகும். இந்தப் பெற்றிக்கு அடிப்படையாக விளங்கியது, அவருடைய நினைவாற்றலின் தனிச் சிறப்பே ஆகும்.

அரசியல் தொண்டர், அல்லது, சமயத் தொண்டர், அல்லது, தமிழறிஞர், அல்லது, தொழிலாளி ஒருவர் ஒரு நாள் அவரைத் தனியே கண்டு சிறிது நேரம் பேசிவிட்டுச் சென்றால் போதும். மூன்று நான்கு திங்கள் கழித்து இரண் டாம் முறை அவரைக் காணும்போது, பழைய நிகழ்ச்சிகள், முன்பேசிய கருத்துக்கள் அத்தனையும் அவருக்கு முழுமை யும் நினைவுக்கு வரும். அன்று அறிந்த வாழ்க்கையைப் பற்றி அவரே தொடர்ந்து கேள்விகள் கேட்பார். அன்று பேசிய பேச்சின் கருத்துக்களை ஒட்டித் தொடர்ந்து விளங்கங்கள் தருவார். அதனால் ஒரு முறை இருமுறை பழகியவர்கள் அவரோடு பிணைந்து நிற்கும் உணர்ச்சி யைப் பெறுவார்கள். வாழ்நாள் முழுவதும் அந்தப் பிணைப்பு வலுப்பெற்று நிற்கும். இவ்வாறு நூற்றுக்கணக் கான தொழிலாளர்களும் பிற துறைத் தொண்டர்களும் அவரோடு நெருங்கியவர்களாக விளங்கினார்கள்.

தூய வெள்ளாடை உடுத்த பெரியவர் ஒருவர் தமக்கு இருமுறை காட்சி அளித்து மறைந்ததாகத் திரு.வி.க. கூறி னார். அவ்வாறு காட்சி அளித்த நாட்களும் இடங்களும் பற்றி அவர் கூறியபோது, அவருடைய நினைவாற்றலைப் பற்றி வியப்புற வேண்டியிருந்தது. "சித்தூரில் சமரச சன்மார்க்க சங்கவிழாவிற்குச் சென்றிருந்போது, மறுநாள் காலையில் ஊருக்கு வெளியே குன்றுகளை அடுத்தடுத்தாற் போல் உலாவி விட்டு ஆற்றில் இறங்கி வேப்பங்குச்சியால் பல் துலக்கி முகம் அலம்பியபோது... நீயும் அப்போது

என்னுடன் வந்திருக்கிறாய் சிறிது தொலைவில் நீ கிழக்கு நோக்கி நின்றபடி எதையோ பார்த்துக் கொண்டிருந்தாய்... அப்போது... என்று இடம் நேரம் சூழ்நிலை முதலிய எல்லா வற்றையும் ஒன்றுவிடாமல் விளக்கமாகச் சொன்னார். இவ்வாறு பழைய நிகழ்ச்சி பழைய பேச்சு எதைப் பற்றிக் குறிப்பிடும் போதும், இடம் நாள் சூழ்நிலை வைத்திருந்து சொல்வார் நிழற்படம் போல் எல்லாம் அப்படியே நினை வில் பதிய வைத்திருந்து வேண்டிய போது எடுத்துரைக்கும் நினைவாற்றல் அவருக்கு மிகுதியாக இருந்தது.

அவர்க்கு அன்றாடம் பற்பல கடிதங்கள் வந்தபடியே இருக்கும் நண்பர்கள் எழுதுவார்கள்; வெளியூர்ச் சங்கங் களைச் சார்ந்தவர்கள் எழுதுவார்கள்; தமிழறிஞர்கள் எழுதுவார்கள்; மாணவர் எழுதுவார். அத்தனை கடிதங் களையும் படிப்பார்; விடை எழுத வேண்டியதில்லை என்று கருதும் கடிதங்களை உடனே கிழித்துக் கூடையில் இடுவார். விடை எழுத வேண்டும் என்று கருதும் கடிதங் களுக்காக அச்சகத்துத் திரு.நாராயணசாமியையோ பிறரையோ அழைத்து விடையைச் சொல்லி அவர்களை எழுதச்சொல்வார். விடை எழுதி முடிந்ததும் அத்தனைக் கடிதங்களும் இவ்வாறு அரைமணி அல்லது ஒரு மணி நேரத்தில் துண்டு துண்டுகளாய்க் கூடையில் கிடைக்கும். எவ்வளவு சிறப்புடையவர்கள் எழுதிய கடிதங்களாயினும் முன்பின் அறியாதவர்கள் எழுதிய கடிதங்களோடு கிழிக் கப்பட்டுக்கிடக்கும். ஆனால் பல திங்கள் கழிந்தபிறகும், சில ஆண்டுகள் ஆன பிறகும், அந்தக் கடிதங்களின் செய்தி கள் அவருடைய மனத்தில் பசுமையாக நினைவில் பதிந்து நடக்கும்.

இத்தகைய நினைவாற்றல் இருந்த காரணத்தால்தான் தம் வாழ்க்கை வரலாறு எழுதும் எண்ணமே இல்லாதிருந்த அவர், எதிர்பாராவகையில் முடிவு செய்து அதை எழுத முனைந்தபோது, தேவையான குறிப்புகளும் கடிதங்களும் இல்லாமலே ஆயிரம் பக்கங்களில் அதை எழுத முடிந்தது.

அதில் உள்ள செய்திகள் பெரும் பாலானவை, அவருடைய நினைவிலிருந்து எழுதப்பட்டவையே. நாட்குறிப்பு எழுதிக்காக்கும் பழக்கமும், கடிதங்கள் முதலியவற்றைக் காத்து வைக்கும் வழக்கமும் இல்லாத அவர் அவ்வளவு பெரிய வாழ்க்கை வரலாற்று நூல் எழுதியது வியத்தற் குரியது ஆகும்.

"எனது பருவுடல் நலன் சிறிது குலைந்துள்ளது. ஆனாலும் நினைவுத்திறம் இன்னும் கொழுமையதாகவே இருக்கிறது. குறிப்புகள் பெரிதும் எனது நினைவிலிருந்து வெளிவந்தவை" என்று 'திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்கள் என்ற தம் நூலின் முன்னுரையில் 1944 பிப்ரவரி 12இல் தம் அறுபத்தொன்றாம் வயதில் எழுதியுள்ளமை காண லாம். நினைவிலிருந்தே எல்லாச் செய்திகளையும், தொகுத்துக் கோவைப்படுத்தி எழுதியிருந்தும், இவ்வளவு விரிவான நூல் ஏறக்குறைய ஆயிரம் பக்கம் கொண்ட நூல் மிகச் செம்மையாக அமைந்துள்ளது. என்றால், அவ ருடைய நினைவாற்றலின் பெருமையும் தூய சிந்தனையின் தெளிவுமே அதற்குக் காரணம் எனலாம்.

பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர்களுள், திரு.வி.க. போல் பல துறைகளில் ஈடுபட்டுப் பணி புரிந்தவர்கள் இல்லை. சமயத் துறை என்றால், அவர் பிறந்து வளர்ந்த சைவ சமயம் மட்டும் அல்லாமல், பழகியோ படித்தோ உணர்ந்த மற்றச் சமயங்கள் அத்தனையும் அவர் நெஞ்சில் இடம்பெற்றன. அத்தனை சமயத் தொண்டர்களும் அவருடன் நெருங்கிப் பழகினர். பல சமய மேடைகளிலும் அவர் கருத்துக்களை வாரி வழங்கினார். அரசியல் என் றால் தாம் தொண்டாற்றி வளர்த்த காங்கிரஸ் கட்சியுடன் மட்டும் அல்லாமல் நாட்டில் இருந்த அத்தனை கட்சி களுடன் அவர்க்குத் தொடர்பு இருந்தது. மாறுபட்ட கட்சியினரும் தயங்காமல் அவரிடம் நெருங்கிப் பழகினர். மேடையில் வசைமாரி பொழிந்தவர்களும் சாது அச்சுக் கூடத்தில் அவருடைய மேசை எதிரே அமர்ந்து அளவளா

விக் கொண்டிருப்பர். இவ்வாறே சமுதாயச் சீர்திருத்தத் துறை. தொழிலாளர் துறை, கல்வித் துறை முதலிய பல துறையிலும் பலவகையாரோடும் கலந்து பழகிப் பணி செய்யும் வாய்ப்புப் பெற்றது அவருடைய வாழ்க்கை. அவருடைய தூய அன்பு நெஞ்சமும் புண்படுத்திப் பேசி யறியாப் பொறுமைப் பண்பும் இவ்வகையில் அவர்க்குத் துணையாக இருந்தமை போலவே, மாறாத நினைவாற்ற லும் அவர்க்கு உறுதுணை புரிந்து வந்தது.

திரு.வி.க. தலைமை தாங்கியும் சொற்பொழிவு ஆற்றியும் அணி செய்த மேடைகள் அவர்தம் ஒப்பற்ற நினைவாற்ற லுக்குச் சான்று பகர்ந்தன. பலர் பேசும் கூட்டங்களுக்குத் திரு.வி.க. தலைமை தாங்குகிறார் என்றால், அதுவே ஒரு தனிச்சிறப்பாகும் அவர் போல் தலைமை தாங்கி, பேசியவர் அனைவரையும் மகிழ்விக்க வல்லவர் அவர்க்குப் பிறகு தமிழகத்தில் யாரும் இல்லையே என்று பலரும் வருந்தினர். காரணம் என்ன? மற்றப் பேச்சாளர் பேசும் போது தலைவராகிய திரு.வி.க. குறுக்கிடாமல் பொறுமையுடன் புன்னகையுடனும் மணிக்கணக்காக அமர்ந்து கேட்டுக் கொண்டிருப்பார். பேச்செல்லாம் முடிந்தபிறகு, அனைவரு டைய பேச்சுக்கும் நல்ல வகையில் முடிவுரைகள் சொல் வார். சொற்பொழிவாளர்கள் பேசும்போது தாளும் பென்சி லும் கொண்டு எந்தக் குறிப்பும் எழுதிக் கொள்ளாமல் வெறுங்கையுடன் வாளா இருப்பார். முடிவுரை சொல்லும் போது, ஒவ்வொருவருடைய பேச்சிலும் இருந்த நல்ல பல பகுதிகளையும் விடாமல் எடுத்துச் சொல்லிப் போற்றுவார். கேட்டவர் பலரும் மறந்துவிட்டிருப்பார்கள். ஆனால் தலைவர் திரு.வி.க. தவறாமல் முடிவுரையில் எல்லா நல்ல குறிப்புகளையும் சொல்ல நினைவூட்டுவார். அவற்றையும் முறை பிறழாமல் சொற்பொழிவாளர் பேசிவந்த முறைப் படியே ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துரைப்பார். விளக்கங் கள் போதாதவற்றிற்கு மேலும் விளக்கங்கள் தந்து தெளிவுறுத்துவார். கருத்து வேறுபாடு உள்ளவற்றிற்கு யார் மனமும் புண்படாத வகையில் பலவகைக் கருத்துக்களை

'யும் சொல்லித் தாம் தெளிந்து உணர்ந்த கருத்து இன்னது என்று அடக்கத்தோடு உரைப்பார். மறுத்துக் கூறவேண்டிய இடங்களிலும், சொற்பொழிவாளரின் மனம் வாடா வகையில் அவரும் மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளும் முறையில், நயமாக அன்புரை குழைத்து விளக்குவார் கூட்டத்திற்கு முதலில் வாராமல், முடியும் தறுவாயில் வந்து அமர்ந் தவர்கள் தலைவரின் முடிவுரையை மட்டும் கேட்டால் போதும்; அதுவரையில் பேசிவந்த அத்தனைச் சொற் பொழிவாளரின் பேச்சுகளையும் கேட்டது போன்ற பயனைப் பெற முடியும். திரு.வி.க.வின் முடிவுரை அவ்வ ளவு செறிவான முடிவுரையாக- அவர்களின் கருத்துக் களைத் திரட்டியுரைத்த தொகுப்புரையாக-விளங்கும் திரு.வி.க.வுக்கு இருந்த இணையற்ற நினைவாற்றல் இவ்வாறு திறமாக முடிவுரைகள் வழங்குவதற்கு அவர்க்குத் துணை புரிந்தது எனலாம்.

பிறர் சொற்பொழிவுகளுக்கு முடிவுரை கூறுவதில் ஒரு தனிச் சிறப்பு விளங்கியது போலவே, அவராகவே ஆற்றும் சொற்பொழிவிலும் ஒரு பெருஞ் சிறப்பு விளங்கியது. அவர் ஒரு குறிப்பும் கையில் வைத்துக் கொள்ளாமலே இரண்டு மணி மூன்று மணி நேரம் நீண்ட சொற்பொழிவு செய்வார். ஆனால் எடுத்த பொருள் தவிர மற்றொன்று தொடுத்து வீண் பொழுது போக்குதலும் காணமுடியாது; முன் பேசியதையே மறந்து மறந்து திரும்பப் பேசுதலும் காண முடியாது; இன்னும் என்ன பேசுவது என்று மறந்து நினைந்து தம் இடையிடையே தயங்குவதும் தடுமாறுவதும் இல்லை, நீண்ட பேச்சும் ஒழுங்காக வரையறுக்கப்பட்டுக் கோவையாக அமைந்து செம்மையாக முடிவுறும். இயல்பாகவே முழுமை பெற்றுத் துலங்கும். நன்கு திட்ட மிட்டுச் செப்பனிட்ட பேச்சாக விளங்கும். எழுதிப் படித்த சொற்பொழிவுபோல் அவ்வளவு சீர்மையும் செம்மையும் உடையதாய்த் திகழும். ஆனால் திரு.வி.க. கையில் ஒரு சிறு குறிப்பும் இராது; மேற்கோள்களுக்காக நூலும் இராது. யாரேனும் அங்கிருந்து சுருக்கெழுத்து எடுத்தாலோ, ஒலிப்

பதிவு செய்தாலோ, அப்படியே ஒரு நூல் ஆக்கத்தக்கவாறு அவ்வளவு செம்மையாக வரையறைப்பட்டு ஒளிரும். அவர் சில தலைப்புகளையும் சில குறிப்புகளையும் தம் நினைவில் வைத்துக் கொண்டு அவற்றின் எல்லைகளுக்குள் நின்று தம் சொற்பொழிவை ஆற்றும் திறனே அதற்குக் காரணம் ஆகும். மற்றொரு சிறப்பியல்பும் அவர் சொற்பெருக்கில் உண்டு. “ஆகையால் தோழர்களே, யான் இதுகாறும் கூறிய வற்றில், சாதி வேறுபாடுகள் இடைக்காலத்தே செயற்கை யாகப் புகுத்தப் பட்டவை என்றும், உண்மைச் சமய நெறிக்கும் சாதி முறைக்கும் தொடர்பு இல்லை என்றும், எல்லோர்க்கும் தாயுமாய்த் தந்தையுமாய் உள்ள தலைவ னாகிய இறைவன் அருள் நோக்கிற்குச் சாதியால் உயர்வு தாழ்வு கற்பித்தல் பெரும் குற்றம் என்றும், நம் நாட்டு ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் பெரிய இடையூறாக உள்ளது இந்தச் சாதிப்பேய் என்றும், அறிவியல் வளர்ச்சி பெற்று மன்பதை ஒரு குடும்பமாய் ஒரு குலமாய், முன்னேறி வரும் இக்காலத்தில் நமக்குள் சாதிப் பேச்சு பேசி வருவது பெரியதோர் இழுக்கு என்றும்... என்றும்... என்றும்... என்றும்’ என எல்லாக் கருத்துக்களையும் விடா மல் தொகுத்து **உம்மைகள் அடுக்கிய நீண்ட வாக்கியமாகக்** கூறிமுடிப்பார். அந்த முடிப்புரை சில கூட்டங்களில் கால் மணி நேர அளவிற்கு நீள்வதும் உண்டு. எப்படித்தான் இவ்வளவும் நினைவிற் கொண்டு விடாமல் கூறி முடிக் கின்றாரோ என்று கேட்போர்க்குத் தோன்றும்; அவற்றை யும் தட்டுத் தடுமாறாமல் வழக்கமான வேகத்தோடு அடுக்கி அடுக்கி கூறிச் செல்வது கேட்டுக் கற்றோர் பலரும் வியப்புறுவர். திரு.வி.க.வின் நினைவாற்றல் அவ்வாறு ஒவ்வொரு கூட்டத்திலும் ஒவ்வொரு சொற்பொழிவிலும் ஒளிவீசித் திகழ்ந்தது.

நினைவாற்றல் பற்றித் தனி முறையில் பேசும் இளைஞர் களுக்கு **வல்லாரைக் கீரையும் தூதுவளைக் கீரையும் உண்ணுதல் நல்லது** என்று அவர் அறிவுரை கூறியதும் உண்டு.

8. தமிழ்நடை

ஒருவருடைய கையெழுத்தின் தன்மையைக் கொண்டு அவருடைய பண்பு இன்னது எனக் கூற முடியும் என்று பொதுவாக ஒரு கருத்து உண்டு. ஆயினும் சான்றோர் சிலர் வாழ்ந்த வாழ்க்கை மிகச் செழுமையாகவும் தூய்மை யாகவும் அமைந்திருக்க, அவர்களின் கையெழுத்து ஒழுங் கற்றதாகவும், கிறுக்கானதாகவும் இருந்ததைக் கண்டிருக் கிறோம். காந்தியடிகளின் கையெழுத்தும் வாழ்க்கையும் அவ்வாறு முரண்பட அமைந்தவை எனலாம். திரு.வி.கலி யாணசுந்தர முதலியாரின் வாழ்க்கையிலும் கையெழுத்தி லும் அத்தகைய முரண்பாடு இருந்தது. அவரே அதை உணர்ந்து கூறியதும் உண்டும்.

ஒருவருடைய அடக்கமோ செருக்கோ, கலக்கமோ தெளிவோ, வேறு பிற பண்போ, அவருடைய நடையுடை களிலும் எழுத்திலும் பேச்சிலும், புலப்பட்டு விடும் என்று பொதுவாகக் கூறப்படுவது உண்டு. திரு.வி.க.வின் கையெழுத்தில் கண்ட முரண்பாடே, அவருடைய தமிழ் நடையிலும் காணப்பட்டது. எளிய வாழ்க்கை வாழ்ந்த அவருடைய தமிழ்நடை பெருமிதம் நிறைந்து விளங்கியது. அவருடைய உடம்பின் நடையும் உடையும் அடக்கத்தைப் புலப்படுத்த, எழுதிய மொழியின் நடையோ மிகமிடுக் காக விளங்கியது. அவருடைய தோற்றம் அமைதிக்கு எடுத் துக் காட்டாய்த் திகழ, அவர் எழுதிய தமிழும் மேடையில் பேசிய தமிழும் கிளர்ச்சி மிக்க தமிழாக இருந்தன. இத் தகைய முரண்பாடு ஆராயத் தக்கதாக விளங்கியது.

இராமலிங்க அடிகளாரை நினைவூட்டும் தோற்றத்தோடும் வெள்ளாடை போர்த்த மேனியராய்ப் பெண்களைப் போல் ஒதுங்கி மேடைக்கு வந்து அமர்ந்திருப்பார். எழுந்து நின்று பேசத் தொடங்கிய பிறகோ, பெருமிதமும் மிடுக்கும் கிளர்ச்சியும் பொருந்திய வீரமொழிகள் பொழிவார். கண்ணால் கண்ட தோற்றம் வேறு, காதால் கேட்ட பேச்சு வேறு என்று எண்ணத் தோன்றும் அவர் பேசிய பேச்சுக்கள் பல எழுத்து வடிவாக இன்றும் உள்ளன. முன்னமே எழுத்தில் வடித்துப் பிறகு பேசிய பேச்சுக்கள் பல. அவற்றை அவரே எழுத்துப் பேச்சுகள் என்று குறிப்பிட்டுத் தம் வாழ்க்கைக் குறிப்புகளில் விளக்கியுள்ளார்:-

"தமிழ்த் தென்றலும் சீர்திருத்தம் அல்லது இளமை விருந்தும் என்னுடைய எழுத்துப் பேச்சைக் கொண்ட நூல்கள். எனது எழுத்துப் பேச்சில் பீடும் மிடுக்கும், எழுச்சியும் கிளர்ச்சியும் வீறும் வீரமும் மதர்த்து ஏக்கழுத்தம் பெற்ற நடை சிற்சில இடங்களில் நிகழும். அவைகள் அமையும் முறையிலே என எழுத்துப் பேச்சுகள் ஆக்கப்பட்டன."

புறத்தே நடையுடைய வாழ்வில் அடக்கம், அமைதி எளிமை; அகத்தேயிருந்து தோன்றி வெளியிட்ட மொழியிலோ மிடுக்கு, கிளர்ச்சி வீறு; அத்தகையவர்களின் வாழ்வில் உணரத்தக்க உண்மை ஒன்று உண்டு அதாவது அவர்களின் உடல் மெலிந்திருந்தாலும் உள்ளம் வலிமை மிக்கு விளங்குகிறது ஊன் எவ்வளவு சுருங்கிய போதிலும் உள்ளொளி பெருகி வருகிறது. அவர்களின் உருவத்தைக் கண்டு உள்ளத்தின் தன்மையை அளந்து காணல் இயலாது "உருவுகண்டு எள்ளாமை வேண்டும்" என்று திருவள்ளுவர் கூறியது இவ்வகையிலும் பொருந்ததாக உள்ளது.

திரு.வி.க. பலதிற நூல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் கற்றுத் தெளிந்தவர்; பற்பல ஆசிரியர்களின் நடைகளை ஆராய்ந்து உணர்ந்தவர். பழமையிலும் ஊறிய புலவர்களின் நடைமுதல் புதுமையில் திளைத்த ஆங்கிலப்

பேரறிஞர்களின் நடை வரையில் யாவும் அறிந்தவர் அவர். ஆதலின் தம் நடையைப் பற்றித் தாமே ஆராய்ந்து நோக்கும் வாய்ப்பும் பெற்றார். தம் கருத்தை எழுத்திலும் பொறித்துள்ளார்:–

"மொழி நடையைப் பற்றிய போராட்டத்தையும் என் வாழ்க்கை கண்டது. இப்போராட்டம் பொருளற்றதென்பது எனது உள்ளக் கிடக்கை. ஒரே மனிதர் வாழ்க்கையில் பலதிற நடைகள் அமைகின்றன. எழுதிப் பழகப் பழக அவருக்கென்று ஒரு நடை இயற்கையாகும். இன்னொருவருக்கு வேறு வித நடை இயற்கையாகும். இவர் அவரைக் குறை கூறுவதும் தவறு. ஒரேவித நடை எல்லோரிடத்திலும் அமைவது அரிது. உலகம் பலவிதம் ஒரேவித விதைகள் ஒரேவித நிலத்தில் விதைக்கப்படுகின்றன. அவை முளைத்து மரங்களாகுங்கால் எல்லாம் ஒரே வித வடிவங்களையா பெறுகின்றன? இல்லையே. மரங்கள் எத்துணையோ வடிவங்களைப் பெறுகின்றன இஃது இயற்கை அன்னையின் திருவிளையாடல். மொழி நடையும் அவரவர் இயற்கைக்கேற்ற வண்ணம் அமையும். இயற்கை அமைவைக் குறித்துப் போராட்டம் எற்றுக்கு? என்னுடைய வாழ்க்கையில் மூவித நடைகள் மருவின. ஒன்று இளமையில் உற்றது; இன்னொன்று சங்க இலக்கியச் சார்பு பெற்றபோது பொருந்தியது; மற்றொன்று பத்திரிகையுலகம் அடைந்த நாளில் அமைந்தது. இறுதியே எனக்கு உரியதாய்- உடையதாய்- நிலைத்தது. இந்நடை –எளியது; சிறுசிறு வாக்கியங்களால் ஆவது இந்நடையிலும் நூலுக்கேற்ற- காலத்துக்கேற்ற- அமைவு தானே பெறும்."

திரு.வி.க.வின் தமிழ்நடை இத்தகையது என அறிவதற்கு அவரே எழுதிவைத்துள்ள இக்கருத்துப் போதும்.

விளக்கம் கருதி ஒன்று கூறலாம்; திரு.வி.க.வின் நடையில் செந்தமிழ்ச் சொற்கள் அழகாகப் பயின்று வரும் பத்திரிகைக்கு உரிய நடை என்று அவரே குறிப்பிட்ட போதிலும்

மற்றப் பத்திரிகைகளின் நடைக்கும் அவருடைய தேச பக்தன்- நவசக்தி பத்திரிகைத் தமிழ், நடைக்கும் பெரிய வேறுபாடு இருந்தது. நாளிதழாகத் தேசபக்தன் நடத்திய காலத்திலும் அவருடைய தமிழ் கொழுஞ்சொற்கள் நிறைந்து வளமுடையதாக விளங்கியது. வார இதழாக நவசக்தி நடத்திய காலத்திலும் அந்தச் செந்தமிழ் வளம் இடையறாது நின்றது இலக்கியத்தில் பயின்ற செஞ் சொற்களை இயல்பாக எடுத்தாளும் திறன் அவரிடம் என்றும் காணப்பட்டு வந்தது.)

இலக்கியத்தில் இவ்வளவு பயிற்சியும் ஈடுபாடும் அவ ருக்கு இருந்தபோதிலும் மேடையே அவரை மிகுதியாகக் கவர்ந்துவிட்டது. அவர் ஆற்றிய எழுத்துத் தொண்டை விடப் பேச்சுத் தொண்டே மிகுதி எனலாம். அரசியலும் தொழிலாளர் உலகமும் அவ்வாறு செய்து விட்டன. அதன் விளைவாக அவருடைய எழுத்திலும் பேச்சு முறையே செல்வாக்குப் பெற்று விளங்கியது. நவசக்தியில் எழுதும் தலையங்கமே ஆனாலும், தனியே எழுதும் ஒரு நூலின் பகுதியே ஆனாலும், சொற்பொழிவின் போக்கில் அவரு டைய நடை அமைந்துவிடும் 1922ல் நவசக்தியில் எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதியைக் காண்போம்:-

உலகில் மக்கள்நிலை குன்றிவரும் இந்நாளில், அவர்கள் நிலையைப் பண்படுத்த ஒரு பெரியார் தோன்றியிருக்கிறார். அவர் யார்? அவர் மகாத்மா காந்தி. அவர் இப்பொழுது எங்கே இருக்கிறார்? சிறையிலிருக்கிறார். உலகுய்ய, அறம் வளர, அன்பு பெருக, அருளோங்கத் தோன்றிய ஒரு பெரியார் சிறையில் வதியுங்காலம் அறம் பெருகியுள்ள காலமோ? அறமும் சிறைப் படுங்காலமன்றோ இக்காலம்? இக்காலத்தின் கொடுமையை என்னென்பேம்! என்னென் போம்! அறவடிவாக உள்ள ஆண்டவனே! உன் திருவிளை யாட்டென்னே! என்னே! உன்னால் அனுப்பப்பட்ட பெரியார் சிறையில் உறைகிறார்?'

திரு.வி.க.வின் எழுத்தும் பேச்சும் ஏறக்குறைய ஒரே நடையில் அமைந்தவை என்பதற்கு இது எடுத்துக்காட்டாகும். சிலர் பேசும்போது மிகக் கொச்சையான நடையில் பேசுவர். எழுதும்போது பல்லுடையும் கடுநடையில் எழுதுவர். அதற்குக் காரணம், பேசும்போது அவர்கள் தமக்கு இயல்பான முறையில் நடத்தலும், எழுதும்போது வேண்டுமென்றே வேடம் பூண்டு நடித்தலும் ஆகும். திரு.வி.க.வின் வாழ்க்கையில் நடிப்பு இல்லை; நடக்கை இருந்தது. ஆதலால் எழுதும்போது இருந்த பண்பாடு பேசும்போதும் வந்தது; பேசும்போது அமைந்த மிடுக்கு எழுதும்போதும் அமைந்தது.

திரு.வி.க.வின் கையில் **'மேடைத் தமிழ்'** என்ற நூல் ஒன்று வந்து சேர்ந்தது; அவருடைய முன்னுரை பெறுவதற்காக வந்த நூல் அது. அதைக் கண்டதும் திரு.வி.க.வின் உள்ளம் மேடை ஆயிற்று; அவருடைய எழுதுகோல் சொற்பொழிவு செய்யத் தொடங்கிவிட்டது. சொற்பொழிவுக் கலை பற்றிய நூலுக்கு அவர் எழுதிய நீண்ட முன்னுரை சொற்பொழிவாகவே அமைந்து விட்டது.

"தோழர்களே! உங்கள் முன்னிலையில் யான் நிற்கிறேன். ஏன் நிற்கிறேன்? தெரியுமா? 'மேடைத் தமிழ்' என்னும் நூலுக்கு 'அணிந்துரை' கூறப் போகிறேன். இக் கூற்று உங்கட்கு வியப்பூட்டலாம். "அணிந்துரைக்கா மேடை! தோழர்களே என்ற விளிப்பு! நன்று; நன்று!" என்று உங்களிற் சிலர் நகைக்கலாம்; சிலர் எள்ளலாம்."

இவ்வாறு செந்தமிழ்ச் சொற்கள் பல விரவப் பேசிய போதும், எழுதிய போதும் அவருடைய இனிய தமிழ் கேட்கும் மக்களையும் கற்கும் மக்களையும் எளிதில் கவர வல்லதாகவே விளங்கியது. அதற்குக் காரணம் அவருடைய எண்ணங்களின் இயல்பான போக்கிலே வாக்கியங்கள் அமைந்த நேர்மையே ஆகும். சிலர் மனத்தில் எண்ணங்கள் எழும்போக்கில் அவர்கள் எழுதும் வாக்கியங்கள் அமைவ

தில்லை. அதனால் கேட்போர் அல்லது கற்போருடைய உள்ளத்தில் அந்தக் கருத்துக்கள் நேரே சென்று பதிவ தில்லை.

"இத்தகைய போக்கில் உள்ளத்திலிருந்து நேரே வாக்கியங் கள் வடிவு கொள்ளாமல் வளைந்தும் பிறழ்ந்தும் அமைந் தால், அவை கற்போரின் உள்ளத்திலும் நேரே சென்று பதிவதில்லை."

என்று விளக்கக் கூடிய வகையில் திரு.வி.க.வின் எண்ணங் கள் நேரடியாக வாக்கியத்தில் வடிந்தமையால், அவை கற்போரின் உள்ளத்திலும் எளிதில் திருத்தமாகப் பதிய முடிந்தது.

எடுத்துக்காட்டாக, பெரியபாளையத்தில் அம்மன் கோயிலில் தாம் சிறுவனாக இருந்து விளையாடியதைப் பற்றிக் குறிப்பிடும்போது,

"பெரியபாளையத்தம்மையார் கோயிலில் ஆண்டுக் கொரு முறை பல்லக்குச் சேவை மிகச் சிறப்பாக நடை பெறும். அன்று இராயப்பேட்டையே அங்கு இருக்கும். சிறுவர் கூட்டங்கூட்டமாய் விளையாடுவர்."

என்று எழுதியுள்ளார் இந்தக் குறிப்பில் செந்தமிழ்ச் சொற்கள் விரவியுள்ளன. ஆயினும் வாக்கியங்களின் போக்கும் எண்ணங்களின் போக்கும் ஒரே தன்மையாக இருத்தல் காணலாம். உணர்ச்சியோடு எண்ணும்போதும் அவ்வாறே எண்ணத்தை வெளியிடும் போதும் "அந்தத் திருவிழாவுக்கு இராயப்பேட்டையில் உள்ளவர்கள் எல் லோரும் போவது வழக்கமாகும். ஊரில் உள்ள சிறுவர்கள் பற்பலராய்க்கூடி விளையாடிக் கொண்டிருப்பார்கள்" என்று எண்ணுவது இல்லை. இவை தமிழ் வாக்கியங்களே; எழுவாய், பயனிலை அமைந்த வாக்கியங்களே; ஆனாலும் உணர்ச்சியுடன் எண்ணுவோரின் எண்ணங்களின் போக்கு இவற்றில் இல்லை "இராயப்பேட்டையே அங்கே இருக்கும்.

சின்ன பிள்ளைகள் கூட்டம் கூட்டமாய் போய் அங்கே விளையாடுவர்" என்பதே உணர்ச்சியோடு எண்ணங்கள் அமையும் முறை. திரு.வி.க.வின் நடையில் எந்த நூலாயினும் எந்தத் துறையாயினும் இத்தகைய நேர்ப்போக்கு இயல்பாக அமைந்திருத்தலைக் காணலாம். அதனால்தான் அரசியல், இலக்கியம், மாதர் முன்னேற்றம், இயற்கை வருணனை முதலான எந்தத் துறையிலும் அவருடைய தமிழ், வளம் கெழுமிய செந்தமிழாகத் திகழ்ந்த போதிலும் கற்பவரின் உள்ளங்களைக் கவர வல்ல தூய இனிய தமிழாகவும் உயிருள்ள நடையாகவும் விளங்கியது. எடுத்துக்காட்டாக மற்றும் இரு பகுதிகள் காண்போம்.

"மௌன சுவாமிகள் என்று ஒருவர் இருக்கிறார். அவர் ஊரில்லார்; பேரில்லார். அவர் எங்கே பிறந்தாரோ? எங்கே வளர்ந்தாரோ? ஒன்றும் தெரியவில்லை... சுவாமிகள் கை காசைத் தீண்டாது; உண்ணுதற்கு எக்கலனையும் தீண்டாது. கை ஏந்திக் கவளம் வாங்கிக் கொள்ளும். எவரும் சுவாமி கள் காலில் விழுதல் கூடாது. அவர் படமெடுக்கும் இடங் களில் நிற்பதில்லை. அவர் இரசவாதம் செய்வதில்லை; அற்புதங்கள் நிகழ்த்துவதில்லை; எவ்வித மோச வழியிலும் நுழைவதில்லை; சாதாரண மனிதரைப் போலவே உலவு கிறார்... வேலூர் வட்டங்களில் சர்க்காவையும் கதரையும் பெருக்கிய பெருமை சுவாமிகளுக்கு உண்டு. சுவாமிகளின் தொண்டு காந்தியடிகள் கருத்தையே கவர்ந்தது. அதனால் அஃது ஒரு முறை 'யங் இந்தியா' விலும் இடம் பெற்றது. கடந்த ஆடித் திங்களில் (1943) வெட்டு வாணத்திலே சுவாமி களை நோக்கி 'யான் பல ஆண்டு சுவாமிகளுடன் பழகி வருகிறேன். எனக்கு ஏதேனும் வழிகாட்டலாகாதா?' என்று கேட்டேன். சுவாமிகள் சுண்டுவிரலை உயர்த்திச் சுழற்றி னார். அதன் பொருள் இன்னும் உலகத் தொண்டு செய்க என்பது 'ஒரு பொருள் நிலை என்பது என்ன?' என்று மீண்டும் கேட்டேன். 'அதுதானே வரும்' என்று பதில்

கிடைத்தது. யான் கண்ட முடிபும் சுவாமிகளின் கருத்தும் ஒன்றாகவே இருந்தன.”

“அப்பெரியாரைப் புலவர் என்று சொல்வதா? வேதாந்தி என்று சொல்வதா? தொண்டர் என்று சொல்வதா? என்னென்று சொல்வது தொண்டர் என்று சொல்லவே என் மனம் ஒருப்படுகிறது. வேணுகோபால நாயக்கரின் புலமையும் வேதாந்த உணர்வும் அவரைத் தொண்டராக்கின. தொண்டு என்னும் புனிதத்தெய்வம் வேணுகோபால நாயகராகி நிற்கிறது என்று சொன்னால் என் உள்ளம் நிறைவு எய்தும். நாயகரும் யானும் ஓராண்டில் பல இடங்களிற் சந்திப்போம் தொண்டரைக் கண்டு இன்புறும் பயனை யான் பெற்றவனானேன் பண்டைத் திருத்தொண்டர் நினைவு தோன்றும் போதெல்லாம் வேலூர் நாயக்கரின் நினைவும் உடன் தோன்றும். ஆண்டு தோறும் ஆடித் திங்கள் நாலாம் வாரத்தில் யான் வெட்டு வாணத்திற்குச் செல்வது வழக்கம். அங்கே கூட்டங்கூடும். சொற்பொழிவுகள் நிகழும். பலி நிறுத்தத்துக்கென்று மறியலும் நடக்கும். மறியல் தொண்டில் வேணுகோபால நாயக்கர் தலைசிறந்து விளங்குவார். ஒருமுறை ஓரம்மை யார் ஆவேச முடையவராய்த் தாடகைபோல் வீறி எழுந்து என்னுள்ளங் கொண்ட பெரியாரை- அன்பரை- மெய்த் தொண்டரை ஓங்கி அறைந்தார். அவ்வறையால் எழுந்த மின்னல் என் கண்ணில் பட்டது; இடி என் காதில் விழுந்தது; பொறிகள் கலங்கின; தொண்டர் நாயகர் பொறுமை யானார். அவர் கிறிஸ்துவாகக் காணப்பட்டார்.”

சான்றோர் இருவரைப் பற்றி அவர் எழுதியுள்ள இந்தக் குறிப்புகளில் அவருடைய இயல்பான எளிய தமிழ் நடையைக் காணலாம். இத் தமிழ்நடையில் செம்மையும் தூய்மையும் உயிரோட்டமும் ஒருங்கே விளங்குதல் காணலாம் இதே நடை உணர்ச்சி மிகுந்த இடங்களில் வீறும் மிடுக்கும் வேகமும் மிகப் பெறும் என்பதைத் தமிழ்ச் சோலை, தமிழ்த் தென்றல் முதலியவற்றில் காணலாம்.

9. செய்யுள் தொண்டு

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் நாட்டின் வரலாற்றை வளப்படுத்திய பெருமக்கள் சிலர். அவர்களில் திரு.வி.க. ஒருவர். திரு.வி.கவின் வாழ்வில் தனிச் சிறப்பும் உண்டு. மற்றத் தலைவர்கள் ஒரு துறையில் அல்லது இரு துறைகளில் பணியாற்றியிருக்கிறார்கள். தலைவர் திரு.வி.க. தொண்டு புரிந்த துறைகள் பல. அவர் தொண்டு ஆற்றாத துறை எது என்றுதான் தெரியவில்லை. அரசியல் தொழில், சமயம், இலக்கியம், மாதர் . நலம், சீர்திருத்தம், இளைஞர் முன்னேற்றம், பொருளாதாரச் சீரமைப்பு முதலிய பல துறைகளிலும் அவர் தொண்டு புரிந்தார். பேச்சிலும் பெருமன்னராகத் திகழ்ந்தார்; எழுத்திலும் மிகத் தேர்ந்தவராக விளங்கினார். எழுத்துத் துறையில் உரைநடையும் உண்டு; பாட்டும் உண்டு. திரு.வி.க. வின் எழுத்து, பெரும்பாலும் உரைநடை வடிவத்தையே பெற்றது. ஆயினும் தொடக்கத்திலேயே செய்யுள் இயற்றும் திறன் அவர்க்கு இயல்பாக அமைந்திருந்தது. ஓய்வற்ற வாழ்வு, நாள்தோறும் வாரந்தோறும் எழுதித்தர வேண்டிய பத்திரிகை நெருக்கடி, அவ்வப்போது அரசியல் முதலிய மேடைகளுக்கு வேண்டிய கருத்துக்களை வெளியிடும் கடமை- ஆகிய இவைகள் அவருடைய செய்யுள் முயற்சியை வளர வொட்டாமல் செய்தன. ஆயினும் அவரிடம் இயற்கையாய் அமைந்திருந்த அந்த ஆற்றலை வெளிப்படாமல் தடுக்க முடியவில்லை.

தொடக்கத்தில் 'உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல்!' என்ற பெயரால் அவர் வெளியிட்ட சிறு நூல் செய்யுள் நூலே ஆகும்.

தமிழினைப் போல் உயர்ந்தமொழி
தரணியில்வே றெங்குமிலை
தமிழனைப்போல் மொழிக்கொலையில்
தலைசிறந்தோர் எவருளரே?

முதலான பாடல்கள் அந்தத் தொகுதியில் அமைந் திருந்தன.

பிற்காலம் அவருக்கு ஒருவாறு ஓய்வு தந்தபோது அவ ருடைய நெஞ்சம் பொதுமை நெறியில் (சமரச சன்மார்க்க நெறியில்) மிகுதியும் ஈடுபட்டது, 'முருகன் அருள்வேட்டல்', 'திருமால் அருள் வேட்டல்', 'கிறிஸ்து அருள் வேட்டல்,' 'சிவன் அருள் வேட்டல்' என்னும் செய்யுள் நூல்கள் அவரால் இயற்றப்பட்டன. தம் வாழ்க்கையில் உணர்ந்த உயர்ந்த கருத்துக்கள் பலவற்றை அவற்றில் அமைந்திருக் கின்றார். 'உலக வாழ்வின் குறைகள் பலவும் நீங்க வேண்டும்' என்றும் அவற்றில் முறையிட்டிருக்கின்றார். அந்த நூல்களில் இயற்கை வருணனையும் கற்பனை வள மும், உணர்வுச் செல்வமும் நிரம்பிய பாட்டுகளும் உண்டு, சமரச சன்மார்க்கம் என்னும் தம்முடைய ஆர்வம் மிக்க கொள்கையை நாற்பத்து நான்கு தலைப்புகளின் கீழ் அவர் பாடி உதவியுள்ளார். அந்த நூல் 'பொதும்ம வேட்டல்' என்று கூறப்படும். இயற்கை வாழ்வு, மனத்தின் இயல்பு அருளின் பெருமை, முதலிய பலவற்றைக் குறித்துப் பலவாறு விளக்கிப் பாடியுள்ளார். திரு.வி.க. அவர்களின் உள்ளம் எத்தகையது என்று ஒரு நூலால் அறிய வேண்டின் அது பொதுமை வேட்டல் என்னும் இந்த நூல் எனலாம்.

காலையிலே எழுந்துலவிக் கடன் களாற்றிக்
கதைபேசித் தொழில்புரிந்து காசு தேடி
மாலையிலே களித்துறங்கல் வாழ்க்கை யாமோ?
மக்கள்நிலை அவ்வளவில் மாய்ந்தோ போகும்?

மேலையுமே தொடர்ந்து செலும் மேன்மைத்தன்றோ
விரியுலகில் விளம்பரமே விரும்பா தென்றும்
காலடியில் தலைசாய்த்துக் கருத்தை வைத்துக்
கடன்கள்செய அருள்புரிவாய் கருணைத் தேவே!

இதுபோன்ற பல அரிய பாடல்கள் இந்நூலில் உள்ளன.

தளர்ந்த முதுமையில், பார்வை குன்றிய நிலையில் அவர் கிறிஸ்துவின் அருள் பற்றியும், அருகன் நெறி பற்றியும் பாடியுள்ளார். கண் பார்வை இழந்த நிலை அவருடைய உரைநடை எழுதும் திறனுக்கு இடையூறு ஆயிற்று. அதுவே, அவருள் அடங்கிக் கிடந்த செய்யுள் திறனுக்கு வளர்ச்சி யும் ஆயிற்று. தம் உள்ளத்தில் அவ்வப்போது தோன்றிய கருத்துக்களையெல்லாம் சீரும் அடியுமாக அமைத்து, நினைவுவைத்து வந்தவரிடம் தொகுத்துச் சொல்லி, எழுதச் செய்தார் 'இருமையும் ஒருமையும்,' சித்தம் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல்.' 'முதுமை உளறல்' 'வளர்ச்சியும் வாழ்வும்' அல்லது 'படுக்கைப் பிதற்றல்' என்னும் நூல்கள் அவர்தம் கை எழுதாத நூல்கள்; அவர் உள்ளக் கிழியில் எழுதி வைத்துப் பிறர் காண உதவிய சொல்லோவியங்கள். தம்முடைய வாழ்க்கை அனுபவத்தைத் தம் வாழ்வின் அந்தி மாலையில் உணர்ந்தவாறு அந்நாளில் பாடியுள்ளார். உரைப்பாட்டு என்று சொல்லத்தக்க அகவல் (ஆசிரியப்பா) இவ்வாறு அவர்தம் அனுபவத்தை வடித்துத் தருவதற்குப் பயன்படும் இறுதிக் கருவி ஆயிற்று. அந்தப் பாடல்களில் சோர்வு இல்லை; அச்சம் இல்லை; கலக்கம் இல்லை. அன்பு, குழைவு, தெளிவு, நம்பிக்கை இவற்றையே காண்கின்றோம். சான்றோர் ஒருவரின் சிறந்த வாழ்வு இவ்வாறு முடிதல் இயல்பே! ஆகும்.

சிந்தனை செய்க! சிந்தனை செய்க!
எந்தப் பொருளையும் சிந்தனை செய்க!
சிந்தனை, ஆய்வை உந்துதல் உறுதி
ஆய்க ஆய்க! எதையும் ஆய்க!
எதையும் ஆய்க! பதைபதைப் பின்றி
விதையை ஆய்க! விளைவை ஆய்க!
முதலை ஆய்க! முடிவை ஆய்க!
கருவை ஆய்க! உருவை ஆய்க!
பருமையை ஆய்க! நுண்மையை ஆய்க!
அணுவை ஆய்க! மலையை ஆய்க!
அண்ட பிண்டம் அனைத்தையும் ஆய்க!
ஆழ்ந்தே ஆழ்ந்தே ஆய்ந்து தோய்க
பிரியும்– உறையும்– மறையும்– பொருள்கள்
அழிவதில்லை; ஒழிவ தில்லை;
மாறுதல் நிகழ்ச்சி தோன்றுதல் கூடும்
பழமை புதுமையாய்ப் பழகுதல் உண்மை
மாற்றம் புரியும் ஆற்றல் எதுவோ?
சிந்தனை செய்க! சிந்தனை செய்க!
'வளர்ச்சி' என்றே உணர்ச்சியில் படுமே.

(வளர்ச்சியும் வாழ்வும்)

10. தமக்கென வாழாமை

கற்றறிந்த உண்மைகளும் கேட்டறிந்த உண்மைகளும் எல்லோருடைய உள்ளத்திலும் ஒட்டுகின்றன; ஆனால் பதிவதில்லை. அரிச்சந்திர நாடகத்தைப் பலரும் கண்டு உருகுகின்றார்கள். ஆனால் அது காந்தியடிகளின் உள்ளத்தில்தான் உண்மையை- வாழ்நாள் முழுதும் மாறாத உண்மையை- விதைத்து வேரூன்றித் தழைக்கச் செய்தது. திருக்குறளைப் பலரும் படிக்கிறார்கள்: ஆனால் ஒரு சிலரின் உள்ளத்தில்தான், திருக்குறளின் உண்மைகள் பதிந்து அவர்களின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த முடிகின்றது.

உள்ளத்தில் ஆழ்ந்த உணர்வு ஏற்பட்டால் அது விரைவில் செயலாக மலரும். பெரும்பாலோருடைய வாழ்க்கையில் உள்ளத்திற்கும் உதட்டிற்கும் இடையே திரை ஒன்று உள்ளது; சொல்லுக்கும் செயலுக்கும் திரை வேறொன்று உள்ளது. அதனால் உள்ளத்தில் உள்ளது உதட்டில் வெளிப்படுவதில்லை; சொல்லில் உள்ளது செயலில் மலர்வதில்லை சிந்தை, சொல், செயல் மூன்றிற்கும் இடையே தடையோ திரையோ இல்லாமல் உண்மை ஒரே நிலையாக விளங்கும் வாழ்க்கை உடையவர்களே உத்தமர்கள்.

இத்தகைய உண்மை இல்லாதவர்கள் எத்தனை நூல்களைப் படித்தாலும் படிப்பு வேறு வாழ்க்கை வேறாக அமைத்துக் கொண்டு உள்ளொன்று புறமொன்றாக நடிப்பார்கள் இப்படிப்பட்டவர்கள் உலக வாழ்க்கையில் வெற்றிபெறுவது உண்டு. உள்ளம் உணர்த்தும் உண்மைக்கு ஏற்ப வாழ்க்கைய நடத்தும் உத்தமர்கள் உலகில் தோல்வி

உறுவதும் உண்டு ஆனால் போலியாக நடிப்பவர்களின் வெற்றி, மற்ற மக்களின் வாழ்க்கைக்குத் தீங்கு ஆகும். இத்தகைய உத்தமர்களின் தோல்வியோ மற்ற மக்களின் வாழ்க்கைக்கு உதவியாக நன்மை செய்கிறது.

செல்வம் உயர்ந்தது அன்று; வாழ்க்கை, செல்வம் சேர்ப் பதற்காக ஏற்பட்டது அன்று. சேர்த்துவைத்தல் திருடு போன்றதே" என்று கூறும் நூல்களைப் பலர் படிக்கிறார் கள். பிறர்க்கும் எடுத்துச் சொல்கிறார்கள். ஆனால் உள்ளத் திலேயே அதை விட்டுவிட்டு, வாழ்க்கையில் வேறு வகை யாக நடப்பார்கள்; பணமே குறிக்கோளாக அலைவார்கள்.

சான்றோர் திரு.வி.க அவர்களும் இத்தகைய நூல்களைப் படித்தார்; உணர்ந்தார்; சமய நூல்களில் எல்லாம் இத்தகைய கருத்துக்களை உணர்ந்தார்; சமயப் பெரியோர் பலர் வாழ்ந்த வாழ்க்கையிலும் இந்த நெறியைக் கண்டு போற்றினார். இதுதான் உண்மையான சமய வாழ்வின் அடிப்படை என்று தெளிந்தார்; பிறர்க்கும் எடுத்துரைத்தார். இந்த அளவோடு அவர் நின்றுவிடவில்லை செல்வத்தைப் பொருட்படுத்தவில்லை; செல்வம் சேர்க்கும் முயற்சியில் ஈடுபடவில்லை; தாம் எழுதிய நூல்களிலிருந்து வந்த வரு வாயையும் தமது என்று எண்ணவில்லை. ஏழைக் குடியில் பிறந்தது பற்றிப் பெருமையோடு சொல்லிக் கொண்டார், செல்வ வளம் இல்லாமல் வாழ்வது பற்றிக் கவலைப் படாமல் அமைதியோடு வாழ்க்கையை நடத்தினார். பணப் பை (மணி பர்ஸ்) இல்லாமலும் பெட்டிச் சாவி வைத்துக் கொள்ளாமலுமே வாழ்க்கையை நடத்தினார்.

ஒருநாள் மாலையில் சாது அச்சுக்கூடத்திற்குச் சென்று திரு.வி.க.வைக் காண நின்றேன். அங்கிருந்தவரை நோக்கி, "சின்ன அய்யா எங்கே?" என்றேன். "மேலே இருக்கிறார். வருவார்" என்று விடை வந்தது. சிறிது நேரத்தில் அவர் மேல்மாடியிலிருந்து கீழே இறங்கி வந்தார். வெள்ளைக் கதர் வேட்டி உடுத்து வெள்ளைக் கதர்ச் சட்டை அணிந்து

மேலே வெள்ளைக் கதர்த்துண்டு ஒன்றைக் கழுத்தைச் சுற்றிப் போட்டுக் கொண்டு பொலிவு பெற்ற முகத்தோடு மெல்ல நடந்து வந்தார்.

நெருங்கி வந்ததும். "வணக்கம்" என்றேன்,

"ஓ! வா அப்பா" என்று வரவேற்றுப் புன்முறுவல் பொலிய, "பெரம்பூர் போக வேண்டும். தொழிலாளர் சங்கக் கூட்டம் இருக்கிறது. நேரம் ஆகிறது. போய்க் கொண்டே பேசலாம். வருகிறாயா?" என்றார்.

"வருகிறேனுங்க" என்றேன்

அதற்குள் அவர் இங்கும் அங்கும் பார்த்தார். யாரையோ எதிர்பார்ப்பது போல் பார்த்தார். எதிரே இருந்த அறைப் பக்கமாகச் சென்று எட்டிப் பார்த்தார். மீண்டும் வாசல் பக்கமாக வந்தார்.

"யாரைப் பார்க்கிறீர்கள்?" என்றேன்.

"அண்ணாவை" என்றார்.

தோட்டத்திலிருந்து திரு.வி.க.வின் தமையனார் பரபரப்பாக வந்தார். வந்ததும் தம்பியாரைப் பார்த்து "என்னைத் தேடிக் கொண்டிருக்கிறாயா? எங்கேயாவது கூட்டமா? தெரியாதே" என்றார்.

"பெரம்பூர் தொழிலாளர் சங்கம்" என்றார் தம்பியார்.

தமையனார் உடனே அறைக்குள் புகுந்தார் இரண்டு ரூபாய் எடுத்து வந்து தம்பியாரின் கையில் கொடுத்தார் தொகையை நான் பார்த்தேன். திரு.வி.க. பார்க்கவில்லை. எவ்வளவு தொகை என்று எண்ணவில்லை. பார்க்காமலே வாங்கிச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டார்.

அச்சகத்திலிருந்து அவரும் யானும் வெளியே வந்தோம் பஸ் நிற்கும் இடத்தை அடைந்ததும் திரு.வி.க. நின்றார் யானும் நின்றேன். என் மனத்தில் எவ்வளவோ எண்ணங்

கள் எழுந்தன இலக்கிய உலகில் ஒரு பெரும் புலவர், சமய உலகில் ஒரு சான்றோர் அரசியல் உலகில் ஒரு தலைவர், பத்திரிகை உலகில் ஒரு வழிகாட்டி, தொழிலாளர் உலகில் ஒரு தனியரசர் என வாழும் திரு.வி.க. அவர்கள். இவ்வாறு பஸ் நிற்கும் இடத்திற்கு வந்து அதுவரும் வரை யில் அங்கே நிற்கிறாரே என எண்ணினேன். இவருடைய ஆதரவால் முன்னேறியவர்கள் பலர்; இவருடைய ஆதர வால் எழுத்திலும் பேச்சிலும் வல்லவர்களாய்ச் சிறப்புப் பெற்றவர்கள் பலர்; அவர்களில் யாரேனும் இப்படி பஸ் நெம்பரைப் பார்த்துக் கொண்டு பஸ் ஓடும் சாலைகளில் நின்று காலத்தைப் போக்குவோர் உண்டோ என்று என் மனம் எண்ணியது. ஒரு கட்டுரைக்கு 50,100 என்றும் ஒரு சொற்பொழிவுக்கு 100, 200, 300 என்றும், எந்தப் பொது வேலையையும் விலை கூறி விற்றுப் பணமாக்கி வாழும் இந்த உலகில் அவர்களுக்கெல்லாம் முன்னோ ராக விளங்கிய இவர் மட்டும் இப்படி வாழ்வது ஏன் என எண்ணி வருந்தினேன்.

உள்ளத்தில் தோன்றிய எண்ணங்களை அடக்கிக் கொண்டு வேறுவகையான கேள்வி கேட்டேன். “இப்படி உங்களைப் போல் உள்ள தலைவர்கள் பஸ்ஸுக்காகக் காத்திருந்து போவதில் காலம் எவ்வளவு வீணாகிறது?” என்றேன்.

“என்ன செய்யலாம்! நான் ஏழை, ஏழைகளுக்காகத் தொண்டு செய்கிறவன் ஏழ்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். எனக்கு இதுவே போதும், இந்த நிலையிலேயே எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்யவேண்டும் என்பதுதான் என் ஆசை” என்றார். அமைதியாக.

மேற்கொண்டு பேச முடியாமல் நின்றேன். பாரி முனைக்குச் செல்லும் பஸ் வந்தது சென்ட்ரல் நிலையத் தில் இறங்கினார். நானும் இறங்கினேன். பெரம்பூர்க்குச் செல்லும் பஸ் வரும் வரையில் காத்திருந்து அதில்

ஏறினோம். பெரிய மேட்டைக் கடந்து போகும்போது அவர் முகத்தைப் பார்த்து, "உங்கள் உடம்புக்கு இப்படி பயணம் செய்வது நல்லது அல்ல" என்றேன்.

"நானும் என்னென்னவோ செய்து உடம்பைக் காப் பாற்ற வேண்டும் என்று எண்ணினேன்; எழுதினேன்; சொன்னேன். இப்பொழுதெல்லாம் என் மனம் மாறி விட் டது. மற்றவர்களைப் போல் வாழ்ந்து மற்றவர்களுக்காக வாழ்ந்து செத்துப் போவதில்தான் உண்மையான அமைதி இருக்கிறது. அதுதான் உண்மையான வாழ்க்கை என்றார்.

என் உள்ளத்தில் காந்தியடிகளின் எளிய வாழ்க்கை வந்து நின்றது. மற்றவர்களைப் போல வாழ்தல்; மற்றவர் களுக்காக வாழ்தல்; இந்தக் கொள்கை சிலருடைய உள்ளத் தில் ஊறிப்போகிறது; அவர்களின் வாழ்க்கையை மாற்றி விடுகிறது. காந்தியடிகளின் குடியானவர் கோலம்- முழங்காலுக்கு மேல் உடுத்து, சட்டை அணியாமல் எளிய வாழ்வு நடத்தியகோலம்- நினைவுக்கு வந்தது. மாட மாளிகையையும் விட்டுக் குடிசையில் தங்க அவருடைய மனம் விழைந்தது. செல்வாக்கோடு உயர்ந்த வழக்கறிஞராய் அல்லது நீதி மன்றத் தலைவராய் அல்லது அமைச்சராய் வாழ்ந்து அரச போகம் பெறும் வாழ்வைத் துறந்து, தாழ்த் தப்பட்ட எளிய ஏழை மக்களைப்போல் ஏழை மக்களுக் காக வாழ்க்கை நடத்தினார் அந்தப் பெருமகன்.

திரு.வி.க.வின் வாழ்க்கையும் அப்படிப்பட்டது. அது எளிமையில் தொடங்கினாலும் செல்வாக்கில் உயர்ந்து நின்றது. அவர் விரும்பியிருந்தால் செல்வமும் நிறைந்திருக் கும். தமிழாசிரியர் தொழிலிருந்து பத்திரிகையுலகிலும் அரசியல் உலகிலும் புகுந்து பல அமைச்சர்களை ஆக்கவல்ல நாவும் எழுதுகோலும் பெற்று விளங்கிய அவர் எண்ணியிருந்தால், எண்ணியவாறு செல்வம் சேர்த்திருக்க முடியும். அவர் உள்ளம் அதை நாடவில்லை. உள்ளத்தின்

உணர்வுக்குத் திரையிட்டு மூடி உலக வாழ்க்கையை வேறொரு வகையாக நடத்த அவரால் முடியவில்லை.

பல ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் அவருடன் பஸ்ஸில் சென்ற போது பெற்ற அனுபவம் இது. அவருடைய உள்ளம் தமக்கென ஒரு வகை நிலையும் தணிவகைச் சுகமும் தேடிக்கொள்ள மறுத்தது என்பதைப் பல நாள் கண்டு உருகியிருக்கிறேன்.

"ஏறக்குறைய இரண்டரை ஆண்டு பத்திய உணவில் கண்ணும் கருத்துமாயிருந்தேன். பின்னே பத்தியம் என்னை விடுத்துப் பறந்தோடிற்று. வீட்டிலும், யான் செல்லும் இடங்களிலும் எனக்கென்று தனியே சமையல் வெளிப்படுவது என்னைப் பழையபடி உறுத்தியே வந்தது" என்று அவரை தம் வாழ்க்கைக் குறிப்புகளில் எழுதி யுள்ளார்.

உடம்பைக் காப்பாற்றுவதற்காகவும் தமக்கென்று ஒன்றும் தனியே தேடிக்கொள்ளாத, முடியாத அருள் நெஞ்சம் எப்படி வேறு சிறப்புகளைத் தேடிப் பெற முடியும்? எப்படித்தான் செல்வத்தைச் சேர்க்க முடியும்? பிறப்பதற்கு முயல்கின்றவர்கள் உடம்பும் மிகை என்று எண்ண வேண்டும் என்றார் திருவள்ளுவர். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்க்கு வாழ்வு நடத்துவதற்கும் உடம்பு மிகை போல் தோன்றுகிறது!

11. பெண்ணின் பெருமை

பெண்களைப் புகழ்ந்து பாடுதல், பெண்ணுடம்பை வருணித்தல், பெண்ணின்பத்தைச் சிறப்பித்தல், பெண்களை நாடி ஏங்குதல்- இப்படிப் பலர் வாழ்ந்த காலம் உண்டு. அப்போதும் சிலர் நெறியோடு நின்று வாழ்க்கையில் உயர்ந்தனர்; சிலர் நெறி தவறி அலைந்து கலங்கினர்.

இது ஒரு நிலை.

அடுத்தாற்போல் ஒரு நிலை வந்தது. பெண்களை இகழ்ந்து பாடுதல், பெண்ணுடம்பை இழித்துக் கூறிப் பழித்தல், பெண்ணைப் பேயென்று வெறுத்தல், பெண்ணுடன் வாழாமல் ஓடித் தப்பமுயலுதல்- இப்படிச் சிலர் வாழ்க்கையை நடத்தினர். துறவிகள் பலருடைய வாழ்க்கை இந்தப் போக்கில் அமைந்தது. பட்டினத்தார் முதலான இல்லறத்தாரும் பிற்காலத்தில் மனைவி மக்களைத் துறந்து பெண்களை வெறுத்தும் பழித்தும் ஒதுங்கினர்.

மூன்றாம் நிலையில், மேற்குறித்த இரண்டுமே கலந்து அமைந்தன, அந்தக் காலத்தில், பெண்களை வருணித்துப் பாடும் இலக்கியமும் எழுந்தது; பெண்களைப் பழித்துத் தாழ்த்தும் இலக்கியமும் எழுந்தது.

தமிழிலக்கியத்தில் இந்த மூன்று நிலைகளையும் காணலாம்.

திரு.வி.க. தமிழிலக்கியம் முழுவதும் கற்றார். பழந்தமிழ் நூல்கள் முதல் குமரகுருபரர், சிவப்பிரகாசர், இராமலிங்க

அடிகளார் பாடல்கள் வரையில் எல்லாவற்றையும் கற்றார். பெண்களை வருணித்துப் புகழும் புலவரிடமும் பழகினார். பெண்களைப் பழித்து ஒதுக்கும் துறவியாரிடமும் பழகினார். பெண்களை நாடி ஏங்கும் இளைஞரிடமும் பழகினார். பெண்களை விட்டு விலகிய தொண்டர்களிடமும் பழகினார்.

"ஆனால், அவர்மனம் பெண்களை வெறுக்க வில்லை; பெண்ணின்பத்தையே பேரின்பமாகக் கருதவும் இல்லை. பண்பாடு வாய்ந்த ஓர் அம்மையாரை மணந்து கொண்டார்; இல்லறம் நடத்தினார்; இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை ஆனார். அன்பின் சிறப்பைக் கண்டார்; போற்றி மகிழ்ந்தார். குழந்தையையும் துணைவியாரையும் இழந்தார். தனிமை வாழ்வை உற்றார். ஆயினும் அவர் துறவியாக வில்லை. துறவிக்கு உரிய வேடம் தாங்கவில்லை. வெள்ளாடை உடுத்துத் தமையனாரின் குடும்பத்தில் ஒரு தொண்டராக விளங்கி வாழ்ந்தார். தம் தாயிடமும் அண்ணியாரிடமும் பழகியது போலவும் தம் தமையனாரின் மகளிடமும் பழகியது போலவும், மற்றப் பெண்களிடம் அன்பு கொண்டு பழகினார். அரசியலிலும் சமயத் துறையிலும் இலக்கியத் துறையிலும் தொழிலாளர்களிடையிலும், அவர் தொண்டு ஆற்றிய காலத்தில் பல பெண்களோடு பேசித் தம் அன்புரைகளாலும் அறிவுரைகளாலும் அவர்களுக்கு நல்வழி காட்டினார். பெண்கள் அவரைத் தந்தையார் போலவும் ஆசிரியர் போலவும் மதித்துப் போற்றி அன்பு செலுத்தினார்.

எல்லைகளில் நின்று ஒன்றைப் புகழ்வதும் மற்றொன்றைப் பழிப்பதும் எல்லோராலும் முடியும். நடுநிலையில் நின்று விருப்பு வெறுப்புக்களை அகற்றி, உண்மையைக் கண்டு கடமையைச் செய்து வாழ்வது. பலரால் முடியாது. கொள்கைத் திட்பமும் ஒழுக்கச் சிறப்பும் உடைய நேர்மையாளரான வீரர் ஒரு சிலரால்தான் இது முடியும். போர்க்

களத்து வீரத்துக்கு உடலுரம் வேண்டும். இந்த நடுநிலைமை வீரத்துக்கு நெஞ்சுரம் வேண்டும்; நேர்மை வேண்டும்.

திரு.வி.க. உடம்பால் இளைத்தவராக இருந்த போதிலும் உள்ளத்தால் பெரிய வீரர்; கொள்கைத்திட்பம் உடையவர்; ஒழுக்கத்தால் உயர்ந்தவர்; நேர்மை தவறாதவர். ஆகவே வட துருவத்திற்கும் தென் துருவத்திற்கும் ஓடி ஓடிப் புகழ்வதிலும் பழிப்பதிலும் அவர் காலம் கழிக்கவில்லை.

பெண்களைப் பொறுத்த வரையிலும், அவர் பெண்ணுடம்பை வருணித்துப் பேசியதும் இல்லை. எழுதியதும் இல்லை. தனியே நண்பர்களோடு அளவளாவும் போதும், அவர் காமக் குறிப்பான பேச்சுகளைப் பேசியதில்லை.

சமய நோக்கம் கொண்டு அவர் பெண்களைப் பழித்துப் பேசியதும் இல்லை; எழுதியதும் இல்லை; மிக எளிய வாழ்க்கை மேற்கொண்டு, உள்ளத் துறவியாக விளங்கிய அவர், பெண்களை மாயப் பிசாசாகக் கருதியதில்லை. இல்லறத்தை எந்தக் காரணம் கொண்டும் குறை கூறியதில்லை. துறவறம் வேண்டா என்று அவர் குறிப்பிட்ட இடங்கள் உண்டு. இல்வாழ்க்கையைப் பாவம் என்றோ, முத்திக்கு இடையூறு என்றோ கருதும் மனப்பான்மையை அவர் வெறுத்தார். ஒழுங்காக வாழ்க்கை நடத்தும் பெண்களையும் இழிவுபடுத்தும் குறுகிய மனப்பான்மை உள்ளவர்களுக்கு இடையே அவர் ஒழுங்கற்ற பெண்களையும் பழிக்காத உயர்ந்த மனப்பான்மை கொண்ட உத்தமராக விளங்கினார்.

நம்மில் பலர், பெண்கள் சிலர் தவறு செய்துவிட்டால், பலரும் அறியப் பேசத் தலைப்படுகின்றார்கள். ஆனால், ஆண்கள் செய்தாலும் கவலைப் படாமல் இருக்கின்றார்கள். இது கொடுமை என்று உணர்ந்தவர் சான்றோர் திரு.வி.க. ஆகவே, தவறிய பெண்களைக் கடிந்து பேச ஆண்களுக்கு உரிமை இல்லை என்று அமைதி மேற்கொண்டார்.

தனிப்படத் தம் நண்பர்களோடு இருந்து பேசும் பேச்சுக் களிடையிலும், பெண்களைப் பழித்துரைக்கும் சொற்கள் அவர் வாயினின்றும் வெளிவந்ததில்லை.

இவ்வளவு நெறியாக ஒருவர் தனிவாழ்க்கை நடத்துதல் அரிது; மிக அரிது. பல பொதுக்கடமைகளை மேற் கொண்டு இரவு பகலாக உழைத்த ஒருவர்- இளமையி லேயே மனைவி மக்களை இழந்து இல்லறச் செல்வத்தைத் துறக்கும்படியாக நேர்ந்த ஒருவர்- இவ்வாறு நெறியாக வாழ்க்கை நடத்தியது வியந்து போற்றத் தக்கதாகும்.

பெண்களிடத்தில் அவருக்கு இருந்த அன்பு மிகுதி என்றும் கூற வேண்டும். ஒரு குடும்பத்தில் விருந்தினராகச் செல்வரானால், அந்தக் குடும்பத்தில் உள்ள ஆண்களிடம் காட்டும் மதிப்பை விடப் பெண்களிடம் மிக்க மதிப்பு காட்டுவார்.

தம் துணைவியாரிடம் கொண்ட பேரன்பாலும் அவரால் தம் வாழ்க்கை பெரும்பயன் பெற்றது என்ற நம்பிக்கையாலும், திரு.வி.க. பெண்ணினத்திடமே பெரு மதிப்புக் கொள்ளலானார். தாம் தலைமை தாங்கும் கூட் டங்களில், பொதுவாக எல்லாச் சொற்பொழிவாளர்களை யும் வாயாராப் புகழ்ந்து பாராட்டும் வழக்கம் உடைய அவர், யாரேனும் ஓர் அம்மையாரைப் பாராட்டிப் புகழ்வதிலும் அவர்தம்அறிவையும் திறமையையும் பண்பை யும் பெருமையையும் எடுத்துரைத்துப் போற்றுவதிலும் மிகுந்த ஆர்வம் கொள்வார். ஆண்களைப் பாராட்டிப் பேசுவதைவிட மிகுதியாகவே பெண்களைப் பாராட்டுவார். யாரேனும் பெண்கள் தம்மைக் காண வரினும் எழுந்து நின்று அவர்களை வரவேற்று முகமலர்ந்து இன் சொல்கூறி ஒரு குழந்தை போல் குழைந்து நடந்து கொள்வார். பெண்கள் மனம் நோகும் வகையில் யாரேனும் பேசினால் அந்தப் பெண்களைவிடத் திரு.வி.க.வே மிக வருந்துவார். ஆண்களின் வேண்டுகோளுக்குச் செவி சாய்ப்பதைவிடப்

பெண்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முந்திக்கொள் வார். அதனால் சிலர் தம் மனைவியரோடு வந்து கண்டு பேசி தமக்கு வேண்டிய உதவிகளைப் பெற்றுச் செல்வர்.

பெண்களிடம் அவர் பேரன்பு கொண்டு விளங்கு தலைக் கண்டு மனம் பொறாத சிலர், அவரையே பெண்மை மிகுந்தவர் என்று பழித்தனர். ஒரு முறை அத்த கைய பழிப்புக்கு மறுப்பு கூறியபோது “ஆணெனும் அரக்கனாக வாழ்வதிலும் பெண்ணெனும் தெய்வமாக வாழ்வதிலும் எனக்கு விருப்புண்டு” என்று நவசக்தியில் (18.12.1925) தயங்காமல் எழுதினார்.

“ஆண்மை பெண்மையாக மாறினாலன்றி இறைமை பெற இயலாதென்று யான் பேசியும் எழுதியும் வருவது நாட்டுக்குத் தெரியும்” “என்னுடைய பேச்சும் எழுத்தும் தமிழ்ப் பெண்ணுலகில் அமைதி முறையில் அறப்புரட்சி முழு நிலை எய்தல் வேண்டுமென்பது எனது வேட்கை” இவ்வாறு நோன்பு கொண்டு உழைத்து வந்த திரு.வி.க. எந்த பழிப்புக்கும் தயங்காமல் பெண்ணின் பெருமை பேசிப் பெண்களுக்கு மதிப்புத்தந்து தூய வாழ்க்கை நடத்தினார்.

அவருடைய வாழ்க்கையின் தூய்மை பற்றியும் ஒரு சிலர் மூலைமுடுக்கில் குறை கூறிப் புறம்பேசியது உண்டு. திரு.வி.க.வின் உள்ளத்தையும் உயர்நோக்கையும் விழுமிய பண்பையும் உணர இயலாத காரணத்தாலேயே அவர்கள் புறங்கூறி மகிழ்ந்தனர் எனலாம். மாசற்ற பெருமக்கள் மீதும் மாசு கற்பிக்கும் மனங்கள் இந்த உலகில் உண்டு. ஆதலால் திரு.வி.க. பற்றியும் ஒரு சிலர் புறங்கூறியதில் வியப்பு இல்லை. ஆனால் திரு.வி.க போல் பெண்களிடம் நன்கு பழகியும் பிறன்மனை நோக்காத பெருவாழ்வு வாழ்ந்தவர்களையும் காண்பது அரிது. மனைவி தவிர மற்ற எல்லாப் பெண்களையும் தாயாகவும் தெய்வமாகவும் உடன்பிறப்பாகவும் மகளாகவும் கருதி வாழ வேண்டும்

என்று இந்திய நூல்கள் கூறும் நெறிக்கு உயர்ந்த எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தது திரு.வி.க.வின் வாழ்க்கை. அவர் மறுமணம் செய்து கொள்ள மறுத்து விட்டார்; பலர் வற்புறுத்தல் பயனின்றிப் போயிற்று. பண்முடையினால் 'தேசபக்தன்' இதழ் இடர்ப்பட்ட போது. தம் மகளை மணந்தால் 'தேசபக்தன்' போல் பத்து இதழ் நடத்துவதற்கு வேண்டிய செல்வம்தருவதாக ஒருவர் விரும்பிய விருப்ப மும் நிறைவேறாமல் போயிற்று 'கமலாம்பிகையின் பரு வுடல் மறைந்தது. அவள் உண்மை அன்பு கூடவா மறந்து போகும்? அவ்வன்பு என் ஊனில்- உள்ளத்தில்- உயிரில் ஊடுருவி இரண்டற ஒன்றி நிற்பது. அதனுள் இன்னொன்று எப்படிப் புகும்? அதற்கு இடம் ஏது? இஃது எவர்க்குத் தெரியும்? எனக்கன்றோ தெரியும்? எனக்கு மனைவி ஒருத்திதானே; இன்னொரு பெண்மணி எனக்கு எப்படி மனைவியாவாள்? அவள் சகோதரியாவாள்? கேவலம் பணத்துக்காவோ அன்புக்குத் துரோகம் செய்து, எக் காரணம் பற்றியும் மறுமணம் செய்துகொள்ள என் மனம் ஒருப்படவில்லை மறுமணம் செய்தல் கூடாது என்று உறுதி கொண்டேன்" எவ்வளவு உயரிய உள்ளம்! எத்துணை விழுமிய நோக்கம்! எத்தகைய தூய வாழ்க்கை! 'இஃது எவர்க்குத் தெரியும்? எனக்கன்றோ தெரியும்?" உலகத்தார் எல்லோரும் உணர்ந்து கொள்வதற்கு அரியதுதான்.

வழுக்கி வீழ்ந்த மாதர் (தாசிகள்) நலத்துக்காத் திரு.வி.க. உழைத்தார். மாநாடுகளில் முழங்கினார்; தம் இதழ்களில் தேசபக்தனிலும் நவசக்தியிலும்- எழுதினார். பெண்களின் சொத்துரிமைக்காகப் பேசினார்; எழுதினார் கைம் பெண்களின் (விதவைகளின்) துயர்போக்கச் சமுதாயத்தை வேண்டினார். மறுமணம் செய்து கொள்ள விரும்பிய கைம் பெண்களின் திருமணத்துக்கு உதவ வேண்டும் என்று ஆணினத்திற்கு வேண்டுகோள் விடுத்தார். கைம்பெண் மணங்களை நடத்தி வைத்தார்.

பெண்களுள் இவள் இப்படி அவள் அப்படி என்று அவர்களின் ஒழுக்கத்தைக் குறை கூறிப் பேசி அறியாத நாவினர் திரு.வி.க. ஒரு முறை ஓர் உண்மை அறியும் வேட்கை கொண்டு ஓர் அம்மையாரின் வாழ்க்கை பற்றிக் கேட்டேன். அந்தக் குடும்பத்தாருடன் திரு.வி.க. நன்கு பழகியவர். ஆகையால் அவரைக் கேட்டறிய விரும்பினேன். யானும் அந்தக் குடும்பத்தைப் பற்றி நல்லெண்ணம் உடையவன் என்பதும், அந்த அம்மையாரிடம் மதிப்பு உடையவன் என்பதும் அவருக்குத் தெரியும். அந்த அம்மையாரைப் பற்றிப் பழி கூற வேண்டும் என்பது என் நோக்கம் அன்று என்பதும் அவர்க்குத் தெரியும். “தம் கணவரின் பொருள்வளமும் உடல் நலனும் கெடுவதற்கு அம்மையாரின் தவறான நடத்தை காரணம் என்று ஊரார் பேசிக் கொள்கிறார்களே, அது உண்மையாக இருக்குமா?” என்று கேட்டேன், “நாம் எப்படி சொல்ல முடியும்?” என்றார் திரு.வி.க. சிறிது பொறுத்து “நாம் ஏன் அதைப் பற்றி எண்ண வேண்டும்?” என்றார். இந்த இரண்டு வினாக்களால் என் வேட்கையைச் சாய்த்து விட்டார் அவர்.

இவ்வாறு எத்தனையோ சான்றுகள் உண்டு. அவர் பெண்மையிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தவர் என்பதை அவருடைய பேச்சுக்கள் எழுத்துக்கள் மட்டும் அல்லாமல் வாழ்க்கை முழுதுமே சான்றாக உள்ளது எனலாம்.

பழைய நூல்களில் பெண்களுக்குப் பெருமை தரும் குறிப்புகளைப் பலமுறை சொல்லிச் சொல்லி மகிழ்வார்; பெண்களைப் பழிக்கும் பாட்டுக்களை வாயாற் சொல்ல மாட்டார் யாரேனும் எடுத்துக் கூறினாலும் செவி மடுக்காதவர் போல் வாளா இருந்து விடுவார்.

ஒருமுறை ஒரு கூட்டத்தில் பேசிய ஒருவர் திருவாசகப் பாட்டு ஒன்றைப் பாடி, பெண்களின் காம இச்சைக்கு ஆளாகி வாழ்க்கையை வீணாக்கக் கூடாது என்று விளக்கிப் பேசினார்.

வேனில்வேள் மலர்க்கணைக்கும்
வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும்
பதைத்துருகும் பாழ்நெஞ்சே
ஊனெலாம் நின்றுருகப்
புகுந்தாண்டன் இன்றுபோய்
வானுளான் காணாய்நீ
மாளவாழ் கின்றாயே.

என்ற அந்தப் பாட்டை அவர் பாடி விளக்கியபோது மாணிக்கவாசகரும் பெண்களையும் பெண்ணுறவையும் பழித்தாகவே கேட்டவர்களின் மனத்தில் பதிந்தது. ஆனால், கூட்டத்தின் தலைவர் திரு.வி.க. எழுந்து முடிவுரை கூறியபோது, அந்த எண்ணம் அடியோடு மாறி விட்டது.

"மணிவாசகப் பெம்மான் பெண்களை- தாய் இனத்தை- கலைத் தெய்வங்களைப்- பழித்தாரா? உன்னுங்கள். உன்னுங்கள், வெண்ணகை என்றார். செவ்வாய் என்றார் கரிய பானலார் கண்ணியர் என்றார். பெண்களின் அழகைப் புகழ்ந்தார்; பாராட்டினார், ஆனால் பழிக்க வில்லையே! யாரைப் பழித்தார்? எதைப் பழித்தார்? பாழும் மாதர் என்று பெண்களைப் பழித்தாரா? இல்லை, இல்லை. திருவாசகம் ஓதிய வாய் அவ்வாறு பழிக்கவில்லை. பாழ் நெஞ்சே என்று நெஞ்சைத்தான் பழித்தார். அங்குத்தான் நுட்பம் உள்ளது; உண்மை உள்ளது. உணர வல்லர்க்கே அந்த உண்மை புலப்படும் அழகுத் தெய்வங்களான பெண்களை- அன்புத் தெய்வங்களான பெண்களை- அழகு வடிவமாக அன்புருவகமாக உணர்ந்து போற்ற வேண்டும் என்பதே மாணிக்கவாசகரின் திருவுள்ளம். பெண்களைக் காமப்பொருளாக எண்ணும் நெஞ்சத்தையே அவர் பழித்தார். பாழ்மாதர் என்று கூறாமல் வாழ் நெஞ்சே

என்று குறிப்பிட்ட மணிமொழியை உன்னுங்கள், உன்னுங் கள்' என்றார்.

அப்போது கேட்டவர்களின் மனமெல்லாம் மாறி விட்டது. அவ்வாறு இடம் வாய்த்தபோதெல்லாம் பெண் குலத்தின் பெருமையைக் காக்க முனைந்த சான்றோராக விளங்கினார் அவர் அவர் இயற்றிய **'பெண்ணின் பெருமை'** என்ற உயர்ந்த நூல் அதற்குப் பெரிய சான்றாக நின்று நிலவுகின்றது.

'பொதுமை வேட்டல்' என்ற நூலில் 'குறை களைவு' என்ற தலைப்பில் அவர் பாடியுள்ள இரண்டு பாட்டுக்கள் இவ்வகையில் அவருடைய உயர்ந்த மனப்பான்மையை விளக்குவன ஆகும் அவை வருமாறு:-

காமவெறி கடல்கடந்து
காதற்கரை நண்ணிக்
காணாத நெறிகாணக்
கண்அளித்த கண்ணே!

சேமமுற ஒருத்தியுடன்
சில ஆண்டு வாழ்ந்து
சேயடைய அன்புபெறச்
செம்மைபுரி அறமே!

தேமொழியார் ஒளியினிலே
திகழ்தாய்மை நுட்பம்
சிந்தையினில் படியவைத்துச்
சிக்கறுத்த பதியே!

காமமெனப் பெண்ணுலகைக்
கருதாத கல்வி
காசினியில் பெருகிவரக்
கடவுளருள் செய்யே.

தனியொருத்தி மணந்தறத்தில்
சார்வாழ்க்கை மற்றத்
தையலரைத் தாயரென்று
சால்புறவே கருதும்

இனியமனத் திருவளித்தல்
என்றுணரச் செய்தாய்
இயற்கைமணந் தின்பநல்கும்
இறைவன் நின தருளே

கனிமொழியார் மாயையெனக்
கடிமனத்தைத் துறந்தோர்
காமஎரிக் காளாய
கதைகள்பல அறிவாய்

தனிமைவ்ழி படைப்புளத்தைத்
தகர்ப்பதன்றோ வளரும்
தரணியிலே பெண்மைநலம்
தழைக்கஅரு ளாயே.

12. அஞ்சா நெஞ்சம்

காலத்திற்கு ஏற்றவாறு சில கருத்துக்கள் மாறுவது இயற்கை. நாகரிகம் தொடங்கிய காலத்தில் ஆடுமாடுகள் நிறைய வைத்திருந்தவனே செல்வன் என்று கருதப்பட்டான். அதனால்தான் மாடு என்ற சொல்லுக்குச் செல்வம் என்று பொருள் ஏற்பட்டது. பிறகு நிலத்தில் உழுது பயிரிட்டு உணவுப் பொருள் நிறைய விளைத்து வைத்துச் சேர்த்தவன் செல்வன் என்று கருதப்பட்டான். அதற்கும் அடுத்த நிலையில், ஆடம்பரப் பொருள்களான மணியும் முத்தும் பொன்னும் வெள்ளியும் நிறைய வைத்திருந்தவன் செல்வன் என்று கருதப்பட்டான். இந்தக் காலத்தில் செல்வன் என்று ஒருவனைக் கருதும் போது, அவனுடைய மாத வருவாய், ஆண்டு வருவாய், வருவாய்க்குக் காரண மான தொழில், வாணிகம், வீடு, நிலம், நிதி நிலையத்தில் உள்ள பணத்தின் தொகை ஆகியவற்றைக் கருதுகிறோம்.

இவ்வாறே வீரம் என்ற சொல்லுக்கும் காலத்திற்கு ஏற்ப கருத்து மாறிவருவது இயற்கை. தொடக்கக் காலத்தில் மலையிலோ காட்டிலோ மனிதர் சிறு சிறு கூட்டமாக வாழ்ந்தபோது, அந்தந்தக் கூட்டத்தில் உடல் வன்மையும் அனுபவமும் மிகுந்தவன் ஒருவன் இருந்து வந்தான். கூட்டத்தில் இருந்த மற்றவர்கள் அவன் ஒருவனுக்குப் பயந்து அடங்க வாழ்ந்தனர். தன்கட்டளைக்குப் பணியா தவர்களை அவன் தாக்கிக் கொன்று ஒழித்து விடுவது வழக்கமாக இருந்தது. அவ்வாறே வேறு கூட்டத்திலிருந்து யாரேனும் வந்து எதிர்த்தாலும் அவன் தன் உடல் வன்மை

யால் அவர்களைத் தாக்கிக் கொன்று விடுவான்; அல்லது தோற்கடித்துப் பணியச் செய்வான். இவ்வாறு உடல் வல்லமையால் தனிமையும் சிறப்பும் பெற்றவனே மிகப் பழங்காலத்தில் வீரனாகக் கருதப்பட்டான். அதற்கு அடுத்த காலத்தில், உடல் வன்மை குறைந்தவனும், ஆற்றல் மிகுந்த வில் வாள் முதலிய கருவிகளை ஏந்தி அவ்வாறு வெற்றி பெறமுடிந்தது. அந்நிலையில் படைக்கலப் பயிற்சி மிகுந்தவன் வீரனாகக் கருதப்பட்டான். இன்னும் இந்தக் கருத்து ஓரளவு இருந்து வருகிறது. ஆயினும் இரண்டாயி ரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் இந்தக்கருத்தை மாற்றி எண்ணத் தொடங்கிவிட்டார். வில் ஏந்திய வீரனை விட, சொல்லில் வல்ல அறிஞனே அஞ்சத்தக்கவன் என்ற கருத்தை அவர் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை

உடல்வன்மையாலும் வில் வேல் வாள் முதலிய கருவி களாலும் ஆக்கமும் அழிவும் செய்ய முடிவது போலவே, சொல்லின் திறனாலும் ஆக்கமும் அழிவும் செய்ய முடியும். தன்னைச் சார்ந்தவர்களைக் காப்பதற்கும் சாராதவர்களை ஒறுப்பதற்கும் உடல் வலிமை பயன்பட்டது; படைக்கலம் பயன்பட்டது. அவை போலவே, அறிஞன் தன் சொல்லின் திறனால் ஒருவனுடைய வாழ்வுக்கு ஆக்கம் தேடவும் முடிந்தது; கேடு செய்யவும் முடிந்தது. ஆகவே, அறிஞன் வீரன்போல் போற்றப்பட்டான்! பிறகு, வீரனைவிடச் சிறப்புடையவனாகவும் மதிக்கப்பட்டான்.

உடல் வலிமை மிகுந்தவன், படைக்கலப் பயிற்சி நிரம்பி யவன், சொல்வன்மை மிக்க அறிஞன் ஆகிய எல்லோரும் முதுமை வந்து உடல் தளர்ந்தபோது இரங்கத் தக்க நிலைமை உறுவதைக் கண்டனர் முன்னோர். ஆகவே ஒரு காலத்தில் தன்னையே காத்துக் கொள்ளாமல் நோய்க்கும் எமனுக்கும் ஆளாகின்ற ஒருவனை வீரன் என்று போற்று

வதில் பயன் இல்லை என்று சிலர் உணர்ந்தனர். நோயும் எமனும் அணுகாதவாறு புலனடக்கத்தோடு தவம் செய்து ஆற்றல் பெற்றவர்களே பெருமைக்கு உரியவர்கள் என்ற கருத்து எழுந்தது.

கூற்றம் குதித்தலும் கை கூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு

திருவள்ளுவர் இதைக்குறிப்பிடுவதோடு நின்றுவிட வில்லை. தமக்கு வரும் நோயும் சாவும் வராமல் தடுப்பதற் காக உண்ணா நோன்பு ஏற்றுத் தவம் செய்கின்றவர். தம் வாழ்வை மட்டுமே கருதித் துன்பத்தை ஏற்கின்றனர். ஆனால் இல்லறம் நடத்துவோர் ஊரார் செய்யும் இடை யூறுகள் பலவற்றையும் பொறுத்துக் கடமைகளை செய்ய வேண்டியுள்ளது. பிறர் தூற்றும் பழிச்சொற்களையெல்லாம் பொறுத்துச்செல்ல வேண்டியுள்ளது. இவ்வாறு பிறர் பொருட்டு நடத்தும்இல்லறத்தில் பழிச் சொல்லைத் தாங்கி நிற்கும் ஆற்றல், பகைவருடைய அம்புகளை எதிர்த்துத் தாங்கி நிற்கும் போர்க்களத்து வீரத்தைவிட சிறந்த ஆற்ற லாகத் திருவள்ளுவர்க்குத் தோன்றியது; உண்ணாமல் தவம் செய்வோரின் ஆற்றலையும் விடச் சிறந்ததாகத் தோன்றியது. அதனால்.

உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச் சொல் நோற்பாரின் பின்.

என்றார்.

இவ்வாறு உடல் வலிமையை மதித்த மதிப்பிலிருந்து உள்ளத்தின் வலிமையை மதிக்கும் மதிப்பு வரையில் கருத்துக்கள் வந்தமை காணலாம். விலங்குகளுக்கும் உடல் வலிமை உண்டு. அதில் ஒரு சிறப்பும் இல்லை. அதற்கு அடுத்த படைக்கலத் திறமையிலும் ஒரு சிறு சிறப்பு உண்டு. அதற்கு அடுத்த புலனடக்கத் தவத்தில், மனவலிமையின் ஒரு பகுதியைக் காணலாம். அதனினும் சிறந்த, பழிச்சொல்

பொறுக்கும் வன்மையில், மனவலிமையின் முழுமை காணலாம். ஆகவே, உடல் வலிமையை விட்டு, உள்ளத்து வலிமையில் வீரத்தைக் காண்பதே, காலப்போக்கை உணர்ந்தவரின் கருத்து ஆகும். காந்தியடிகளைக் கர்மவீரர் என்று உலகம் போற்றியது இதனாலேயே ஆகும்.

இக் கருத்தோடு நோக்கினால்தான் திரு.வி.க. வின் வீர வாழ்வின் பெருமை புலப்படும் மெல்லிய உடலுடன் வாழ்ந்த அவர், வில்லேருழவர் அல்லர். சொல்லேருழவர். அவருடைய மேடைப் பேச்சிலும் சொல்லாற்றலைக் காண லாம் பல திற எழுத்திலும் சொல்லாற்றலைக் காணலாம் படைவன்மை மிக்க அரசாங்கம் அவருடைய சொல்லுக்கு அஞ்சி அடக்கு முறையைக் கையாள நேர்ந்தது. இதைவிடச் சிறப்பாக, அவர் புலனடக்கம் மிக்க வீரராக விளங்கினார். இளமையிலேயே மனைவியை இழந்த அவர் அதன் பிறகு துறவிபோல் தூய தனி வாழ்க்கை நடத்தி வந்தார். எளிய உணவும் எளிய உடையும் எளிய பழக்க வழக்கங்களும் அவருடைய புலனடக்கத்தைப் புலப்படுத்தி விளங்கின. இவை எல்லாம் அவருடைய தவத்தின் பகுதிகள் எனலாம். இவை யாவற்றையும்விட அவருடைய வீரம் விளங்கிய இடம், ஓயாது கடமையைச் செய்து பிறருடைய பழிச் சொற்களைப் பொறுத்த பேராற்றலே ஆகும். 'பிறர் சொல்லும் இன்னாச்சொல்' நோற்றவீரர் அவர்.

ஒரு தென்னந்தோப்பில் எல்லாமரங்களும் ஒரே அள வாக வளர்ந்திருந்தால், வீசுகின்ற காற்றால் எந்தத் தனி மரமும் மிகுதியாகத் தாக்கப்படாது. எல்லா மரங்களும் பொதுவாத் தாக்கப்படும். ஆனால் அத்தனை மரங்களுக் கும் இடையே ஒரு மரம் மட்டும் உயர்ந்து வளர்ந்து நின்றால், எந்தத் திசையிலிருந்து வீசும் காற்றும் அந்த ஒரு மரத்தை மிகுதியாகத் தாக்கும். அந்த ஒரு மரம் மட்டும் எப்போதும் காற்றால் அலைப்புண்டு வருந்துவது இயற்கை. அதுபோல், ஒரு காலத்தில் வாழும் மக்கள் என்ன கருது

கிறார்களோ அந்த கருத்துக்களை மட்டும் கொண்ட வனாய் அவர்களிடையே வாழும் ஒருவன் அமைதியாக வாழ்ந்துவிட்டுச் சாகலாம். ஆனால், பொதுமக்களைவிட முற்போக்காகக் கருத்துக்கள் வளர்ந்து விட்ட ஒருவன். அவர்களைவிட உயர்ந்த மனவளர்ச்சியுடைய ஒருவன், பல்வகைத் தாக்குதல்களுக்கும் இரையாக நேரும். அவனை நஞ்சும் சிலுவையும் சிறையும் துப்பாக்கியும் எதிர்ப்படும். அவனைப் போற்றுவோர் ஒருபுறம் நிற்க, தூற்றுவோரும் ஒருபுறம் நிற்பர் ஆகவே எதிர்ப்புகளையும் தூற்றல்களையும் பொறுமையோடு ஏற்கும் மனம் இருந்தால்தான் அவனு டைய வாழ்க்கை விளங்க முடியும். சான்றோர் பலருடைய வாழ்க்கை வரலாறுகள் இதற்குச் சான்று ஆகும். திரு.வி.க. அத்தகைய சான்றோருள் ஒருவர்.

திரு.வி.க.வின் மனம் மற்றவர்களின் மனத்தைவிட உயர்ந்து விளங்கியது. மற்றவர்கள் தத்தம் சமயங்களில் தட்டுப்பட்டு நின்ற காலத்தில் அவர் சமயப் பொறுமை யின்னை உணர்ந்து தெளிந்தவராக விளங்கினார். சைவராய்ப் பிறந்தும் சன்மார்க்கச் சான்றோராய்த் திகழ்ந்தார். அதனால் தத்தம் சமயமே சிறந்தது என்று நம்பிய பலரும் அவரை வெறுத்தனர். சமயமே கூடாது என்னும் கொள் கையினரும் அவரை வெறுத்தனர். அவர்களுக்கு இடையே திரு.வி.க. பொறுமை பூண்டு தொண்டு ஆற்றி வந்தார் உண்மை விளங்க நெடுங்காலம் ஆயிற்று. இன்று அவர் நெறியே நல்ல நெறியாக விளங்குகின்றது.

தமிழ் மொழியின் சிறப்பியல்பும், அது காலத்திற்கு ஏற்பப் பயன்படும் வகையும் தெளிந்தவர் திரு.வி.க. பேசுவது போலவே பண்படாத கொச்சைத் தமிழில் எல்லாவற்றை யும் எழுத வேண்டும் என்றனர் ஒரு சாரர். முரட்டுத் தொடர்களும் கரட்டுச் சந்தியும் கொண்டு பழைய ஏட்டுச் சுவடித் தமிழிலேயே எழுத வேண்டும் என்றனர் மற்றொரு சாரர். இரு சாரரும் திரு.வி.க. வைப்பழித்தனர். இலக்

கணத்தை விடாத பண்டிதர் அவர் என்று சிலர் பழித்தனர். இலக்கணம் அறியாத எழுத்தாளர் அவர் என்று சிலர் வெறுத்தனர்; இரு சாராரின் பழியுரைகளையும் தாங்கிப் பொறுமையோடு தொண்டு ஆற்றிவந்தார். உண்மை இத்துறையிலும் விளங்க நெடுங்காலம் ஆயிற்று. இன்று அவர் நடையைப் பலரும் போற்றுகின்றனர்.

கருத்து வேறுபாடுகளுக்கு இடையே மனிதர் ஒருவருக் கொருவர் அன்பும் உறவும் கொண்டு பழகலாம் என்ற அளவிற்கு மனம் பண்பட்டு உயர்ந்தவர் திரு.வி.க. ஆனால் சாதி வேறுபாடு போல் கட்சி வேறுபாடும் மக்களிடையே பிளவும் பிரிவும் வளர்த்த காலத்தின் கொடுமை அவரை வாளா விடவில்லை. ஒரு சாதியார் மற்றொரு சாதியா ரிடம் நெருங்கிப் பழகாதது போல், உண்ணவும் நெருங்க வும் இடம் கொடுக்காததுபோல், நிழலும் படாமல் விலகி நின்றதுபோல் ஒரு கட்சியார் மற்றக் கட்சியாரிடம் பழக வில்லை. நெருங்கவில்லை. ஆனால் திரு.வி.க.வின் உள்ளம் அவரிடமும் அன்பு பூண்டது. கொள்கை வேறு பாடு வேறு மனித உறவு வேறு என்று அவர் தெளிந்தார். அதனால் தாம் ஒரு கட்சியைச் சார்ந்து நின்றபோதும், மற்றக் கட்சித் தொடர்பை விட்டபோதும், எல்லாக் கட்சி யாரிடமும் கலந்து உறவாடினார். இந்த நிலை பலர்க்கு விளங்காத புதுமையாக இருந்தது. அதனால் பலர் அவரைப் பழித்தனர்; பழிக்காதவரும் வெறுத்தனர்; வெறுக் காதவரும் ஐயுற்றனர். இத்தனை பேருக்கும் இடையில் எவரையும் பழிக்காமல் வெறுக்காமல் ஐயுறாமல் அன் போடு தொண்டு ஆற்றி வந்தார் திரு.வி.க. உண்மை விளங் கப் பல ஆண்டுகள் ஆயின. கட்சிப் பொதுமை என்பது நல்லதொரு நெறி என்பதை இப்போது சிலர் மெல்ல மெல்ல உணர்ந்து வருகின்றனர். “நான் எந்தக் கட்சியையும் சார்ந்தவன் அல்லேன். வேறு வகையாகக் கூறினால், நான் எந்தக் கட்சியிலும் நல்லது கொள்பவன்'' என்று

உண்மையை உணர்த்தும் வினோபா பாவேயும் இன்று நம்மிடையே உள்ளர்; காலத்தின் வளர்ச்சி இது.

இவ்வாறு பலவேறு துறையிலும் உண்மை உணர்ந்து பொதுமை பூண்டு உயர்ந்து நின்ற காரணத்தால் திரு.வி.க. 'பிறர் செல்லும் இன்னாச் சொல்' பல ஏற்க வேண்டிய தாயிற்று. ஆயினும் பழித்தோரைப் பழிக்காமல் வாழும் நன்னெறி அவர்க்குத் துணையாக இருந்தது. மேடைகளிலே ஏறிச் சிலர் அவரைத் தூற்றிப் பேசினர்; செய்தித்தாள் களிலே சிலர் அவரைத் தாக்கி எழுதினர். திரு.வி.க.வின் வீர நெஞ்சம் பொறுமை பூண்டு விளங்கியது. இதைப் பற்றி அவரே தம் வாழ்க்கைக் குறிப்பில் பின்வருமாறு குறித்துள் ளது காணலாம்.

"இது குறித்து யான் மறுப்புரை வழங்குவதில்லை. உண்மை நாளடைவில் விளங்கியே தீரும் என்பதில் எனக்கு அளவில்லாத உறுதி உண்டு."

13. கருத்தின் ஒளி

நடக்கப் பழகிய கால் நடக்காமலிருந்தால் துன்புறும் தொழில் செய்து பழகிய கை, தொழில் செய்யாமலிருந்தால் துன்புறும்; எந்நேரமும் பேசிப் பழகியவர்க்குப் பேசாமல் இருத்தல் துன்பமாகும்; பாடிப் பழகியவர்க்குப் பாடாமல் இருத்தல் துன்பமாகும். இவை எல்லாவற்றையும் விடப் பொல்லாதது, சிந்தித்து எழுதும் பழக்கம். சிந்தித்து எழுதப் பழகியவர்க்கு அவ்வாறு செய்யாமலிருத்தல் பெருந்துன்ப மாகும்.

நடக்கும் கால்களை நடக்காமல் தடுப்பது எளிது வேலை செய்து பழகிய கைகளை மடக்கி வைத்திருத்தலும் எளிது; பேசா நோன்பு கொண்டு அமைதியாக இருக்க முடியும்; அவ்வாறே பாடாமல் இருத்தலும் முடியும். ஆனால், சிந்திக்கும் மூளைக்குத் தடை விதிப்பது எவ்வாறு? தன்னை மறக்கும் நிலை உடலுக்கும் நேரும் வரைக்கும் மூளை சிந்தித்தபடியே இருக்கிறது. நோயுற்ற உடம்பில் கால் ஓய்வு பெற விரும்புகிறது; கை ஓய்வு பெற விரும்புகிறது; வாய் அடங்குகிறது; குரல் ஒடுங்குகிறது; ஆனால், சிந்தனை ஓய்வதில்லை; ஒடுங்குவதில்லை நோயுற்றவர் கவலைப் பட்டுப் பட்டுப் பெருமூச்சு விடுகிறாரே, அதுவே சிந்தனை தானே? பலப்பல துறையில் அறிவை வளர்த்தவர்கள் நோயுற்றபோது சிந்தனையின் ஆற்றல் வளர்கிறதே தவிர, குறைவதில்லை; அடங்குவதில்லை. சாதாரண மக்களுக்குக் கவலை நோயை வளர்க்கிறது. அறிஞர்க்கு இந்தச் சிந்தனை யாற்றல் நோயை வளர்க்கிறது.

திரு.வி.க. கண் பார்வை இழந்து உடல் மெலிந்து கட்டிலில் படுத்துக் கிடந்த கடைசி நாட்களில், அவருடை சிந்தனை வேகத்துடன் இருந்தது. இயற்கையாக அவருக்கு நினைவாற்றல் மிகுதி. அத்தகைய நினைவாற்றல் இருந்த காரணத்தால், அவர் எண்ணிய எண்ணங்கள், சிந்தனை யில் எழுந்த குறிப்புகள் அவருடைய நினைவைவிட்டு எளிதில் நீங்கியதில்லை. நோய்வாய்ப்பட்டு, கண்பார்வை இழந்து, கட்டிலில் இருந்த நாட்களில் இது தெளிவாயிற்று.

ஒருநாள் இரவு ஏழுமணிக்கு அவரைக் காணச் சென்ற போது, இளைஞர் ஒருவர் (இப்போது சென்னை அரசினர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராக உள்ள பெருமாள்) திரு.வி.க.வின் பக்கத்தே இருந்து எழுதிக் கொண்டிருந்த தைக் கண்டேன் அவர் சொல்ல, அந்த இளைஞர் எழுதிக் கொண்டே இருந்தார் அதற்குக் குறுக்கீடாக இருக்காதபடி, இளைஞர்க்குக் குறிப்புகள் காட்டுவிட்டு, நான் பேசாமல் உட்கார்ந்தேன். திரு.வி.க. சொன்னவற்றை இளைஞர் எழுதிக்கொண்டிருந்ததைக் கவனித்து வந்தேன். திரு.வி.க. அவற்றைப் பாவால் அடி அடியாகப் பாட்டை நீள சொல்லிக்கொண்டிருந்தார். திடீரென்று திரு.வி.க.வின் முகத்தில் ஒரு மலர்ச்சி காணப்பட்டது. தம் தலைமேல் கையால் தடவிக் கொண்டே. 'அப்பா! என் சுமை இறங்கி யது பகலெல்லாம் மூளையில் கனமாக இருந்தது. சொல்லி முடித்து விட்டேன். இனிமேல் அமைதியாகப் படுத்துக் கிடப்பேன்' என்று விடுதலை உணர்ச்சியோடு பேசினார். இதற்கு முன்பும் அவர் இவ்வாறு சிந்தனையைச் சுமந்து துன்புற்றதையும், யாராவது கேட்டு எழுதிவிட்ட பிறகு, சுமை தீர்ந்து அமைதியுற்றதையும் பல நாள் கண்டிருக்கின் றேன். அன்று என்ன சிறப்பு என்றால், அவர் நினைவு வைத்திருந்து சொன்ன பாட்டின் அடிகள் பத்துப் பதினைந்து அல்ல, இருபது முப்பது அல்ல; எழுதிய இளை ஞர் அடிகளை எண்ணிப் பார்த்து, நூற்று அறுபது அடிகள் என்றார். அதைக் கேட்ட திரு.வி.க. "அதனால் தான்

அவ்வளவு சுமையாக உணர்ந்தேன். நீ வந்தது நல்லதாயிற்று இல்லையானால் இரவெல்லாம் அமைதி இல்லாமல் கட்டிலில் துன்புற்றிருப்பேன்” என்றார்.

வெறுஞ் சிந்தனை மட்டும் வேகமாக இருந்தாலும் அவ்வளவு துன்பம் இல்லை. சிந்தனையாற்றல் உள்ளவர் தம் சிந்தனையில் எழுந்தவைகளைப் பிறர்க்கு உணர்த்தா விட்டால் அமைதி பெறுவதில்லை. அதைப் பேசி வெளிப் படுத்துவோர் பேசியே ஆகவேண்டும். எழுதி வெளியிடு வோர் எழுதியே ஆகவேண்டும். இல்லையேல், தலை வெடித்துப் போவது போன்ற துன்பத்துக்கு ஆளாக வேண்டும்.

இவ்வாறு துன்புற்ற காலத்தில் திரு.வி.க. எழுதிய சிறு நூல்கள் பல; அவற்றில் சிந்தனைச் செல்வம்- அறிவின் தெளிவு- நிரம்பக் காணலாம்.

அழகும் தெளிவும் மிடுக்கும் நிரம்பிய தூய தமிழ் நடையில் உரைநடை நூல்கள் பல எழுதிய திரு.வி.க. இடை யிடையே சில பாக்களும் பாட்டு நூல்களும் இயற்றி யுள்ளார். ‘நாட்டுப் பாடல் அல்லது உரிமை வேட்கை’ ‘முருகன் அருள் வேட்டல்’ ‘சிவன் அருள் வேட்டல்’ ‘திரு மால் அருள் வேட்டல்’ ‘பொதுமை வேட்டல்’ முதலியவை அவ்வாறு அவர் இயற்றிய செய்யுள் நூல்கள். இவை எல்லாம் கண்ணொளியுடன் அவர் வாழ்ந்த காலத்தில் இயற்றிய நூல்கள். பார்வை இழந்த பிறகு உரைநடை நூல் களில் முயற்சி சிறிதும் செல்லவில்லை; செய்யுள் நூல்களில் திரும்பியது. சிந்தனையில் எழுந்த கருத்துக்களை உரை நடையில் கட்டிக் காப்பது அரிது; எதுகை மோனையும் சீர் வரையறையும் உடைய செய்யுளில் கருத்துக்களைக் கட்டிக் காப்பது எளிது. பார்வை இழந்த பிறகு, எழுது கோல் எடுத்து எழுத முடியாத நிலையில், நெடுநேரம் நினைவில் வைத்துக் காக்கவும், எழுதுவோரிடம் அவற்றைச் சொல்லி எழுதுவிக்கவும் உதவியாக இருந்தது அந்தச்

செய்யுள் நடையே ஆகவே. அகவற்பாக்களில் சிறு நூல்கள் பலவற்றை இயற்றும் தொண்டு அவர்க்கு அக்காலத்தில் அமைந்தது. அவ்வாறு அவர் எழுதிய நூல்கள், 'இருளில் ஒளி' 'இருமையும் ஒருமையும்' 'அருகன் அருகே' 'பொருளும் அருளும்' 'சித்தம் திருந்தல் அல்லது செத்துப் பிறத்தல்' 'முதுமை உளறல்' 'வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல்' என்பவை.

உரை நடையிலிருந்து செய்யுள் நடைக்கு மாறிய மாறுதலை அவரே அந்நாளில் பின்வருமாறு அகவற்பாவில் குறித்திருப்பதைக் காணலாம்.

'பிறந்தேன் வளர்ந்தேன் பறந்தேன் பன்னெறி
அறுப தாண்டு நிறைவு பெற்றபின்
பறப்பை வாழ்க்கைக் குறிப்பில் பொறித்தேன்;
அந்த நாட்களில் சிந்தனைப் பொருள்களை
விழிகள் நோக்க எழுதுவன் கையால்:
அறுபத் தாறினில் சிறுபரல் ஆணிப்
படலம் கண்ணைப் படர்ந்து மறைத்தது;
பழைய வண்ணம் விழிகள் நோக்க
எழுதும் பேற்றை இழந்தனன் பாவி!
உளத்தெழும் கருத்தை உளறு கின்றனன்;
உளறலும் நூலாய் வெளிவரு கின்றது;
ஒற்றைக் கண்ணிடர் உற்ற வேளையில்
பரம்பொருள் நூலைப் பகர்ந்தனன் உரையால்
இரண்டு கண்ணொளி வறண்டஇந் நாளினில்
இருளில் ஒளியைக் குறள்வெண் பாவால்
இருமையும் ஒருமையும், அருகன் அருகே
பொருளும் அருளும், மார்க்ஸ் காந்தி
சிந்தந் திருந்தல், செத்துப் பிறத்தல்
என்னும்நூல்களைப் பன்னினன் அகவலால்...
பழைய உரைநடை விழுமிய அகவல்
பின்னே யாப்பணி துன்ன வேய்ந்தது;

உளறும் என் அகவலும் ஒருவித உரையே;
பொழுது படுக்கையில் கழிக்க நேர்ந்தபின்
கடிதில் உரைநடை முடிதல் கண்டேன்;
பாவின் அமைப்போ ஓவியம் ஆகி
உருண்டும் புரண்டும் திரண்டும் நிற்கும்;
மொழிந்த பின்னும் அழிதல் அரிதாம்
ஆதலின் பாவால் ஓதலைக் கொண்டேன்'

(முதுமை உளறல்)

இவ்வாறு திரு.வி.க. பார்வை இழந்த பின் இயற்றிய செய்யுள் நூல்கள் எல்லாம் விழுமிய கருத்துக்களை அமைதியாக எடுத்துணர்த்தும் அரிய நூல்கள். இந்த நாட்டுச் சான்றோரிடையே பண்பட்டு வளர்ந்து வந்த தூய கருத்துக்களை- வாழ்வின் உண்மைகளை- ஆராய்ச்சி முடிவுகளை எல்லாம் திரு.வி.க. அந்நூல்களில் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். கண் பார்வை இழந்த காலத்தில் அவருடைய உள்ளத்தின் ஒளி மிகுதியாக இருந்தது என் பதை அவருடைய சொற்களாலேயே உணரலாம்.

கண்ணொளி பட்டதும் கருத்தொளி முன்னிலும்
மேலும் விளங்கலைச் சாலத் தெளிந்தேன்;
ஒருபுலன் ஒடுங்கின் மறுபுலன் விளக்கம்
அதிகம் அடைதலின் அதிசயம் இல்லை

என்ற அவருடைய அனுபவத்தை விளக்கும் சான்றுகளாக உள்ளன மேலே குறித்த செய்யுள் நூல்கள்.

அந்நூல்களின் அமைப்புகளையும் தெளிவையும் விளக்கப் பின்வரும் நான்கு அடிகள் போதும்.

போரை ஒழிக்கப் போரில் இறங்கினோம்
குண்டைத் தொலைக்கக் குண்டை எறிந்தோம்
வாளை வீழ்த்த வாளை ஏந்தினோம்
விளைந்தது என்னை! அளந்து பார்க்க!

(வளர்ச்சியும், வாழ்வும்)

14. வானம்பாடி

பெரியோர் சிலர் வாழ்ந்த வாழ்க்கையைப் போற்று கின்றோம்; பின்பற்றுவதில்லை; போற்ற முடிகின்றது, பின் பற்ற முடிவதில்லை; போற்ற விரும்புகின்றோம், பின்பற்ற விரும்புவதில்லை.

புத்தர் பெருமான் வாழ்க்கைத் தூய்மையைப் போற்று கின்றோம். ஆனால் உயிர்களின் துன்பத்தைக் கண்டு அவர் போல் உள்ளம் கசிந்து உருக முடியவில்லை. உண்மை காண்பதற்காக மனைவியும் மகவும் துறந்து காட்டிற்குச் செல்ல விரும்பவில்லை. ஆர்க்கிமெடிஸ் என்னும் மேற்கு நாட்டு அறிஞரின் ஆராய்ச்சித் திறமையைப் போற்றுகின் றோம். ஆனால் அவர்போல் நம்மை முற்றிலும் மறந்து எண்ணிக் கொண்டிருக்க முடியவில்லை; நாட்டினுள் பகைவர் புகுந்ததும் அறியாமல் எண்ணத்தில் ஆழ்ந்து கொலைக்கு ஆளாக விரும்பவில்லை. பாரி என்னும் தமிழ்நாட்டு வள்ளலின் கொடைப்பெருமையைப் போற்று கிறோம். ஆனால் அந்த வள்ளல் போல் எதையும் எவர்க்கும் வழங்கிவிட்டு மகிழ முடியவில்லை; ஏறி வந்த தேரை முல்லைக் கொடிக்கு ஈந்து விட்டுக் காட்டு வழியில் காலால் நடந்து செல்ல விரும்பவில்லை. மாணிக்கவாச கரின் கடவுட் காதலை போற்றுகின்றோம். ஆனால் அவர் போல் இரவாவதும் அறியாமல் நினைந்து நினைந்து உருக முடியவில்லை. அமைச்சு இழந்து தெய்வப்பித்துப் பிடித்து ஊரூர் திரிய விரும்பவில்லை. ஷெல்லி என்னும் ஆங்கிலக் கவிஞரின் புலமையைப் போற்றுகின்றோம் ஆனால் அவர்

போல் காடும் கடலும் கண்டு கடமை எல்லாம் மறந்து இயற்கையில் தோய முடியவில்லை. செல்வக் குடும்பத்தைத் துறந்து பேரும் புகழும் இழந்து புறக்கணிப்பைப் பெற விரும்பவில்லை.

திரு.வி.க. வாழ்வு, போற்றத் தகுந்த வாழ்வு ஆனால் நாம் பின்பற்றமுடியாத பகுதிகளும் பின்பற்ற விரும்பாத கூறுகளும் அவர் வாழ்க்கையில் உள்ளன. திரு.வி.க. அறிவும் உணர்வும் கலந்த உயர்ந்த ஒரு வாழ்க்கை. அவர் அறிவும் அதன் விளைவும் நமக்கு எட்ட வில்லை. அவர் உணர்வும் அதன் பயனும் நாம் உணர முடியவில்லை.

உலகில் பலர் அறிவே நோக்கமாகக் கொண்டு வாழ்கின் றார்கள். உணர்வை வளர்க்காமல் விடுகின்றார்கள். முடிவில் நல்ல யந்திரங்களாக மாறுகின்றார்கள். மற்ற யந்திரங்கள் இரும்பால் ஆனவை. மனித யந்திரங்கள் மூளையால் ஆனவை. இவர்களால் தேர்தல்கள் பெருகும். தந்திரங்கள் வளரும், சட்டங்கள் விரியும், போர்கள் மல்கும், தொல்லைகள் ஓங்கும் இந்த மூளை யந்திரங்கள் ஒரு குடும்பத்தில் மிகுமானால் அந்தக் குடும்பத்தால் மற்றக் குடும்பங்களுக்குத் துன்பம்; ஓர் இனத்தில் மிகுமானால் அந்த இனத்தால் மற்ற இனங்களுக்கு தொல்லை; ஒரு நாட்டில் மிகுமானால் அந்த நாட்டால் மற்ற நாடுகளுக்குக் குழப்பம்; நாளடைவில் இத்தகைய யந்திரங்களை அழிக்க இயற்கை அறம் முன் வருகின்றது. உலக வரலாறு இதற்குச் சான்று பகரவல்லது, இந்த யந்திர மனிதர்களால் நன்மை ஒரு சிலவே. தீமையோ மிகப் பல. தமக்குத் தொண்டு செய்து உதவும் நன் மக்களைத் தீண்டாதார் என ஒதுக்கி அடக்கி மாக்களாக்கி அவர்களிடம் சென்று கர்மவிதி பற்றிப் பேசல் எவரால் இயலும்? உணவுப் பஞ்சத்தால் ஏழை மக்கள் தெருவில் கிடந்து உயிர் துறக்கின்றார்கள் என்றால் சில புதிய லாரிகளை அமைத்து அந்தப் பிணங் களை அப்புறப்படுத்தித் தெருக்களைத் தூய்மைப்

படுத்துவோம் என்று உடனே வழிகூறல் யாரால் முடியும்? மருத்துவ விடுதிகளின் மேலும் பள்ளிக் கூடங்களின் மேலும் வெடிகுண்டு வீசி பலரைக் கொன்று குவித்துத் தேசபக்தி தேசசேவை என முழங்கல் எவரால் முடியும்? இந்த மூளையால்- உணர்வு ஆற்ற யந்திரங்களால்- மனச் சான்றைக் கொன்ற மனிதர்களால்தான் முடியும். உலகத் திற்கு இந்த யந்திரங்கள் வேண்டுமா?

சிலர் வாழ்க்கையில் உணர்வே பெருகியிருக்கும்; இவர்கள், அறிவைச் சிறப்பாக உலகியல் அறிவை- வளர்க் காமல் விடுகின்றார்கள். இவர்களால் பிறர்க்குத் துன்பம் எல்லாம் இவர்களைச் சாரும் இவர்களுக்கு எதிர்காலத் தைப் பற்றிக் கவலை இல்லை. இவர்களின் வாழ்க்கையில் ஒழுங்கு என்று ஒன்று இல்லை. கடமை என்று ஒன்று இல்லை. அவ்வப் போது உணர்ந்து விழையும் பொருள் களை நாடி நாடி அலைவார்கள். எவரிடத்தில் எவ்வாறு நடக்க வேண்டும் என்னும் நடைமுறை இவர்களுக்குத் தெரியாது. தங்களை ஏமாற்றுகின்ற மூளை யந்திரங்களிடம் தந்திரம் பேசத் தெரியாது. அந்த யந்திரங்களிடம் உண்மை பேசி இடுக்கண்படுவார்கள் இவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கலையில் வல்லவராக இருப்பது இயற்கை, அந்தக் கலை, காவியமோ, ஓவியமோ, இசையோ, நாட கமோ, பிறிதோ எதுவாயினும் அதன் பொருட்டு மகிழ்ந்து முயல்வார்கள். ஆனால் காசு பெறாமல் கவலைப்படுவார் கள். புலவர், ஓவியர், பாணர், கூத்தர் முதலானவர்களின் வரலாறுகளை ஆராய்ந்து பார்க்கலாம். எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் இத்தகைய மக்களைக் காணல் கூடும். நன்மக்கள் சிலர் இவர்களால் உலகம் பயன் அடையும் எனக் கருதி, இவர்களைப் போற்றி வாழ்விப்பதும் உண்டு. வரலாறுகளில் இந்த உண்மையும் காணலாம். பண்டைத் தமிழ்நாட்டில் அரசர்களும் வள்ளல்களும் இந்தத் தொண்டு ஆற்றி வாழ்ந்தார்கள்; உணர்வு பெருகிய புலவ ரையும் பாணரையும் கூத்தரையும் பிறரையும் வாழ்வித்

தார்கள்; அந்த நற்செயலால் கலைகளை வளர்த்தார்கள்; மூளையரான யந்திரங்களின் தந்திரக் கொடுமையிலிருந்து கலைஞரையும் கலைகளையும் காப்பாற்றினார்கள். உணர்வு பெருகிய இந்த மக்களைக் காற்றாடிகள் எனலாம். காற்றடிக்கும் திசையெல்லாம் சென்று சுழன்று பறத்தல் இவர்களின் இயற்கை. அரசர்களும் வள்ளல்களும் ஆகிய புரவலர்கள் இவர்களைத் தங்கள் வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கொண்டிருந்தார்கள். அந்தத் தொடர்பு கொடையால் ஆனது. கொடைதான் அந்தக் காற்றாடி களைப் பற்றி இயக்கிய நூல், கொடை நூல் அற்றவுடன் காற்றாடிகள் எங்கோ மறைந்தன. மண் முழா மறந்தது. பண் யாழ் மறந்தது. புலவர் வாழ்நாள், நாள் போல் கழிய வில்லை.

ராபர்ட் பர்ன்ஸ் என்னும் ஆங்கிலப் புலவர் மிகச் சிறந்த புலமை வாய்ந்தவர். வறுமையும் நோயும் கடன் தொல்லையும் அவரை இளமையில் கொன்றன. மரணப் படுக்கையிலிருந்து சிறைக்கு ஈர்த்துச்செல்ல முயன்ற கடன் காரன் அவருடைய வாழ்க்கையை முடித்தான். காற்றாடி எங்கோ பறந்து சென்றது. கீட்ஸ் என்னும் மற்றொரு சிறந்த புலவரும் இளமையில் மறைந்தார். அவர் பிரிவைக் குறித்து ஹேய்டன் என்பார் வருந்தினார். "அந்தோ! அருமைப் புதல்வ! உன்க்கு நுண்மையைத் தந்த இயற்கை, திண்மையும் அளித்திருக்கக் கூடாதா? அளித்திருந்தால் இளமையில் பெருமைபெறத் தொடங்கியதற்கு ஏற்ப, முதுமையில் புகழ் நிறைந்து விளங்கியிருப்பாயே' என்று வருந்தினர். நம் நாட்டுப் புலவர் பலர் இவ்வாறு மறைந்த கொடுமைகளை இங்கே நினைவூட்ட வேண்டுவதில்லை. அறிவும் உணர்வும் ஒத்து வளரா வாழ்க்கைகள் இவை எனலாம்.

திரு.வி.க. அறிவும் உணர்வும் ஒருங்கே நிறைந்தவர். சில குறிப்புகள் உண்மையை விளக்கும்:

அவருடன் உறவு கொள்ள விழைந்த நண்பர் ஒருவரை அழைத்துச் சென்று, “இவர் உங்களை பார்க்க வந்தார். இவர் பெயர்...” என்று முடிக்கு முன், “இவர் நன்றாகத் தெரியுமே! இவர் ஊர் பூக்குளம் அல்லவா? சவ்வாது மலை ஓரம். இவரே.... அப்போது கண்டு பேசியிருக்கிறேனே. நல்லது” என்றார். என்ன நினைவாற்றல்!

மாநாடுகள் நடத்தும் காலங்களிலும் தலைமை தாங்கும் காலங்களிலும் குறித்த நிகழ்ச்சி முறைக்கு ஏற்றவாறு கடமைகளைத் தவறாமல் செய்து முடிக்கும். ஆற்றல் உடையவர் திரு.வி.க. ஆங்கிலேயரும் தோற்குமாறு, குறித்த நேரத்தில் கூட்டத்திற்கு வருகின்றவர். திரு.வி.க. நூற்றுக் கணக்கான குறிப்புகளைச் சிறந்த சொற்பொழிவில் விரி வாக விளக்கி முடிவுரையில் அந்தக் குறிப்புகளை ஒன்றும் விடாமல் முறைப்படி தொகுத்து அழகு பெற அமைத்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர் திரு.வி.க.

அவருடைய அறிவு திட்பம் வாய்ந்தது. அது யாருக்குத் தெரியும்? தொழிலாளர் போராட்டங்களில் கலங்கிய மில் முதலாளிகளான ஆங்கிலேயர் சிலருக்குத் தெரியும். தாமாக எவ்வளவோ உதவிகளைச் செய்ய முன்வந்தும் உடன்பாடு பெறாமல் மறுப்பையே பெற்ற செல்வர் சிலருக் குத் தெரியும். மாய வாழ்க்கை மாய வாழ்க்கை என்று எவ்வளவோ பேசியும் அவர் மனத்தைச் சிறிதும் மாற்ற முடியாமல் தங்கள் மனமே மாறிய துறவிகள் சிலருக்குத் தெரியும். எத்தனையோ வழியில் அவரை மாற்ற முயன்றும் முடியாமல் இறுதியில் தாமே திருந்திய நாத்திகர் சில ருக்குத் தெரியும்; சாதிப்பித்தர்க்கும் தெரியும். சமயவெறி யர்க்கும் தெரியும்.

நால்வர்க்கு நன்னெறி உணர்த்திய இறைவனுக்கு இடம் தந்த கல்லால மரம் போல், பல்லோர்க்குப் பண்பு உணர்த்தப் பயன்படும் வேப்பமரம் ஒன்று சாது அச்சுக் கூடத்தில் உள்ளது. அதன் நிழலில் அவரிடம் அறிவுரை

கேட்க வந்தோர் பலர்; மிகப்பலர், அவர்களுள், சிலர் அரசியல் தலைவர்கள், சிலர் மொழிப் புலவர்கள், சிலர் சமயக் கணக்கர், சிலர் சமூகச் சீர்திருத்தக்காரர், முதலாளி கள் சிலர், தொழிலாளிகள் பலர், வாழ்க்கைப் போராட்டத் தால் வாடியவர் சிலர், காதல் உலகத்தில் கலங்கியவர் சிலர், முதியவர் சிலர், இளைஞர் பலர். அனைவர்க்கும் நண்பராய் அல்லலும் சோர்வும் போக்கி அறிவும் ஊக்க மும் ஊட்டியவர் திரு.வி.க. அவர்தம் அறிவின் ஆற்றலுக்கு அந்த வேப்பமரம் சான்று.

அறிவின் பெருமையை ஒருவாறு அறிந்தோம். உணர் வின் அருமையை ஒரு சிறிது உணர்வோம். வாழ்க்கையில் பெரிய பெரிய நிகழ்ச்சிகளை இங்குக் கருத வேண்டா. சிறு சிறு நிகழ்ச்சிகளே போதும்.

ஒரு தோட்டத்தில் செடி ஒன்று வேலியில் அமைந்து அழகு செய்தது. அதைக் கண்ட அம்மையார் ஒருவர் நேரே வந்து அதன் இலைகளைப் பறித்தார் இலைகள் முழுவதும் பறித்து விடுவார் போல் தெரிந்தது. அங்குத் திரு.வி.க. நண்பர் ஒருவருடன் இருந்தார். நண்பர் இலை பறிக்கும் அம்மையாரை நோக்கி, "யார் அம்மா அங்கே? செடி இன்றைக்கே போய்விடும் போல் இருக்கின்றது, 'போ அம்மா போ' என்றார். அம்மையார் பேசாமல் சென்று விட்டார். திரு.வி.க. முகம் வாடினார் நண்பர், முன் பேசிக் கொண்டிருந்த பழம் பேச்சைத் தொடர்ந்து பேசினார். திரு.வி.க. மனம் பேச்சில் திரும்பவில்லை. வாளா தலை யசைத்துக் கொண்டிருந்தார். நண்பருடைய பழம் பேச்சு முடிந்தது. "அந்த அம்மையாரை அப்படிச் சொல்லியிருக் கக்கூடாது. யாரோ ஓர் அம்மையார் எதற்காகவோ பறித்தார். ஏழ்மையால் கீரையாகச் சமைத்து உண்ண விரும்பியிருக் கலாம். அல்லது நோய்க்கு மருந்தாக வேண்டியிருக்கலாம். என்ன காரணமோ? அந்தத் தாய் மனம் எவ்வளவு வருந்தி யிருக்குமோ? நானாக இருந்தால், செடியை அடியோடு

பிடுங்கி கொண்டு போனாலும் சும்மா இருந்திருப்பேன்" என்று வருந்தினார். திரு.வி.க. மனம் எதையோ எண்ணி வருந்திக் கொண்டிருந்ததை நண்பர் அப்போதுதான் அறிந்தார்.

ஒரு சிற்றூரில் ஒரு சங்க ஆண்டு விழா நடந்தது. ஒரு வீட்டில் தங்கியிருந்து உணவு கொள்ள ஏற்பாடாயிருந்தது இரண்டாம் நாள் காலைச் சிற்றுண்டி நேரம். திரு.வி.க. பக்கத்தில் யானும் இருந்தேன். முதல் நாள் உணவை வெறுத்து எண்ணிக் கொண்டிருந்தேன். வேகாத இட்டளி முதலில் வந்தது. ஒருவகை உப்புமா பிறகு வந்தது. என் வயிறு எரிந்தது. திரு.வி.க. வின் உடல் நிலை அறியாமல் இவ்வாறு செய்கின்றார்களே என்று நொந்தேன், உப்பு மாவை எடுத்து வாயில் வைத்தேன். உப்புமாவின் சிறப்பை எண்ணெயின் பெருமை விளக்கியது. என்னால் ஒரு சிறிதும் உண்ண முடியவில்லை. திரு.வி.க.வையும் உண்ண வேண்டா என்று த்டுக்க முயன்றேன். "பிறகு சொல்லு கிறேன் சும்மா இரு அப்பா" என்றார். திரு.வி.க. விரும்பும் மோர் வரவில்லை. காப்பி வந்தது காப்பி வேண்டா, தண் ணீர் போதும் என்று குடித்து எழுந்தார். சங்க விழாவுக்கு வரும் வழியில், "அவர்களுக்கு நம்மேல் பகை இல்லை. உடம்பைக் கெடுத்து ஊருக்கு அனுப்ப வேண்டும் என்ற எண்ணம் இல்லை. நல்ல அன்பான மனம். அறியாமல் தவறு செய்கிறார்கள். தெரியாதவர்கள். நீ சொன்னபடி உண்ணாமல் எழுந்தால் அவர்களின் மனம் நோகும். நாம் அறிந்து செய்கிற தவறாக முடியும்" என்றார்.

ஒரு சனிக்கிழமையன்று பகல் ஒருமணிக்குச் சாது அச்சுக் கூடம் சேர்ந்தேன். திரு.வி.க.வைச் சூழ்ந்து தொழி லாளர் சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள். அரைமணி நேரம் கழித்து அவர்கள் விடைபெற்றுச் செல்ல, பிறகு யான் அவரை அணுகினேன். திரு.வி.க. உலகநாத முதலி யார் தம்பியாரை நோக்கி, "மணி ஒன்றரை" என்றார்

"இதோ வந்து விடுகிறேன்" என்று அவரிடம் சொல்லி விட்டு என்னோடு பேச ஓய்வு பெற்றவர் போல் அமர்ந் தார். "தொழிலாளர்களுக்கு நல்ல வாழ்வு வர வேண்டும். அவர்களின் துன்பம் எல்லாம் போக வேண்டும். அப்போதுதான் இந்த நாடு மொழி, கலை எல்லாம் நல்ல நிலைக்கு வரும்....' என்று என்னிடம் விரிவாகப் பேசத் தொடங்கினார். "எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்காகக் காலை 7 மணிக்கு எண்ணெய் எடுத்து வைத்தார்கள். அப்போது யாரோ வந்தார்கள் என்று அவர்களோடு பேசக் கீழே இறங்கி வந்தான். இன்னும் குளிக்கவும் இல்லை உண்ணவும் இல்லை. போனவாரமும் எண்ணெய் தேய்த் துக் கொள்ளவில்லை" என்று தமையனார் என்னிடம் சொன்னார். "நேரம் ஆயிற்று. வெறுந் தண்ணீரில் குளித்து விடுகிறேன். ஏழை மக்கள், என்ன செய்வது! இதோ வருகிறேன். என்னால் மற்றவர்களுக்கு நேரம் ஆகும்" என்றார் திரு.வி.க. பிறகு அவரை எவ்வாறோ வற்புறுத்தி அனுப்பினோம். மாடிப் படிகளில் கால் வைத்தார். வாயிற் படிகளில் திரு.வி.க.வைக் காணும் பொருட்டு யாரோ மூவர் வந்தார்கள்.

எளிமையும் பொறுமையும் இரக்கமுமே வடிவான திரு.வி.க. பெரிய வீரர் அவர் வீர உணர்வு எத்தகையது என்பதை மேடைகளில் அவரோடு பழகியவர் அறிவர் மாநாடு ஒன்று முடிந்தது. குழப்பத்தில் முடிந்தது காலிகள் குழப்பம் விளைவித்தார்கள். மாநாடு நடத்தியவர்கள் அஞ்சி முடித்துக் கொண்டார்கள். அங்கு திரு.வி.க.வுக்குப் பெரும் பொறுப்பு இல்லை. பொறுப்பு சிறியதே. காணச் சென்றிருந்தார் எனலாம். மாநாட்டுத்தலைவரும் மற்றவர் களும் குழப்பத்திற்கு அஞ்சி விரைந்து நடந்தார்கள். அந்தக் குழுவில் திரு.வி.க. இல்லை. திரும்பிப் பார்த்தோம். மேடையில் படித்த முரடர் சிலரைச் சினந்து கடிந்து பேசிக் கொண்டிருந்தார். நாங்கள் சென்று அவரை அன்புடன் வேண்டி வேண்டி அழைத்துச் செல்ல முயன்றோம்.

மறுத்து மறுத்து இறுதியில் இணங்கினார் கடற்கரைக்குச் சென்றோம். மணலில் இருந்தார். மேடையில் கொண்ட கடுஞ்சினம் குறைந்து மறைந்து விட்டது. மணலில் துப்பினார் எச்சிலிலிருந்து, இரத்தமே கண்டேன். மேலும் மேலும் இரத்தமே பெருகிற்று, திடுக்கிட்டேன். "எழுச்சி யாகப் பேசினால் மூளையில் ஒரு துடிப்பைக் காண் கிறேன். ஓர் இரத்த நாடி வழியாக இரத்தம் மூளையிலிருந்து வடிவதையும் உணர்கின்றேன், புதுமை அல்ல. பழைய அனுபவமே அஞ்ச வேண்டா. அதற்காகத்தான் எழுந்து நின்று பேசும் வழக்கத்தைக் குறைத்து வருகின்றேன். உட் கார்ந்து பேசினால் எழுச்சி குறைந்து அமைதியாகப் பேச முடிகின்றது. "துடிப்பும் இல்லாமல் போகின்றது" என்றார். அவர் உள்ளத்தில் எழும் உண்மையான உணர்வு உடலில் இரத்த நாடிகளை அலைத்து விடுகின்றன. உள் ஒன்று புறம் ஒன்றாகப் பேசக் கற்றிருந்தால் உடலுக்கு ஊறு இல்லையே!

ஒரு பெருங்கூட்டத்தின் முடிவில் முதியோரின் சூழலை விடுத்து இளைஞரின் நடுவே போய் உட்கார்ந்து அவர் களுடன் பேசிக் கொண்டிருந்தார். இளைஞரில் சிலர் அவர் பேச்சைப் பற்றித் தடுமாறாகக் குற்றம் கூறிக் கொண் டிருந்தார்கள். எல்லாவற்றிற்கும் "கருத்து வேற்றுமை, கருத்து வேற்றுமை" என்று சொல்லிக் கொண்டும், "இன்னொரு காரணம் உண்டு" என்று விளக்கிக் கொண் டும் இருந்தார். முதியவர் ஒருவர் எழுந்து வந்து, "எங்கள் கூட்டத்தை எப்போதும் ஒதுக்கி விடுகின்றீர்களே! அது ஏன்?" என்றார், "அப்படி ஒன்றும் இல்லை, இளம் பிள்ளை கள், நல்லவர்கள்" என்றார் திரு.வி.க

ஒரு பள்ளிக்கூட ஆண்டுவிழா; தலைமையாசிரியர் அந்த விழாவைத் திரு.வி.க.வே தலைவராக இருந்து நடத்த வேண்டும் என்று விரும்பினார். திரு.வி.க. எளிதில் உடன் பட மாட்டாரோ என்று மற்ற ஆசிரியர்கள் கூறினார்:

“நானோ நீங்களோ சென்று அழைத்தால் அவர் உடன்படுவது அருமைதான். நான் போக வேண்டா. மாணவர்களை அனுப்பினால், ‘இளம் பிள்ளைகள், எப்படி மறுப்பது’ என்று ஒப்புக் கொள்வார். அதுதான் வழி’ என்று தலைமையாசிரியர் கூறினார் வெற்றியும் பெற்றார்.

மற்றொரு பள்ளிக்கூடத்தில் தமிழ் மன்றச் செயலாளனான மாணவன் சென்று ஒரு நாள் குறித்துத் திரு.வி.க. விடம் சொல்லி அழைத்து விட்டான். எக்காரணத்தாலோ (தேர்வோ, என்னவோ) மாணவன் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யவில்லை குறித்த நேரத்திற்குமுன்பே அந்தப் பள்ளிக் கூடத்திற்குத் திரு.வி.க. வந்து சேர்ந்தார். கூட்டமும் இல்லை. அவர் வருகையைத் தலைமையாசிரியர் அறிந்து, மாணவன் தவறு குறித்து வருந்தி அவனை கடியத்தொடங்கினார். உடனே திரு.வி.க. குறுக்கிட்டு, மாணவனைக் கடிவதில்லை என்று தலைமையாசிரியரிடம் வாக்குறுதிபெற்று மற்றொரு கூட்டத்திற்கு வருவதாகத் தாமே ஏற்பாடும் செய்து விட்டு, இராயப்பேட்டைக்குத் திரும்பினார்.

“இந்த வழக்கம் இல்லையானால் திரு.வி.க. வாழ்வில் சிறந்து விளங்கியிருப்பார் அந்தப் பழக்கம் இல்லையானால் பதவியில் உயர்ந்து விளங்கியிருப்பார்” என்று அறிஞர்கள் அன்போடு எண்ணுகிறார்கள் அவர் யந்திரமா, காற்றாடியா? அவரைத் தடுப்பவர் யார்? அருளறம் உணர வேண்டா என்று புத்தர் பெருமானைத் தடுத்தவர் இல்லை. ஓயாது எண்ண வேண்டா என்று ஆர்க்கிமெடிஸைத் தடுத்தவர் இல்லை. வரையாது வழங்க வேண்டா என்று பாரியைத் தடுத்தவர் இல்லை. ‘கற்றாவின் மனம் போலக் கசிந்துருக’ வேண்டா என்று மாணிக்கவாசகரைத் தடுத்தவர் இல்லை. இயற்கையோடு இயைந்து பாட வேண்டா என்று ஷெல்லியைத்தடுத்தவர் இல்லை. ஏழைமக்களின் வாழ்வை எண்ண வேண்டா என்று திரு.வி.க.வைத் தடுத்தல் கூடுமோ? உரிமையின் உயர்வை உணர வேண்டா என்று

தடுத்தல் இயலுமோ? பெண்ணின் பெருமையைப் பேச வேண்டடா என்று தடுத்தல் முடியுமோ? தடுக்க முடிந்திருந் தால், இன்று அவரைச் செல்வமே சூழ்ந்திருக்கும்; அரசு போற்றியிருக்கும்; உலகம் உயர்ந்திருக்கும். ஆனால் அவர் யந்திரமா? காற்றாடியா?

திரு.வி.க. யந்திரமும் அல்லர்; காற்றாடியும் அல்லர். திரு.வி.க. ஒரு வானம்பாடி; வெள்ளாடை சூழ்ந்த மெல்லிய உடலும், புலமைப் பொலிவு பெற்ற அழகிய முகமும் அருள் பெருகும் கூரிய விழியும் பெற்ற வானம்பாடி. தமிழ்நாட்டில் பிறந்த தமிழ் வானம்பாடி; சமரச வானம் கண்டுகளிக்கும் வானம்பாடி; தமிழகம் தழைக்க உலகம் உய்யப் பொதுமழை பொழியுமாறு வாழ்த்துப் பாடும் வானம்பாடி.

15. கடவுள் நெறி

மதவெறியை விலங்கியல்பு எனக் கருதியவர் திரு.வி.க. இளமையில் அவரிடம் மதவெறி சிறிது இருந்தது. பண்பட்ட பின் அது இருந்த இடம் தெரியாமல் மறைந்தது. மதத் துறையில் வெளி வேடங்களையும் ஆடம்பரப் பூசை களையும் போற்றாதவர் அவர். சடங்குச் சமயம் அவர் விரும்பாதது; ஒழுக்கச் சமயமே அவர் விரும்பியது. கடவுள் நெறி புற ஆரவாரத்தில் இல்லை என்பதும், அகத் தூய்மை யிலேயே உள்ளது என்பதும் அவர் பெற்ற தெளிவு. பிற சமயங்களையும், பிற சமயத் தொண்டர்களையும், அச் சமயங்களைச் சார்ந்தவர்களையும் வெறுக்கும் வெறுப்பு உலகெங்கும் காணப்படுவது. வளரா மனத்தின் இயல்பு அது. வளர்ச்சியுற்ற மனத்தில் அதற்கு இடம் இல்லை. திரு.வி.க.வின் இளமையில் அவ்வெறுப்பு இருந்தது. வளர்ந்து பண்பட்ட திரு.வி.க. எல்லாச் சமயங்களையும் விரும்பி னார். எல்லாச் சமயத்தாரிடமும் அன்பு பூண்டார். அந்த அளவில் மட்டும் வளர்ந்த அவர், அத்துவித வேதாந்த கூட்டங்களுக்குச் சென்று சங்கரர் கொள்கைகளை புகழ்ந்து போற்றியது உண்டு. வைணவக் கூட்டங்களில் கலந்து கொண்டு ஆழ்வார் பாடல்களைப் போற்றிப் பாராட்டி யதும் உண்டு. கிறிஸ்துவக் கூட்டங்களிலும் மற்றக் கூட்டங் களிலும் ஏசுநாதரின் உயரிய அறிவுரைகளைப் பற்றி- சிறப் பாக மலைப்பொழிவைப் பற்றி- உளமார விளக்கங்கள் பகர்ந்தது உண்டு. பெரியபுராணத்தை பற்றிப் பேசியும் குறிப்புரைகள் எழுதியும் நாயன்மார் வரலாறு என்ற நூல் இயற்றியும் தொண்டு புரிந்த அவர்க்குச் சமண சமயச்

சான்றோர்களின் அறிவுரைகளில் ஈடுபாடு உண்டு. புத்தர் பெருமானின் அற நெறியிலும் ஆர்வம் உண்டு. நபிகள் நாயகத்தின் பொன்மொழிகளிலும் விருப்பம் உண்டு. அந்தந்தச் சமயத்தார் கூட்டிய கூட்டங்களில் போய்ப் பேச்சுத் தொண்டு ஆற்றியிருக்கிறார். அதனால், சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் சிலர் அவரை வெறுத்ததும் உண்டு. அவர் நெறி சமரச சன்மார்க்கமே. பொதுவான கடவுளுணர்ச்சியும் அறவொழுக்கமுமே அவர் வாழ்வில் மேலோங்கி நின்றன. ஒரு பரம்பொருளே சிவனாகவும் திருமாலாகவும் பிறதெய்வங்களாகவும் பெயர் பெற்று விளங்குகிறது என்பது அவர் தெளிந்த உண்மை. உலகில் தோன்றிய சமயச் சான்றோர்கள் பலரும் ஒரு தெய்வக் குடும்பத்தைச் சார்ந்தவர்களே, ஒரு பரம்பொருளின் ஒளிக் கதிர்களே என்பது அவர் நம்பிக்கை.

உலகினில் துன்பம் நீங்க
  உண்டனை நஞ்சே அன்பே
சிலுவையில் நின்று செந்நீர்
  சிந்தினை அரசை நீத்து
விலகினை மாடு மேய்க்க
  விரும்பினை அடியும் தாங்கி
இலகினை சமர சத்தை
  எண்ணினால் துயரம் போமே.

(பொதுமை வேட்டல், சமரசம்)

இறையவனே சன்மார்க்கம்
    உன்னருளால் வளர்ந்தோர்
  எழில்மௌனி சனத்குமரன்
    இளங்கண்ணன் அருகன்
அறமுரைத்த புத்தனுயர்
    ஆப்ரிகாம் மோசே
  அன்பேசு வள்ளுவனார்
    நபிநால்வர் ஆழ்வார்

மறைமூலர் தாயுமானார்
மாதுபிள வட்ஸ்கி
மதிராம கிருஷ்ணருடன்
இராமலிங்க முதலோர்
நிறைநின்ற திருக்கூட்டம்
நீங்காத ஒளியே
நின்மலனே சனமார்க்க
நிதிவளரச் செய்யே.

(சன்மார்க்கம்)

புல்லாங் குழலில் இசைமுழக்கிப்
போதி நிழலில் தவங்கிடந்து
கல்லால் அடியில் பேசாது
கல்லாம் மறையில் மறைபேசி
எல்ல ங்கொள் சமராகும்சன்
மார்க்கம் இசைத்தே உரிமையளி
செல்வர் சிறியர் பிழைபொறுக்கும்
தேவா வாழி அருள்வாழி!

(சமரச சன்மார்க்கம்)

ஆலடியில் அறிவளித்தாய்
அசோகடியில் அருளளித்தாய்
கோலரசில் அறமளித்தாய்
கொலைமரத்தில் அன்பளித்தாய்
நீலடியில் இசையளித்தாய்
நிறைகடம்பில் அழகளித்தாய்
சீலகுரு உனை அடைந்தேன்
சிறியேனுக் களிப்பதென்னே.

(குருமார் ஒருமை)

இத்தகைய ஒருமைப்பாடு உண்மையே ஆயினும், இந்த உண்மயை இரு நூற்றாண்டுக்கு முன் யாரேனும் இவ்வளவு வெளிப்படையாகச் சொல்லியிருந்தால், அவர்கள் உயிரோடு தப்பியிருக்க முடியாது. நீயே புத்தர், நீயே கிறிஸ்து, நீயே தட்சிணா மூர்த்தி, நீயே நபிநாயகம், நீயே ஆழ்வார்,

நீயே நாயன்மார், நீயே இராமகிருஷ்ண பரமஹம்ஸர், நீயே பிளாவட்ஸ்கி என்று சொல்வதைக் கேட்க இன்றும் ஆள் குறைவே; ஆயினும் இராமலிங்க வள்ளலார் இராமகிருஷ்ண பரமஹம்ஸர் விவேகானந்தர் முதலியோர் தோன்றித் தொண்டாற்றிய பின், இந்த உண்மையைச் சொன்னால் உயிர்க்கு ஊறு இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்போதும் இதைக் கேட்க முன் வருவோர் தொகை குறைவு; கேட்டு உணர்வோர் தொகை அதை விடக் குறைவே ஆகும் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், உண்மைக்குக் குறை ஏற்படாது. உண்மை என்றைக்கேனும் ஒரு நாள் பெரும்பாலோர் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக விளங்கியே தீரும். உலகம் உருண்டை என்றும் சூரியனை பூமியே சுற்றுகிறது என்றும் முதலில் உண்மையைச் சொன்னவர் துன்பங்களுக்கு ஆளானார். அவர் சொன்ன சொல்லைக் கேட்பவரும் உணர்வோரும் அன்று விரல்விட்டு எண்ணக் கூடியவராக இருந்தனர். ஆனால் இன்று அது உலகெங்கும் பள்ளிக்கூடப் பிள்ளை கள் யாவரும் கற்று வரும் எளிய பாடமாக ஆகிவிட்டது. அதுபோலவே, இன்னும் சில நூற்றாண்டுகள் கழித்தே திரு.வி.க. போற்றிய இந்தக் கடவுள் நெறிப் பொதுமை பலர்க்கு விளங்கக்கூடும்.

இன்று பலரும் இந்த உண்மையைக் கேளாமைக்கும் உணராமைக்கும் காரணம் என்ன? தாயின் மடியிலிருந்தே குழந்தை வளர வேண்டும். ஆனால் தாயின் மடியை விட்டு தெருவில் விளையாடவும் முன்வந்தால்தான் அடுத்த வளர்ச்சிக்கு வாய்ப்பு ஆகும். அப்போதும் தாயின் மடியை விட்டு இறங்க மறுக்கும் குழந்தை தேக்கமுறும்; இயல்பான வளர்ச்சி பெறாது, அது போலவே, சமயச் சடங்குகளும் சாத்திரக் கட்டுப்பாடுகளும் ஒரு நிலையில் தேவையாக லாம். ஆனால் அவற்றிற்குள்ளேயே கட்டுண்டு கிடந்தால் அடுத்த வளர்ச்சி இல்லாமல் போகும். பெரும்பாலோர் அவற்றிற்குக் கட்டுண்டு கிடக்கவே விரும்புகின்றனர். அவற்

றிலேயே மன அமைதி காண்கின்றனர். திரு.வி.க. வேகமான மன வளர்ச்சி பெற்றவர். அதனால் பிற சமயங்களோடு உறவு கொண்டு உண்மை இருக்கக்கூடும் என்று அறியும் திறந்த மனப்பான்மையோடு ஆராய்ந்தார். அதனால் அறிந்தார். வளர்ந்தார் பிற சமயத்தாரிடம் அன்பு கொள்ள மாட்டேன். பிற சமய நூல்களுடன் பழக மாட்டேன் என்று **கண்டுமுட்டும் கேட்டுமுட்டுமாக** வாழ்ந்திருந்தால்- கண்ணும் செவியும் மனமும் தீண்டாமை கொண்டு வாழ்ந்திருந்தால்- இந்தக் கடவுள்நெறிப் பொதுமை அவர்க்கு எட்டியிருக்காது. சடங்குகளைவிட அன்பு பெரியது என்றும் மனிதர் படைத்த சாத்திரங்களைவிட இறைவன் படைத்த இயற்கை எனும் சாத்திரம் பெரிது என்றும் உணர்ந்து வளர்ந்த வளர்ச்சி அவர்க்கு உதவி ஆயிற்று.

மதவெறியால் வாதப்போர்
மலியிடங்கள் சென்றுழன்றேன்
இதம் அறியேன் நிந்தனையும்
இகல்பகையும் எழுந்தனவால்
மதமெல்லாம் நீஒருவன்
மருவுகின்ற நிலை உணர்ந்து
பதமடைந்தேன் பரம்பரனே
பழையவினை கழித்தருளே

(பொதுமை வேட்டல்–முறையீடு)

சாதியும் மதமும் சம்பிர தாயச்
சாத்திரச் சூத்திரச் சழக்கும்
சூதுடை வழக்க ஒழுக்கமும் சூழ்ந்து
தொல்லருள் நெறியினை மறைத்துச்
சோதியே உலகை அரிந்துணல் கண்டும்
சோதனை என்றுநீ இருந்தால்
ஆதியே எளியேம் செய்வதொன் றறியேம்
அருள்நெறி ஓம்புக அரசே.

மக்கள் இந்த அடிப்படை உண்மையை உணர முடியாமல் இருப்பதற்கு மற்றொரு காரணம், சமயங்களைக் காப்பதற்காக ஆங்காங்கே ஏற்பட்டுள்ள அமைப்புகள் ஆகும். சமயச் சான்றோர் பலர் அந்த அமைப்புகளை ஏற்படுத்தவில்லை. பின் வந்தோர் ஏற்படுத்திவிட்டனர். புத்தர் முதலானோர் சிலர் அமைப்புகளை ஏற்படுத்தியது உண்டு; ஆனால் பின் வந்தோரால் அவர்களின் நோக்கம் திரிபுற்றது. கடவுள் நெறி அல்லது அறநெறியே முதன்மையான நோக்கம், அமைப்பு அதற்கு கருவிகளாக ஏற்பட்டதே. அமைப்பை வளர்த்தவர்கள், அதையே முதன்மையானதாக ஆக்கிவிட்டனர். உடம்பின் நன்மைக்காகவே நாவின் சுவையுணர்வு அமைந்தது. சுவையுணர்வை அளவு கடந்து வளர்த்த பின் அதுவே உடல் நலத்திற்குத் தீங்கு ஆகியது. அதுபோல் கடவுள் நெறி அல்லது அறநெறிக்காக ஏற்படுத்தி வளர்க்கப்பட்ட அமைப்பு, நாளடைவில் அதற்கே இடையூறு ஆகிறது. அதனால் ஏசுநாதர் முதலானோர் பழைய அமைப்பைக் கடந்து சீர்திருத்தம் செய்து வழி காணவேண்டியதாயிற்று. சமயநிலையங்கள் உட் குழுக்கள். மடங்கள், தலைமைப் பீடங்கள், குழுக்களுக்கு வேண்டிய சின்னங்கள் ஆகியவற்றைக் கடந்து வளரவல்ல தெளிவும் அஞ்சாமையும் காந்தியடிகள் முதலானோர்க்கு அமைகின்றன. அதனால்தான் அவர்கள் பொதுமை உணர வல்லவர்கள் ஆகிறார்கள். தீண்டாமை முதலாய பழைய வழக்கங்களை மாசுகள் என உணர்ந்து களையவும் முற்படுகிறார்கள். அவ்வாறு அமைப்புகளை கடந்த கடவுள் நெறியை நோக்கும் தெளிவும் அஞ்சாமையும் இல்லாதவர்கள் பழைய போக்கிலேயே கண்மூடி நடக்கவே முடியும். அந்த அமைப்புகளின் தலைவர்கள் அவற்றிற்கு உரிய நிலபுலன்கள், மற்றச் செல்வங்கள், புகழ், பெருமைகள், செல்வாக்குகள், அதிகாரங்கள், மக்களின் எண்ணிக்கைப் பெருக்கம் முதலியவற்றைக் காப்பதிலும் வளர்ப்பதிலுமே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். கடவுள் நெறியைப் போற்றுவதைவிட, அவற்றைக் காப்பதிலேயே அவர்களின் முயற்சி

யும் உழைப்பும் உருவாகும். பொதுமைத் தெளிவு மக்களுக்கு ஏற்பட்டு விட்டால், அந்தச் செல்வம் செல்வாக்கு முதலியவை வளரவிடாதபடி ஆகிவிடும், பிடிப்புக் குறைந்து விடும்; மக்களின் எண்ணிக்கை என்னும் படைபலம் குறைந்து போகும். ஆகவே, அமைப்புகளின் தலைவர்கள் மக்களுக்குப் பொதுமையை அறிவுறுத்தாமல், அமைப்புகளையும் அவற்றிற்கு உரிய சடங்குகள் சின்னங்கள் முதலியவற்றையுமே வற்புறுத்துவார்கள். இறைவனுக்கு இன்ன இன்ன உதவிகள் செய்தால், அவர் கைம்மாறாக உங்களுக்கு வேண்டிய உதவிகள் செய்வார் என்று மூட நம்பிக்கைகளையும் திரித்துக் கூறுவார். அமைப்புகளின் நலம் கருதி என்ன என்னவே கூறி மயக்குவர். பக்தர்களைப் போர் வீரராகவும் ஆக்குவர், நல்ல காலமாக, திரு.வி.க. எந்த அமைப்பிலும் கட்டுண்ணாமல் உரிமையோடு வளர்ந்தார். ஆகையால் அமைப்புகளைக் கடந்து நோக்கும் தெளிவும் அஞ்சாமையும் அவர்க்கு இயல்பாக அமைந்துவிட்டன. இறைவன் படைத்த இயற்கை கொண்டே கடவுள் ஆட்சியை உணர்ந்து உருகும் நெஞ்சம் அவர்க்கு இயல்பாக அமைந்தது.

இயற்கையின் நெறியே இறைநின் நெறிஎன்
றிசைத்தனர் குரவர்கள் எல்லாம்
பயிற்சியில் அதுவே பண்பென விளங்கும்
பான்மையைத் தெரிந்தனன் அரசே
(பொதுமை வேட்டல், இயற்கை நெறி)

இயற்கையெலாம் உன்நினைவே
ஊட்டஉள தென்றுணரும்
பயிற்சி பெறும் வாய்ப்பெலாம்
பரம்பொருளே அருளியுள்ளாய்
முயற்சியிலார் கண்மூடி
மூர்க்கமெலாம் வளர்த்து விட்டார்
செயற்கை வழிச் சென்றுழன்றால்
சிந்தனையின் ஊற்றெழுமோ.

(தியானம்)

தீட்சையைப் பற்றிய தம் அனுபவத்தையும் கருத்தையும் அவர் பின் வருமாறு எழுதியுள்ளார். அதனால் அவர் சமயத் துறையில் புறச் சின்னம் முதலியன பற்றி ஆர்வம் செலுத்தாமை உணரலாம்.

"யான் சிவ தீட்சை பெறாமலே இருந்தேன். அதிலே எனக்கு உறுதி உண்டாகவில்லை. தீட்சை செய்து கொள்ளு மாறு என்னைப் பெரிதும் வலியுறுத்தியவர் வண்டிப் பாளையம் இராசப்ப முதலியார். அவரது நல்ல குணம் அவர் வழி என்னை நடக்க உந்தும்; நடிக்கவும் உந்தும். அவர் சிதம்பரம் முத்துகற்பக தேசிகரைக் கொண்டு எனக்குத் தீட்சைகள் செய்வித்தனர். சமயம், விசேடம் என்ற இரண்டு தீட்சைகள் எனக்குச் செய்யப்பட்டன. வேளைக்கு வேளை முறைப்படி யான் அனுஷ்டானம் நிகழ்த்தியே வந்தேன். என் மனம் அனுஷ்டானத்தில் ஆழ்ந்ததே இல்லை. அஃது எனக்கு இயந்திர வேலை போல் தோன்றிற்று. ஆனால் யான் இயந்திரத்தை இயக்காமல் இல்லை; இயக்கி வந்தேன். முதல்முறையாக தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபைக்குச் சென்றிருந்தபோது அங்கே ஒருவர் அனுஷ்டானம் செய்வதை இன்னொருவர் குறை கூறுவதையும் இவர் செய்வதை அவர் இழித்துக் கூறுவதை யும் கண்டேன்; கேட்டேன். புறத்துக்கு மக்கள் எவ்வளவு அடிமையாயிருக்கிறார்கள். என்று மனம் நினைந்தது. மேலே நிர்வாண தீட்சை செய்தல் கூடாது என்றும் உறுதி கொண்டேன். தீட்சை என்னிடம் வேர் கொள்ளாமல் கிடந்தது. வேர் கொள்ளாத ஒன்று என்றாதல் வெதும்பி விழும் அன்றோ?"

அவர் பார்ப்பதற்குப் பழமை விரும்புவோர் (வைதிகர்) போல் தோற்றம் அளித்தார். அந்தத் தோற்றத்திற்குக் கார ணம் அவருடைய தலைவியின் மொட்டைக்கு இடையே அசைந்த மிகச் சிறு குடுமியே ஆகும். தலையில் மயிர் வளர்ந்திருந்தாலே மூளைக்கும் மண்டையோட்டுக்கும் இயற்கை அமைத்த காப்பு என்றும், அதை நீக்கி மொட்

டையடித்தல் தீங்கு என்றும் அவர் கூறுவது வழக்கம். இடைத்தரமாகக் கிராப் விடுதல் நல்லதே என்று இளைஞர்களுக்கு எடுத்துரைப்பார். பழகிவிட்ட குடும்பப் பழக்கத்தாலேயே தாம் குடுமிவிட்டு மொட்டையடித்த தாகவும், அது நல்லது என்றும் விளக்குவார்.

இயற்கையை வழிபடுவது மட்டும் அல்லாமல் இயற்கை யோடு இயைந்த வாழ்க்கை வாழ்தல் வேண்டும் என்று அவர் அடிக்கடி வலியுறுத்துவார். இறைவனுடைய படைப் பில் ஆணும் பெண்ணுமாய் வாழும் இயற்கையமைப்பின் நுட்பத்தை உணர்ந்தே அவர் துறவை வெறுத்தார். இயற்கையோடு இயைந்த கலைகளையே அவர் உள்ளம் விரும்பியது. இயற்கையைவிட்டு நெடுந்தொலைவு பிரிந்து வளர்ந்துள்ள யந்திர நாகரிகம் அவர் மனம் விரும்பாதது. யந்திரங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்துள்ள கலைகளாகிய திரைப்படம், வானொலி முதலியனவும் அவர் விரும்பாதவைகளே வீண் நாவல்கள் வேடிக்கைக் கதைகள் முதலியவற்றையும் அவர் விரும்பியதில்லை புகை பிடித்தல் முதலிய பழக்கங்களையும் அறவே வெறுத்தார். எளிமையாக ரயிலில் மூன்றாம் வகுப்பில் பணம் செய்ய அவர் மனம் விரும்பியது. ஆனால் மக்கள் பிடிக்கும் புகைத் தொல்லையிலிருந்து தப்புவதற்காகவும் தூய்மைகாக்கப் படாத மூன்றாம் வகுப்புச் சிறுநீர் அறைகளின் தீமையி லிருந்து தம் மெலிந்த உடலைக் காத்துக் கொள்வதற்காகவும் இரண்டாம் வகுப்பில் பயணம் செய்தார். இந்த நூற்றாண் டில் பெரிய நகரத்தில் வாழ்ந்த ஒருவர் திரைப்படம் காணாமலும் வானொலியில் பேசாமலும் வாழ முடிந்தது. என்றால் நம்ப முடியாத வியப்பாகும்.

'சென்னை நகரத்தில் வாழும்' யான்- பத்திரிகாசிரியனா யிருந்த யான்- சினிமாவுக்குச் சென்றதே இல்லை என்றால் உலகம் வியப்பே உறும். உயிரனைய நண்பர் சிலர் என்னை வலியுறுத்தியும் யான் அக்காட்சிக்குச் செல்ல ஒருப்பட்ட தில்லை. எனக்குக் கிடைக்கும் இலவசச் சீட்டுகள் மற்ற

வர்க்கே பயன்படும். நாடகக்கலையிலே எனக்கு வெறுப்புத் தோன்ற வில்லை. அக்கலை நன்முறையில் வளரல் வேண்டும் என்பதே எனது விருப்பம். நாடகம் என்ற பெயரால் கலை கொலையாதல் நன்றோ? நாகரிகம் நாசமாதல் நன்றோ? வாழ்க்கை நாடகத்திலும், இயற்கை நாடகத்திலும், காவிய ஓவிய நாடகங்களிலும் யான் கருத்திருத்தி வருபவனானேன்."

இவ்வாறு திரைப்படத்தில் அவர் வெறுப்புறக் காரணம், அது இயற்கையான நல்வாழ்வை உணர்த்தாமையும் இயற்கையைவிட்டு யந்திர மயமாக அமைந்தமையும் ஆகும். பழமை விரும்பும் மனப்பான்மை காரணம் அன்று; செயற்கை வாழ்க்கை வெறுத்த மனப் போக்கே காரணம் ஆகும்.

மணியருவி முழரொலியாய்
வண்டிசைக்கும் பாட்டாய்
மயில்நடமாய் குயில் குரலாய்
மலர்மணமாய் வந்தே
அணைமந்த மாருதமாய்
ஐம்புலனில் ஒன்றி
அக அமுதாய்ச் சுவைத்தினிக்கும்
ஆனந்த மயமே
பிணிபுனலில் பொய்யிசையில்
பேய்நடவெங் குரலில்
பெயர்மணத்தில் பொறிகாற்றில்
பெற்றியிழந் தெரிந்து
திணியுலகம் நரகாச்சே
தெளிவுபெற இறையே
தெய்வநிலை இயற்கைவழித்
திருவருள் செய் இன்றே.

(பொதுமை வேட்டல், இயற்கைத் தெய்வம்)

(பிணிபுனல்-குழாய்த் தண்ணீர் பொய்யிசை- வானொலிப் பாடல், பேய்நட வெங்குரல்-சினிமா பெயர் மணம்-செண்டு பொறிக்காற்று- மின்விசிறிக் காற்று)

“வேடிக்கைத்தாள் படிப்பு விளம்பரமோ மனிதம்? மண்ணோக்கிக் களியாட்டில் மயங்குவதோ மனிதம்?” இதற்கோ மனிதப் பிறவி என்று வருந்திப் பாடியுள்ளார்.

இவ்வாறு செயற்கை வாழ்வையும் யந்திர நாகரிகத்தையும் அதனால் விளையும் பூசல்களையும் போர்களையும் மிக வெறுத்த அவர்மனம் இயற்கையின் எழிலையும் இனிமையையும் மிக விரும்பி இயற்கைப் பகுதிகள் எல்லாம் இறைவன் கோயில் எனக் கொண்டாடுதல் காணலாம்.

கரும்பணுகப் புனல்கொழிக்கும்
காலருவி கோயில்
கரைமணலும் கலங்காத
பூங்காற்றும் கோயில்
அரும்புமலர் காய்கனிகள்
அளிஇனிமை கோயில்
ஆடுமயில் கூவுகுயில்
அறைசுரும்பு கோயில்
விரும்புநடை கலைமானும்
மெல்லானும் கோயில்
வீரமுகம் காதல்வழி
ஈரமனம் கோயில்
அரும்பிறவிப் பயன் அடைந்த
அருட்குரவன் கோயில்
அகிலமெலாம் நின்கோயில்
அருட்சோதி அரசே.

(பொதுமை வேட்டல், திருக்கோயில்)

இன்று தோன்றிய திரைப்படம் முதலியவற்றை வெறுத்தது போலவே, இந்த நாட்டில் தொன்று தொட்டு இருந்துவரும் யோகப் பயிற்சி முறைகளையும் திரு.வி.க.

வெறுத்தார். மூச்சை நிறுத்தல், பார்வையை நிறுத்தல் முதலிய யோகப் பயிற்சி முறைகளும் இயற்கைக்கு மாறா னவை என்பது அவர் கருத்து.

முத்தியென் றெண்ணி முகமெல்லாம் சிவக்க
மூச்சினைஅடக்கியே வந்தோர்
சத்திழந்து ஈரல் சவலையுற்று இறந்த
சரித்திரம் பலபல என்னே
பத்தியை வளர்க்கும் பாவையை மணந்து
பரநலம் பேணியே வாழும்
சத்தியமார்க்கம் தழைத்தினி தோங்கத்
தற்பர தயைபுரிந் தருளே.
(பொதுமை வேட்டல், இயற்கை வாழ்வு)

இளமையில் அவர்க்கும் அந்த யோக முறைகளில் ஆர்வம் இருந்ததாம் அக்னிபெசண்ட் அம்மையாரின் அறிவுரையால் அந்தப் பித்து நீங்கியதாம்.

மூக்கினைப் பிடிக்கும் கூட்டம்
மூச்சினை ஈர்க்கும் கூட்டம்
தேக்கிய இடங்கள் எல்லாம்
சென்றுசென் றலுத்தேன் எந்தாய்
யாக்கையை ஓம்ப வல்ல
அமிழ்தம்நின் அருளே என்றே
வாக்கியம் தெளிந்து வந்தேன்
வள்ளலே கருணை செய்யே. (மனிதப்பிறவி

மூக்குநுனி நோக்கலொடு
மூச்சை ஈர்த்தல்
மூல அனல் எழுப்பலொடு
பாம்பைத் தூண்டும்
தேக்கமுத மலயோகச்
சிந்தைவிட்டுத்
தியானமெனும் அமலத்தின்
தெளிவிற் சேர்ந்தேன். (விண்ணப்பம்)

இயற்கையை- இயற்கையோடு இயைந்து வாழும் வாழ்க்கை நெறியை- இவ்வளவு ஆர்வத்தோடு விழைந்த அவர்க்கு ஆரவாரம் மிகுந்த பெரிய நகரத்தின் செயற்கை வாழ்வே கிடைத்தது. அவ்வப்போது வெளியூர்க்குச் சென்று பேச்சுத் தொண்டு புரிய வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம். ஒருவகை விடுதலையுணர்வோடு சென்னை நகரத்தை விட்டுக் கிளப்பிடுவார். பேச்சுத் தொண்டு இல்லாமல் ஓய்வாக வந்திருக்குமாறு யாரேனும் வெளியூர்க்கு அழைத் தாலும் பெரிதும் மகிழ்வார். ஆயினும் பிறர்க்குத் துன்பம் ஆகுமே என்று அஞ்சி அவர்களின் வேண்டுகோளை ஏற்கத் தயங்குவார், சென்னைக்கு அண்மையில் உள்ள திருப் போரூர் முதலான இடங்களுக்குக் கழி வழியே படகேறிச் சென்று தங்கி மீள்வார். வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்தபோது, அங்கங்கே உள்ள மலையடிவாரங்களுக்குச் சென்று இயற்கைச் சூழலில் அமைதியாக இருந்து மகிழ்வார். ஆறுகளைக் கண்டால், மணலில் நெடுநேரம் நடப்பார். ஊற்று நீரில் குளித்துக் களிப்பார். வயல்வெளியில் மணிக்கணக்காக அமர்ந்து இயற்கை அழகைப் பருகுவார்.

இயற்கையே அவர்க்கு ஒரு பல்கலைக் கழகமாகத் தோன்றியது. அக்கழகத்தில் பயின்ற மாணவன் யான் என்று தம்மை அறிமுகப்படுத்திக்கொண்டு மகிழ்ந்தவர் அவர். அவ்வகையில் அவர் எழுதிய எழுத்துக்கள், பாடிய பாட்டுக்கள் பலப்பல அனைத்தும் கற்பார் உள்ளத்திற்குத் தேனாய் உவகை செய்யும்; சில வருமாறு:-

"ஞாயிற்றை நோக்குகிறேன்; ஐயம் எழுகின்றன. அவைகளை எப்படிக்களைந்து கொள்வது? ஞாயிற்றையே நோக்கி, 'ஞாயிறே! நீ எழுவதும் மறைவதும் உண்மையா! காலையிலும் மாலையிலும் சிவந்த கோலம் தாங்குவ தென்ன? உன்னிடத்தில் ஏழு நிறம் அமைவானேன்? எட்டு ஏன் அமைய வில்லை? ஒளி உன்னுடையதா? நீ எற்றுக்கு ஒளி கால்கிறாய்? ஒளி உன்னுடையதா? பிறருடையதா?

என்று கேட்பேன். எளிதில் விடைகள் கிடப்பதில்லை. ஞாயிற்றை உன்னி உன்னி அதில் மூழ்கி ஒன்றுவேன். விடைகள் கிடைக்கும்.

வேனிற்காலம்; தென்றற் காற்று; கண் விழித்தேன். அண்ணாந்து பார்க்கிறேன்; நீலவானம்; முத்துகள் போன்ற உடுக்கள்; வெண் திங்கள் உழவு ஆனந்தம். வானேமே! நீல நிறத்தை எப்படிப் பெற்றாய்? அஃது உண்மையா? உருவெளியா? உன்னிடத்திலா உடுக்கள் உறைகின்றன! உடுக்களே? உங்கள் வரலாறென்ன? உங்களால் இம் மண்ணுலகுக்கு ஏதேனும் நலன் விளைகிறதா? எற்றுக்கு ஒளிர்கிறீர்கள்? உங்கள் ஒளி இயற்கையா? செயற்கையா? உங்கட்குப் பகல் பகமையா? வெண் திங்களே! நீ ஏன் ஓடிக்கொண்டே இருக்கிறாய்? ஏன் ஓரிடத்தில் நிற்ப தில்லை? உன் நிலவு இன்பம் ஊட்டுவதென்னை? அதை நீ எப்படி அடைந்தாய்? பகலில் அந் நிலவை ஏன் பொழி வதில்லை? பகலில் நீ இருக்கிறாயா? இல்லையா? எங்கே மறைந்து கொள்கிறாய்? இவ்வினாக்கள் எழுகின்றன. அவைகளை எண்ணி எண்ணிப் பார்ப்பேன். எப்படியோ பதில்கள் வரும்.

கடற்கரை நண்ணுவேன். கடற்காவியத்தைக் காண்பேன். கடலே? நீ ஏன் பரந்து விரித்து கிடக்கிறாய்? ஏன் ஆழியாய் இருக்கின்றாய்? உன்னை அடைந்தால் ஏன் விழுங்குகின் றாய்? உன் தரங்கம் ஏன் பாடுகிறது? நீ ஏன் உப்பை வைத்திருக்கிறாய்? கோடிக் கணக்கான உயிர்களை ஏன் அடக்கி நிற்கிறாய்? அவைகள் மூச்சு விடுகின்றனவா? அவைகள் ஒளி, காற்று பெறுகின்றனவா? நீ பூமியிலும் பெரிதாயிருப்ப தென்னை? அதை விழுங்கவா? நீ நிலமாய் இருந்தது உண்மையா? உண்மையானால் ஏன் நீரானாய்? மீண்டும் நிலமாவையோ? உன்னருகே உலாவினால் உட லில் உரம் ஏறுவதென்னை? உன்னிடத்தில் என்ன மருந் திருக்கிறது? இவைகளைக் கடல் கேட்டு முறை முறையே இறை இறுக்கும்.

வயல் வழியே செல்வேன். வெள்ளைக் கோவணம் அணிந்து வெள்ளைக் குட்டையைத் தலையில் சுற்றி உழவர் கள் பணிசெய்வது கருத்தை ஈர்க்கும் அவர்களது விஞ் ஞானம் எனக்கு உதயமாகும். பல நிறப் பூக்கள் நகை புரிந்து தங்கள் வரலாறுகளைச் சொல்லும். பலநிறக் கொடி கள் தங்கள் நிலைகளைத் தெரிவிக்கும்.

சோலையில் புகுவேன், மரங்கள் கூப்பிடும்; விருந்து வைக்கும் ஆலமர நிழலில் அமர்வேன். ஆல் 'என் விழுதைப் பார். அந்த அரசுக்கு இஃது உண்டா' என்னும். அரசு கண்ணிற்படும். யான் விழுதின்றி வானுற ஓங்கி நிற்கின் றேன். என்னை மக்கள் சுற்றிச் செல்கிறார்கள். காண் என்னும்.வேம்பு என் நிழல் நலஞ்செய்யும் என்னும். பூவின் குணங்களைச் சொல்கிறேன் வா என்னும்– அத்தி, நாவல், விளா, மா, வில்வம் முதலிய மரங்கள் விளயாமலிருக் குமோ? சிந்தனையில் அவைகளின் நுட்பங்கள் விளங்கும்.

மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது இவர் வேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன். சுற்று முற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும். அமைதி பொருந்திய மனத்துடன் மலையை நோக்குவேன். 'என் அருமை மலையே! உன்னை அடைந்ததும் மனம் அமைதி யுறுவானேன்? உன் வரலாறென்னை? நீ எப்படி அமைந் தாய்? மக்கள் முதல் முதல் உன்னிடத்திலா தோன்றினர்? உன்னிடத்தில் எப்படி அருவிகள் அணைந்தன? வண்டு கள் சூழ்ந்தன? மயில்கள் வந்தன? குயில்கள் கூடின? நீ இசை அரங்கா? மக்கள் உன்னை நாடி வருவானேன்? உன்னிடத்தில் வந்து உலவும் காற்று ஏதேனும் தனி இயல்பு பெறுகிறதா? உன் மீது பொழியும் ஒளிக்கு ஏதேனும் தனிச் சிறப்பு உண்டா? என்று கேட்பேன் மலை எளிதில் வாய் திறக்குமோ? மலையை முன்ன முன்ன வாய்மை தவழும்.

பறவைகள் பாடுகின்றன; ஆடுகின்றன பாம்புகள் நடமாடுகின்றன. விலங்குகள் உலவுகின்றன. வண்டுகாள்!

உங்களிடை பாட்டு எப்படி அமைந்தது? மயில்காள்! உங்களிடம் நடம் எங்ஙனம் புகுந்தது? குயில்காள்! நீங்கள் இனிய குரலை எங்கிருந்து பெற்றீர்கள்! பாம்பே! நல்ல பாம்பே! உன் படம் அழகாய் இருக்கிறதே! உன்னிடம் நஞ்சு இருப்பது உண்மையா? மானே! உன் விழியில் ஏன் மருட்சி திகழ்கிறது! புலியே! அருகே வா! உன்னைக் கண்டு உயிர்கள் ஏன் அஞ்சுகின்றன? இவைகளில் நெஞ்சம் ஒன்ற ஒன்ற பொருண்மை வெளியாகும்.

பருவ நல்லாள் எதிர் தோன்றுகிறாள். 'கார் கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்' ஆகிய அறு வகையாக ஏன் பிரிந்து நிற்கிறாய்? அங்ஙனம் நீ பிரியாவிடின் உலகம் நடை பெறாதோ? என்றதும், 'என்னை நினைப்பாயாக' என்னும் ஒலி எழுகிறது. நினைக்க நினைக்க நினைக்க உண்மை உதிக்கும்.

மேகங்கள் உருண்டு திரண்டு ஓடிவருகின்றன. அவைகளைக் கண்டு மேகங்களே! உங்கட்குச் சூல் எப்படி உண்டாகிறது? நீங்கள் ஏன் ஒன்றோடொன்று முட்டிக்கொள்கிறீர்கள்? மின்னுகிறீர்கள்? உருமுகிறீர்கள்?' என்று கேட்டதும் அவைகள் மழை பொழிகின்றன. மழை நுட்பத்தை உணர்த்தும்.

பெண் உலகு காட்சியளிக்கிறது. அளித்ததும், பெண் அணங்கே! இயற்கைக் கூறுகள் நீயாகி நிற்ப தென்னை! அவைகள் எப்படி நீயாகப் பரிணமித்தன! இயற்கை அழகெல்லாம் உன்னிடத்தில் பொலிவதென்ன? நீ பெண்ணா? அழகா? உன்பால் தாய்மை அமைவானேன்?" என்னும் ஐயப்பாடுகள் என்னுள் எழுகின்றன. பெண் தெய்வம் புன்னகை புரிகிறது. அந்நகை ஐயப்பாடுகளையும் களையும்.

பெண் தெய்வத்தின் அருகே அழகிய குழந்தை நிற்கிறது. அதை அணைத்து 'கடவுள் நிலை உன்னிடத்தில் திகழ்கிற தென்று அறிஞர் கூறுவதன் நுட்பமென்னை என்று கேட்க வாயெடுத்தும், அது சிறு கை நீட்டுகிறது. 'நீ என்னைப்

போல் ஆகிப்பார்; உண்மை விளங்கும்' என்பது கை நீட்டியதன் பொருள் என்று கொள்வேன்.

(வாழ்க்கைக் குறிப்புக்கள்)

வெங்கதிரும் தண்மதியும்
வேலவ !நின் கோயில்
வேலைமலை காடுவயல்
வெண்மணல்நின் கோயில்
பொங்கருவி ஓடைகளும்
பூக்களுநின் கோயில்
பொன்வண்டு பொலிபறவை
ஆன்மாநின் கோயில்
மங்கையரும் குழவிகளும்
மகிழ்தருநின் கோயில்
மாண்கலைகள் ஓவியமும்
மறைகளுநின் கோயில்
இங்கடியேன் உளங்கோயில்
கொள்ளஇசை யாயோ
ஏழைமகன் உய்யஅருள்
இயற்கைஇறை யோனே.

(முருகன் அருள் வேட்டல், பொது)

காடும் மலையும் ஓடும் யாறும்
பாடும் காற்றும் ஆடும் முகிலும்
சூழ்ந்த இயற்கை ஆழ்ந்த இடத்தில்
ஒருமரம் அடைந்து திருவடி நிழலில்
அமர்ந்து பார்க்க அமைதி கூடும்
இயற்கையை உள்ளுக. இயற்கையில் படிக
இயற்கையில் மூழ்க. இயற்கையில் ஆழ்க
இயற்கையே ஆக இயங்கும் பரமே.

(வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல்)

T. P. M. LIBRARY
MADURAI-625 021.
000 263276